# திட்டம்

மாத இதழ்

மலர் 48
இதழ் 7

மார்ச் 2017
பல்குண - சைத்ர 1938-39



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ.இளங்கோவன்**



**கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.**

**திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.**



**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

**உதவி இயக்குநர்**
**திட்டம்**
**சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை**
**சென்னை -600 006.**
**தொலைபேசி : 2827 2382**



- 2016-17ன் பொருளாதார அறிக்கையின்படி இந்திய பொருளாதாரம் எப்படி உள்ளது ஒரு ஆய்வு
  - ரவீந்திர H. தொலாக்கிய,
- மத்திய பட்ஜெட்: வேலைவாய்ப்பிலும் தொழில்துறை வளர்ச்சியிலும் ஏற்படுத்தும் உணர்வு
  - அரூப் மித்ரா,
- புதிய வடிவில் இந்திய ரயில்வே பட்ஜெட்
  - அருணேந்திர குமார்,
- மத்திய பட்ஜெட் 2017-18 ரயில்வே தவிர்த்து பிற உள்கட்டமைப்புப் பிரிவுகளுக்கான ஒதுக்கீடு (திட்டக்குழு யோசனையின்படி).
  - கட்டுரையாளர்: கிருஷ்ணதேவ்,
- 2017-18 மத்திய பட்ஜெட் : விருந்தினர் பகுப்பாய்வு
  - N.R. பானுமூர்த்தி - A. ஸ்ரீஹரிநாயுடு,
- நடைமுறை சாத்தியம் கொண்டுள்ள மத்திய பட்ஜெட் 2017
  - பேராசிரியர் சரண்சிங்,
- பட்ஜெட் 2017 கட்டுமானத்துறையை மாற்றியமைக்க வாய்ப்புகள்
  - Dr. ரஞ்சித் மேத்தா,
- இளைஞர்களுக்கான பட்ஜெட்
  - டாக்டர் எஸ்.எஸ்.மந்தா,
- நிதிநிலை அறிக்கையில் புதிய மாற்றங்கள்: கட்டமைப்பு மற்றும் நடைமுறை
  - ஹப்பி பந்த்,
- வேளாண்மைக்கு பெரும் ஊக்கம் தரும் மத்திய பட்ஜெட் 2017-18
  - லட்சுமி ஜோஷி மற்றும் வி.பி. அஹுஜா,
- புதிய வளர்ச்சி மாதிரி விவசாயத்துறை, கிராமப்புற இந்தியா பெரும் புகழ் நோக்கிப் பயணம்
  - நிரேந்திர தேவ்,
- 2017-18 பட்ஜெட்டின் சிறப்பம்சங்கள்
  - D.S. மாலிக்,
- 2017-2018 ஆம் ஆண்டு சுகாதார பட்ஜெட்டில் ஆரோக்கியமான வளர்ச்சி
  - ராஜீவ் அஹுஜா,
- மத்திய பட்ஜெட் 20172018 ஒரு பார்வை
  - முனைவர் கா. செல்வகுமார்,



Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

# 2016-17ன் பொருளாதார அறிக்கையின்படி இந்திய பொருளாதாரம் எப்படி உள்ளது ஒரு ஆய்வு

- ரவீந்திர H. தொலாக்கிய,

பொருளாதார பேராசிரியர், ஐஐஆஇ அகமதாபாத்

நாடாளுமன்றத்தில் ஜனவரி 31 2017 அன்று சமர்ப்பிக்கப்பட்ட 2016-17 ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை, இந்தியப் பொருளாதாரம் கடந்த சில ஆண்டுகளில் செயல்பட்டுள்ள விதத்தையும் சமீபகால நிகழ்வுகளையும் பிரதிபலிக்கிறது. அதில், சிக்கல்கள் மற்றும் சவால்கள் ஆராயப்பட்டு பரவலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிந்து கொள்ளும்படியான சான்றுகளை முன்வைத்து, அவற்றைப் போக்க சில தீர்வுகளையும், இனி இந்திய பொருளாதாரம் எப்படி இருக்கும் என்ற நிலைமையையும் விளக்குகிறது. இது அரசு அலுவலர்கள், ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்களின் மாபெரும் படைப்பாகும். இந்த ஆண்டு கடந்த ஆண்டுகளைப்போல அல்லாமல், இந்த ஆய்வறிக்கை ஒரு தொகுப்பாக மட்டும் வெளி வந்துள்ளது. 2016-17ஆம் ஆண்டிற்கான விவரமான பொருளாதாரத்தின் செயல்பாடுகளின் விவரமான ஆய்வு தனித் தொகுப்பாக பிறகு வெளியிடப்படும். இந்த ஆய்வறிக்கையில் இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை வலிமைகள் நிலைமைகள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவைகளைப் பற்றிய பல ஆய்வுகள் விளக்கங்கள் ஊடகங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள், அரசுத்துறை மற்றும் ஆய்வு நிறுவனங்கள் மேற்கொண்ட கணிப்புகள் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். இந்த நான்கு தலைப்புகளின் கீழும் உள்ள முக்கிய சிறப்பு அம்சங்களை இந்தக் கட்டுரை விளக்குகிறது.

**வலிமைகள்**

1. உலகளாவிய பொருளாதார மந்த நிலைமை மற்றும் வேகக்குறைவு உள்ள நிலையில் இந்தியப் பொருளாதாரம், ஒட்டுமொத்த செயல்பாடுகளின் காரணமாக பிரகாசமாகவே காணப்படுகிறது. 2016-17 ஆண்டு காலத்தில் வளர்ச்சி விகிதம் 6.5லிருந்து 7.75ஆக இருக்கும் என்று ஆய்வு கணிக்கும் நிலையில் நிதிக்கொள்கைகள் குழு இது 7 சதவிகிதமாக இருக்கும் என்றும், உலகத்திலேயே வேகமாக வளரும் ஒரு பெரிய பொருளாதாரமாக இந்தியா இருக்கும் என்று கூறுகிறது. விலை ஏற்ற விகிதம் 4லிருந்து 5 சதவிகிதமாக உள்ளது. குறைந்தும் வருகிறது. ஏற்றுமதி, இறக்குமதிப் பற்றாக்குறை நாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது. டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பும் ஓரளவு நிலையாக உள்ளது. வெளிநாட்டுக்கடன் ஆபத்து, எல்லைக்குள் உள்ளது. கட்டுப்பாடுகள் தளராமல் உள்ளன. மின்சார விலை சீர்திருத்த உஜ்வல் திட்டம் மற்றும் பிற கொள்கைகள் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
2. நேரடி அந்நிய முதலீடு கொள்கையில் இந்தியா பல சீர்திருத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளதை அடுத்து நேரடி அந்நிய முதலீடு பெருமளவு வந்துள்ளது. உள்நாட்டு மொத்த உற்பத்தியில் அது 2015-16ல் 1.7 சதவிகிதமாக இருந்தது. 2016-17 மத்தியில் அது 3.2 சதவிகிதமாக இருந்தது. டிசம்பர் 2016 வாக்கில் அந்நிய செலாவணி கையிருப்பு டாலர் 360 பில்லியனாக உயர்ந்துள்ளது. தேவையான அளவைவிட இது கூடுதல்.
3. மொத்த விலை குறியீட்டு எண்ணுக்கும், நுகர்வோர் விலை குறியீட்டு எண்ணுக்கும் இருந்த மிகப்பெரிய இடைவெளி 2015-16ஆம் ஆண்டுகளில் குறைந்து காணப்பட்டு விலைவாசிகளும் நிலைத்துள்ளன. உள்நாட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதமும் அதிகரித்து அதனால் அரசு வருவாய் வளர்ச்சியும் அதிகரித்துள்ளது.
4. உயர்மதிப்பு ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டது, ஊழல் குறைப்பு, ஒவ்வொரு குடும்பம் சேமிக்கும் தொகை அதிகரிப்பு மற்றும் அதிக மக்களை வரி வட்டத்துக்குள் கொண்டுவருவது ஆகிய வகைகளில் நீண்டகால பலன்களை அளிக்கும்.
5. பொருள் மற்றும் சேவை வரி சட்டம், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அதனை செயல்படுத்துவதால் நாடெங்கிலும்

பொதுவான சந்தை அமைப்பு ஏற்படும், மக்கள் வரிகளை அளிப்பது சீரடையும். அதிக முதலீடும் வளர்ச்சியும் ஏற்படும். சிறந்த நிர்வாக செயல்பாடுகளும் ஏற்படும்.

6. இந்தியாவிற்கு முதலீடு வருவது அதிகரித்த நிலையிலும், விலைவாசி உயர்ந்து இருந்தபோதும், உலகளாவிய பொருள் உற்பத்தி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு உயர்ந்து கொண்டே வருகிறது.

7. இந்தியாவிற்குள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு செல்லும் பொருள்களின் மதிப்பு உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 54 சதவிகிதமாகும், அல்லது மொத்த வெளிநாட்டு வர்த்தகத்தைக் காட்டிலும் 1.7 மடங்கு அதிகம். அதைப்போலவே, வேலை காரணமாக இடம் விட்டு இடம் செல்வோரின் எண்ணிக்கையும் மிகுந்து கொண்டே வருகிறது.

8. பருவ மாற்று சீரழிவை குறைக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் இந்தியா, பெட்ரோலிய பொருட்கள் மீது, வரி விதித்து மற்ற நாடுகளைவிட சிறப்பாக பணியாற்றியுள்ளது.

9. இந்தியாவைப் போன்று மற்ற நாடுகளை ஒப்பிடும் போது, நம்முடைய ஜனத்தொகை ஒரு சாதகமான நிலைமையாகும். பல பெரிய நாடுகளில் ஜனத்தொகை நிலைமையை ஆராயும் போது, மற்ற நாடுகளைவிட இன்னும் நாம் உயரக்கூடிய வாய்ப்பு உள்ளது.

10. ஜனதன் யோஜனா, ஆதார் அட்டைகள் மற்றும் கைப்பேசி வாயிலாக இந்தியாவிலுள்ள மூலை முடுக்கிலுள்ள பெருமளவிலான மக்களை அணுகுவதற்கு வேண்டிய மிகப்பெரிய உள் கட்டமைப்பு தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

11. கடந்த பல ஆண்டுகளாக, இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் ஆயுள் காலமும் மக்களின் குழந்தை பிறப்பு விகிதமும் மிகச்சிறந்த நிலையில் உள்ளன.

12. அனைத்து பலங்களையும் பார்க்கும்போது அடுத்த சில ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் 8 லிருந்து 10 சதவிகிதம் வரை உயர வாய்ப்புள்ளது.

நம்மைப்போன்ற மற்ற நாடுகளை ஒப்பிடும்போது இந்தியாவில் முதலிடப்படும் தொகைக்கு மிகச் சிறந்த லாபங்கள் கிடைக்கும். இந்த ஆய்வறிக்கை இந்திய பொருளாதாரத்தின் ஒரு முக்கியமான வலிமையை விட்டுவிட்டது. இந்தியாவில் எல்லா மட்டங்களிலும் ஜனநாயமும், நன்றாக வளர்ந்துள்ள அமைப்புகளும் ஆளுமையில் பெரும்பான்மையான மக்கள் பங்கேற்பும் அதன் அடிப்படையில் முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அம்சம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும்.

**பலவீனங்கள்**

1. இந்தியப் பொருளாதாரத்தின் ஒரு பெரிய பலவீனம் வருமானம் மற்றும் சொத்துக்களை எப்படி மக்களிடையே பிரித்து அளிப்பது, மக்களின் சேவைகளை பூர்த்தி செய்வதற்கு எப்படி திறமைகளை உருவாக்குவது, சந்தைசார் நடைமுறைகள், சொத்துரிமைகள், தனியார் துறையின் பங்கு ஆகியவற்றில் குழப்பமான மக்கள் எண்ணம் இருப்பதே. இதனோடு, சில தனிப்பட்ட விருப்பங்களும் சேர்ந்து தேவையான சமூக, அரசியல் சுற்றுசூழலை பாதித்து இந்தியா தன்னுடைய முழு பொருளாதார வலிமையை நிறைவு கொள்ள தடையாக உள்ளது.

2. மத்திய, மாநில அரசுகளின் மறு பகிர்ந்தளிப்பு கொள்கைகள் பல இருந்தாலும் இலக்குகள் சரியாக இல்லை. தற்போது, செயல்படுத்தப்பட உள்ள பொருள்கள் மற்றும் சேவை வரி, முழுமையான வடிவம் பெறாமலும், செயல்படுத்தும் முறைகள் மிகவும் சிக்கலாகவும் உள்ளன.

3. பொதுத்துறை, தனியார் துறை ஆகியவற்றின் பங்கு பற்றிய கொள்கை சார்ந்த குழப்பங்களினால், தேவையற்ற தாமதங்களும் முதலாளிகள் தேவைக்கு ஏற்ப தொழிலாளிகளை வேலை நீக்கம் செய்வது, பொதுத்துறையை தனியார் மயமாக்குவது, சிக்கலான கொள்கை முடிவுகளை மேற்கொள்வது, சொத்துரிமையை பாதுகாப்பது போன்ற நிலைமைகளில் குழப்பங்கள் நீடிக்கின்றன.

4. பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் பல இருந்தாலும், சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகளில் எந்த ஒரு மாநிலத்திலும் மற்றவர்கள் பின்பற்றக்கூடிய நல்ல செயல்பாடு

இல்லை. இந்த இரண்டு சேவைகள் சிறப்பாக செயல்படாதது, ஒரு பெரிய பலவீனமாகும்.

5. தனியார் முதலீடு மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது. ஏற்றுமதி அளவுகளும் முன்பு போல அதிக விகிதாச்சாரத்தில் வளரவில்லை. இவை இரண்டும், வளர்ச்சியின் முக்கிய அம்சங்கள். ஆனால், இவையிரண்டும் தளர்ச்சியடைந்துள்ளன.

6. தனியார் நிறுவனங்களும், வணிக வங்கிகளும் நலிவடைந்து அது அவர்களுடைய ஆண்டுக்கணக்கில் வெளிப்படையாகத் தெரிகிறது. வாங்கிய கடனை திருப்பி கட்ட இயலாத நிறுவனங்கள் மேற்கொண்டு முதலிட முடியவில்லை. வாராக் கடன்கள் அதிகரித்த நிலையில், வங்கிகளும் மேலும் கடன் கொடுக்க முடியாத நிலையில் உள்ளன.

7. மத்திய அரசின் வரி அல்லாத வருமானங்கள் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியவில்லை. அலைவரிசை விற்பனை, பொதுத்துறை பங்குகள் விற்பனை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து அரசுக்குக் கிடைக்க வேண்டிய ஈவுத்தொகை ஆகியவை, இலக்கை மிகக் குறைவாகவே உள்ளன. அடுத்த சில ஆண்டுகளில் அவை உயர வாய்ப்பில்லை.

8. மாநில அரசுகளின் பட்ஜெட்டுகளில் விழும் துண்டு அதிகரித்துக் கொண்டே போகிறது. அதற்கு முக்கிய காரணம் உதய் ஒளிதிட்டம் செயல்திட்டத்தை செயல்படுத்துவதாகும். இந்த ஆண்டு முதல் நிலைமை சீராக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு மாநில அரசுகளின் கடன் பத்திரங்களின் வட்டிகள் உயர்ந்து கொண்டே போகிறது.

9. மத்திய, மாநில அரசுகள், உள்நாட்டு மொத்த உற்பத்திக்கு எதிராக இருக்கும் கடன் நிலைமையை குறைத்துக்கொள்ள வருவாய் பற்றாக்குறையை குறைத்துக் கொள்ளாமல் வருமானம் உயரும் என்ற கொள்கையை கடைப்பிடிப்பது, விரும்பிய விளைவுகளை ஏற்படுத்தவில்லை.

10. பொது நிதி பரவலாக எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதால், ஏழைகள் மிகுந்த பகுதிக்கு போதிய நிதி கிடைப்பதில்லை.

11. இந்தியாவின் ஜனத்தொகையின் வேலை செய்பவர்களின் வயதுக்கும், வேலை செய்யாதவர்களின் சராசரி வயதுக்கும் உள்ள வித்தியாசம் 2020ம் ஆண்டு வாக்கில் 1.7ஆக உயரும். இந்தியாவில் ஜனத்தொகை அதிகமாக இருந்தும் அதனால் பலன் கிடைக்கவில்லை. ஆனாலும், மற்ற சக நாடுகளை விட இந்தியாவின் நிலைமை சற்று, ஆறுதலாகும்.

12. கடந்த சில ஆண்டுகளாக முதலிடும் தொகையும் சேமிப்பு விகிதங்களும் குறைந்து கொண்டே வருகிறது.

13. மாநிலங்களுக்கிடையே வருமான மற்றும் நுகர்வு ஏற்றத் தாழ்வுகள் வளர்ந்து கொண்டே போகிறது.

**வாய்ப்புகள் :**

1. நிறுவனங்கள், திவாலாகும் நேரத்தில் தொழிற்கூடங்களை மூடும் வகையில் சட்டங்கள் திருத்தப்பட்டு முடக்கப்பட்ட வளங்கள் விடுவிக்கப்படும்.

2. எல்லோரையும் உள்ளடக்கிய நிலைமையையும், சம நிலையையும் பெற ஆதார் அட்டைகளின் சட்ட அடிப்படையை வலுப்படுத்தி பலதரப்பட்ட அரசு திட்டங்களை செயல்படுத்த மின்னணு பண பரிவர்த்தனையை ஊக்குவிக்க வேண்டும்.

3. போட்டிமிக்க மற்றும் கூட்டுறவுத் தன்மை கொண்ட கூட்டாட்சியில், திறன், முதலீடு மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை ஈர்ப்பதில் நல்ல வாய்ப்பு உள்ளது.

4. பல ஆண்டுகளுக்குப்பின் நாடாளு மன்றத்தில் அரசுக்கு நல்ல பெரும்பான்மை இருப்பதாலும், உயர் மதிப்பு நோட்டுகள் முடக்கத்திற்குப்பின் இன்னும் செயல்படுத்த வேண்டிய அடிப்படை சீர்திருத்தங்களை உறுதியான அரசியல் கோட்பாடோடு செயல்படுத்த நல்ல வாய்ப்புகள் உள்ளன.

5. அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகளினால் அமெரிக்க டாலர் வலுப்பெற்று, அதனால் சீனப் பொருளாதாரம் ஏற்றுமதிகளை குறைத்துக் கொண்டு, உள்ளூர் மக்களுக்கு வியாபாரம் செய்யக்கூடும். இதனால், இந்தியாவுக்கும் உலக மற்ற நாடுகளுக்கும் பயன்கள் கிடைக்கும். சீனா

விட்டுக்கொடுத்த இடத்தை நிரப்ப மற்ற நாடுகளிடையே கடும் போட்டி நிலவும்.

6. அமெரிக்கா, ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகளில் வளர்ச்சி விகிதம் மேம்பட்டுள்ளதால் அந்நாடுகளுக்கு இந்தியாவின் ஏற்றுமதி உயரக்கூடும்.

7. பிரிட்டன், ஐரோப்பிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறியபின் இந்தியா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்புடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு, பணியாளர் மிகு ஏற்றுமதிகளை மேற்கொள்ள வாய்ப்புகள் உண்டு.

8. வட்டார வர்த்தக ஒப்பந்தங்களை அமெரிக்கா எதிர்ப்பதால், உலக வர்த்தக அமைப்பு மற்றும் பன்னாட்டு வர்த்தக ஒப்பந்தங்கள் செயலிழந்து அதனால் இந்தியாவின் வாய்ப்பு அதிகரிக்கலாம்.

9. இந்தியாவின் பெரிய மாநிலங்களுக் கிடையேயான ஜனத்தொகை மக்கட் பிரிவில் பெரிய வித்தியாசங்கள் உள்ளன. ஒரு பக்கம், மேற்கு வங்கம், ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, கேரளம் மற்றும் கர்நாடகம் மற்றவை மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்திரபிரதேசம் மற்றும் பிகார். முதல் பிரிவில் முதியோர் அதிகமாக உள்ளனர். இரண்டாவது பிரிவில், இளைஞர்கள் அதிகமாக உள்ளனர். ஆகவே, ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மக்கள் செல்வது, அதிகரித்து அதனால் வளர்ச்சியும் நலன்களும் பெருகும்.

10. முதலாவது கூறப்பட்ட மாநிலங்களில் வயது முதிர்ந்தோரின் எண்ணிக்கை 2020ல் மிகவும் அதிகமாகி, அதனால், பணியாளர்களின் சிரமம் அதிகமாக இருக்கும். இரண்டாவதாக கூறப்பட்ட மாநிலங்களில் இந்த நிலைமை 2040ல்தான் ஏற்படும். ஆகவே, இந்தியாவிற்கு, 2040வரை மற்ற நாடுகளைவிட நல்ல வாய்ப்புகள் உள்ளன. இதனால், வளர்ச்சி பெறாத மாநிலங்கள், வளர்ச்சி பெற்ற மாநிலங்களுக்கு இணையாகவும் உயர வாய்ப்புள்ளது. ஆகவே, இதற்கு ஏற்ப பொருளாதார கொள்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

11. பொதுத்துறை சொத்துக்கள் சீரமைப்பு வாரியம் ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. அவைகளின் லாப, நஷ்ட நிலைமைகளை கருத்தில் கொண்டு கடுமையான முடிவுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**ஆபத்துக்கள்**

1. நாடுகளின் அன்றைய பொருளாதார நிலைமையை கணித்து அதற்குண்டான தரவரிசையை நிர்ணயிப்பதில் பன்னாட்டு தர நிர்ணய அமைப்புகள் பாரபட்சம் காட்டி வருகின்றன. கடந்த ஏழு ஆண்டுகளாக இந்தியாவின் அடிப்படை பொருளாதார நிலைமைகள், மிகவும் மேம்பட்டு வந்தாலும் அதற்கேற்ப இந்தியாவின் தர நிலைமை உயர்த்தப்படவில்லை. இதனால், இந்தியாவிற்கு வரவேண்டிய முதலீடுகள் பாதிக்கப்படலாம்.

2. கூட்டாட்சி ஜனநாயகத்தில் மக்களுக்கு சலுகையை அளித்து கவர நினைக்கும் அரசுகளின் போக்குகளினால், ஆளுமை தரங்கள் பாதிக்கப்படலாம்.

3. அரசு ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் உதய் ஒளிப் பத்திரங்களினால் மாநில அரசுகளின் நிதிநிலை கட்டுப்பாடுகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளன.

4. உலகளாவிய அரசியல் மற்றும் பிற சூழ்நிலைகளில் ஒவ்வொரு நாடும் தங்களுடைய பொருளாதாரங்களை பாதுகாத்துக்கொள்ளும் நடவடிக்கையில் செல்கின்றன. வளர்ச்சியடைந்த நாடுகள் பொருள்கள், சேவைகள் மற்றும் பணியாளர்கள் துறையில் உலகமயமாக்கலுக்கு எதிராக உள்ளன. இதனால், இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சி 15லிருந்து 20 சதவிகிதம் வரை இருக்கும் என்று எதிர்பார்த்த நிலையில் பாதிப்பு ஏற்பட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 8 முதல் 10 சதவிகிதம் இருக்கும் என்று எதிர்பார்த்த நிலை பாதிக்கப்படலாம்.

5. பெட்ரோலிய பொருட்கள் மற்றும் அடிப்படை பொருட்களின் விலைகள் உலகளவில் உயர்ந்து வருகின்றன. ஆனால், எண்ணெய் உற்பத்தியில் பிரச்சினைகள் ஏற்படக் கூடுவது பற்றியும் அமெரிக்காவில் கடலோரப் பகுதிகளில் எண்ணெய் உற்பத்தி நிலைமைகள் தெளிவாக இல்லாத நிலையிலும் எண்ணெய் விலைப் பற்றிய சீரான மதிப்பீடு இந்த பொருளாதார அறிக்கையில் இல்லை.

6. அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சமீப கால நிகழ்வுகளால் வளர்ந்த நாடுகளில் உலகளாவிய வட்டி விகிதங்களும், விலைவாசி உயர்வுகளும் அதிகரிக்க வாய்ப்புள்ளன. இதனால், இந்தியாவிற்குள் வெளிநாட்டு மூலதனம் வருவதும், போவதிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு முதலீடுகள்சார் சூழ்நிலை பாதிக்கப்படலாம்.

7. அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சமீப கால நிகழ்வுகளால், டாலரின் மதிப்பு உயர்ந்து, சீனாவின் யுவான் மதிப்புக் குறைந்தால் சீனாவிற்கு பெரிய பின்னடைவு ஏற்பட்டு அதனால், இந்திய வர்த்தக மற்றும் முதலீடு நிலைமைகளில் பாதகமான விளைவுகள் ஏற்படலாம். அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் ஏற்படக்கூடிய வர்த்தகப் போரால் உலகப் பொருளாதாரம் பாதிக்கப்படலாம்.

8. கடந்த ஆறு ஆண்டு காலமாக உலகளவில் உள்நாட்டு மொத்த உற்பத்திக்கும், ஏற்றுமதிகளுக்கும் இடையே இருந்த விகிதாச்சாரம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. இந்த மோசமான சூழ்நிலையில் உலக வர்த்தகத்தில் இந்தியாவின் ஏற்றுமதி விகிதாச்சாரத்தை உயர்த்துவது மிகக்கடினமான செயலாகும்.

9. புதிதாக வளர்ந்து வரும் நாடுகளான வியட்நாம், வங்க தேசம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளால் உலகச் சந்தையில் இந்தியாவின் போட்டித்திறன் பாதித்துள்ளது. இந்தியாவின் பல ஏற்றுமதி பொருட்கள் மற்றும் சேவைகளில் இந்நாடுகள் கடுமையான போட்டி அளித்துவருகின்றன.

10. ஜனவரி 2014லிருந்து அக்டோபர் 2016 வரையிலான கால கட்டத்தில், மற்ற நாடுகளின் பணத்திற்கு எதிரான இந்தியாவின் ரூபாயின் மதிப்பு உயர்ந்துள்ளதால் இந்தியாவின் ஏற்றுமதியில் பாதிப்பு ஏற்படுகிறது. இந்த ரூபாயின் மதிப்பு உயர்வு 19.4 சதவிகிதம் என்று பன்னாட்டு நிதி அமைப்பும், 12 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என்று இந்திய ரிசர்வ் வங்கியும், 8.3 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என்று ஆய்வறிக்கையும் கூறுகிறது. இந்த வித்தியாசத்திற்கு முக்கிய காரணம் ஒவ்வொருவரும் கணிக்கும் தொகுப்பில் எந்தெந்த நாடுகளின் பணம் இருக்கிறது என்ற அடிப்படைதான் காரணம். மூன்று மதிப்பீடுகளுக்கிடையே, மாறுதல்கள் இருந்தாலும் பொதுவாக, இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்துள்ளதால் இந்தியாவின் ஏற்றுமதி பொருட்களுக்கு உலகளவில் போட்டித்தன்மை ஏற்பட்டுள்ளது.

11. இந்தியாவின் மக்கட்தொகையில் இன்னும் இளைஞர்கள் அதிகமாக உள்ளதால், நிலைமை 2020வரை நமக்கு சாதகமாக இருக்கும். சீனா, பிரேசிலுக்கு இந்த சாதகமான நிலைமை இல்லை.

2016-17ல் இந்திய பொருளாதார ஆய்வில் இந்திய பொருளாதாரத்தின் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் ஆபத்துக்கள் விரிவாக ஆராயப்பட்டு இருக்கும் சவால்களையும், பலவீனங்களையும் எதிர்கொள்ள குறிப்பிட்ட சீர்திருத்தங்கள் மற்றும் செயல்முறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஆய்வறிக்கையில் அடிப்படை தகவல்களை ஆராய்ந்து அளித்திருக்கப்படும் முடிவுகள் பற்றியும் பலங்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய மதிப்பீடுகள் பற்றி சில மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். உதாரணமாக, ஆய்வறிக்கையில் “இந்தியாவில் வேலைவாய்ப்பு காரணமாக பெருமளவிலான மக்கள் இடம் விட்டு இடம் பெயர்கிறார்கள்.” என்று குறிப்பிட்டிருந்த நிலையில் நடைமுறையில் பார்க்கும் போது, டெல்லி மகாராஷ்டிரம், தமிழ்நாடு மற்றும் கோவா மாநிலங்களுக்கு மட்டும் வரும் வேற்று மாநில பணியாளர்கள் 66 சதவிகிதமாக இருப்பதாகவும், உத்திரபிரதேசம், பீகார், ஜார்கண்ட் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களிலிருந்து வேலைக்காக வெளியேறும் மக்களின் சதவிகதம் 66 சதவிகிதமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. மற்ற பிற மாநிலங்களிலிருந்து, பணியாளர்கள் வெளி மாநிலங்களுக்கு செல்வதும், பிற மாநில பணியாளர்கள் இந்த மாநிலங்களுக்கு வருவதும் மிகக் குறைவே. இந்த மாநிலங்களில் பணியாளர்களின் போக்குவரத்து மிகவும் குறைவே. இதைப்போலவே, பொருள்கள் மற்றும் நிதி போக்குவரத்திலும் காணப்படுகிறது. ஆகவே, நுகர்வு மற்றும் வருமானம் சம்மந்தமாக, நாட்டில் இருக்கும் நிலைமையை எந்த அதிசய நிலைமையும் இல்லை. அடிப்படை தகவல்களை சரியாக சரியாக ஆராயப்படாததால் ஏற்பட்ட விளைவுகளே இவை. இப்படிப்பட்ட சில குறைபாடுகளைத் தவிர ஆய்வறிக்கை மிகச்சிறப்பாக உள்ளது.

•

# மத்திய பட்ஜெட்: வேலைவாய்ப்பிலும் தொழில்துறை வளர்ச்சியிலும் ஏற்படுத்தும் உணர்வு

- அரூப் மித்ரா,
பேராசிரியர், பொருளாதார வளர்ச்சி நிறுவனம், புதுதில்லி.

எந்த ஓர் அரசு ஆனாலும் அதன் முக்கிய நோக்கங்களில், தொழில்துறை வளர்ச்சியும் வேலைவாய்ப்பு உருவாக்கமும் முதலிடம் பெறும். இந்தியாவானாலும் அல்லது பிற எந்த வளரும் நாடானாலும், தமது தொழில் துறைக்கும் புத்துயிர்ப்பு அளித்தே ஆக வேண்டும். ஏனெனில், திறன் பயிற்சி அற்ற மற்றும் ஓரளவுக்கு மட்டும் திறன் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு சேவைத் துறையில் மட்டும் திறன்மிக்க வேலை வாய்ப்புகளை வழங்கிவிட முடியாது. விவசாயத் துறையிலோ, முழுமையான வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. மொத்த உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித் திறன் வளர்ச்சியைத் தொழில் துறையில்தான் கணிசமாக உயர்த்த முடியும். இடுபொருள் சாராத உற்பத்திப் பெருக்கத்தை தொழில்நுட்ப முன்னேற்றத்தால் எட்ட முடியும். தொழில்நுட்பம் புத்தாக்க முயற்சிகளை உற்பத்தித் துறையில் மேற்கொள்ள அதிக அளவு முதலீடு தேவைப்படும் என்றாலும், சமீபத்திய ஆய்வுகளின் படி (Vivarelli 2013) வேறு விதங்களிலும் வேலைவாய்ப்புகளைப் பெருக்க முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தயாரிப்புப் பொருள்களில் மாற்றம், புதிய பொருள்களைத் தயாரித்தல் ஆகியவற்றிற்காகப் புதிய தொழிநுட்பங்களைக் கைக்கொண்டால், வேலை வாய்ப்புக் கணிசமாகப் பெருகும். எனவே வேலைவாய்ப்புப் பெருக்கமும் உற்பத்தித்திறன் பெருக்கமும் ஒரு சேர நடைபெறுவதுடன், இரண்டுக்கும் இடையே எவ்வித முரண்டபாடும் எழாது. இந்தக் கோட்பாட்டின் பின்னணியில், 2017-18 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் ஏற்படுத்தக் கூடிய குறுகிய கால பாதிப்புகள் மற்றும் அவற்றால் நேரிடும் நீண்டகால இலக்குகளை எட்டும் வாய்ப்புகள் பற்றி துரிதப்பாவை மேற்கொள்வது இங்கே முக்கியமானதாகும்.

### பணமதிப்பு நீக்க விளைவுகள்

அண்மையில் தான் பணமதிப்பு நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனால் குறுகிய காலத்தில் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும், அதன் விளைவாக வேலைவாய்ப்பும் சுருங்கும் என்று பலரும் அஞ்சினர். நகர்ப்புறங்களில் உள்ள வேளாண்மை சாராத முதலீடும், வளர்ச்சியும் பெரிதும் பாதிக்கப்பட்டு நகர்ப்புற மக்களின் வேலைவாய்ப்பும் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முதலீடு, வளர்ச்சி, வேலைவாய்ப்பு ஆகியவை பெரிதும் பாதிக்கப்படும். ஆனாலும் பெரிய நிறுவனங்களும் முற்றிலுமாக இந்த அபாயங்களை எதிர் கொள்வதில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை மீறி தொழில் நடத்துவதற்கு ஊழல் வழியைப் பின்பற்றுவது உண்மைதான்.

முதலீடுகள் குறைவதால் ஏற்படும் முதலாவது எதிர்மறை விளைவு தொழிலாளர் களுக்கான தேவையைக் குறைத்துவிடுவது தான். இதற்குக் காரணம் உற்பத்திக்கான இடுபொருள்களில், மற்றவற்றை விடவும் தொழிலாளர்களே மிகவும் நீர்த்த நிலையில், எப்போது வேண்டுமானாலும் நீக்கிவிடக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். எனவே சந்தைப் பொருளாதாரம் சரிவடையும் போது, தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்குவதே மிகவும் எளிய வழியாக உள்ளது. விவசாயத் துறையும் அதிக அளவில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்க முடியாத நிலையில், கிராமப்புற வேலைவாய்ப்புகளும் சுருங்கிப் போகும். தினசரி பணப்பரிமாற்றம் தேவையுள்ள விவசாயம் அல்லாத கிராமப்புற வேலை வாய்ப்புகளில், பணமதிப்பு நீக்கம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால், அங்கும் வேலையிழப்புகள் மிகுந்துவிடும்.

ஆனால், இந்தக் கூற்றுகள் யாவும் சற்று மிகைப்படுத்தப்பட்டவையே. பரிவர்த்தனைகள் பலவாக இருந்தாலும் அவை யாவும் அடையாள அளவில் மட்டுமே உள்ளவை. மேலும் அவை கணிசமான கால இடைவெளியும் கொண்டவை. எனவே பொருளாதாரத்தின் தகவமைப்பு முறையினால், பணமதிப்புநீக்க நடவடிக்கையின் பாதிப்புகள் ஈடுகட்டப்பட்டுவிடும் என்பதே உண்மை. 1970களில் மத்திய அரசு வங்கிகளை நாட்டுடைமை ஆக்கியது போல, நீண்டகாலமாகச் செய்யப்படவேண்டிய தேவையான பணமதிப்புநீக்க நடவடிக்கை ஊசலாட்டத்தில் இருந்து வந்தது. அதனைத் திடீரென்று செய்துதான் ஆக வேண்டும். இல்லையென்றால் அதன் நோக்கம் நிறைவேறாது.

**வேலைவாய்ப்புப் பெருக்க நடவடிக்கைகள்**

பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் ஏற்படும் குறுகிய காலப்பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மத்திய பட்ஜெட்டில் மிக அதிகபட்ச நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற வேலைவாய்ப்புத் திட்டங்களினால் வருங்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் சமூகச் சொத்துக்கள் உருவாக்கப் படுவதில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு உள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக் களையும் விதமாக நிதியாண்டின் கடைசியில் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக, ஆண்டு முழுவதும் சீரான அளவில் நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதை உறுதிசெய்ய இந்த பட்ஜெட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில் சுமார் ஐந்து லட்சம் குளங்கள் புதிதாக உருவாக்கப்படும் என்ற அறிவிப்பை, வறட்சியை எதிர்கொள்ளும் திட்டமாகவும் அதே சமயத்தில் பாசன வசதிகள் திட்டமாகவும் கொண்டு மகாத்மா காந்தி வேலைவாய்ப்புத் திட்டத்துடன் இணைத்துவிட்டால், மிகவும் வெற்றிகரமான திட்டமாக அமைந்துவிடும். வேளாண் துறையும் வளர்ச்சி பெறும். 2017-18 ஆம் ஆண்டில் கிராமப்புற வளர்ச்சி, விவசாயம் மற்றும் அதன் சார்ந்த துறைகளுக்கான ஒதுக்கீடு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 24 சதவீதம் அதிகமாகும். ஊரகப்பகுதிகளின் வேலை இன்மைப் பிரச்சினை, வறுமை ஆகியவற்றைக் களைய தீவிரமாக அரசு செயல்படுகிறது என்பதையே இது காட்டுகிறது.

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்திற்கான கடன் உதவியும் மும்மடங்காக அதிகரிக்கப் பட்டுள்ளது. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம் (PMEGP) என்பது, ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கத்திட்டம் (REGP) மற்றும் பிரதம மந்திரி ரோஜ்கார் யோஜனா (PMRY) ஆகியவற்றை இணைத்த, மானியத்துடன் கூடிய கடன்உதவித் திட்டமாகும். குறு, சிறு, நடுத்தர தொழில்துறை அமைச்சகம் நிர்வகிக்கும் இந்தத் திட்டத்தை காதி-கிராமத் தொழில்கள் ஆணையகம் அமல்படுத்துகிறது. மாநிலங்களில் காதி-கிராமத் தொழில்கள் வாரியத்தின் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், சுயதொழில் முயற்சிகள், குறுந் தொழில்கள் போன்றவை மூலமாக கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே ஆகும். கிராமப்புறங்களில் பரம்பரையாக இருந்து வரும் கைவினைத் தொழில்களுக்கு ஆதரவு அளிப்பதும், வேறு வேலைகள் கிடைக்காத நகர்ப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதும் இத்திட்டத்தின் இரட்டைநோக்கங்கள் எனலாம். தொடர்ந்து வேலைவாய்ப்புகள் கிடைப்பதோடு, பயனாளிகளின் பொருளீட்டும் திறனும் இதனால் மேம்படும்.

**டிஜிடல் புரட்சியும் வேலைவாய்ப்புப் பெருக்கமும்:**

தேசிய அளவிலான டிஜிடல் பணப்பரிமாற்ற வளர்ச்சியை அடுத்து, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களும் டிஜிடல் பரிமாற்ற முறைகளைக் கைக்கொண்டால் வங்கிகளிடம் இருந்து எளிதாகக் கடன் வசதியைப் பெறமுடியும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. நம்நாட்டில் எண்ணற்ற சிறு-குறு தொழில்கள் இருந்தாலும், மதிப்புக் கூட்டுத் தயாரிப்புகளில் அவற்றின் பங்கு மிகவும் சொற்பமாகவே உள்ளது. பதிவு செய்யப்படாத உற்பத்தி நிறுவனங்களின் பங்கு மொத்த உற்பத்தியில் சுமார் மூன்றில் ஒரு பங்காகவே உள்ளது. பெரிய தொழில் நிறுவனங்களால் மட்டுமே உபரியாக உள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க இயலாது என்பதால், தேசிய அளவிலான டிஜிடல் புரட்சியில் குறு-சிறு நிறுவனங்களையும் சேர்த்துக் கொண்டு, அவற்றின் மூலம் கூடுதல் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தர அரசு முயல்கிறது.

அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைத் தவிர்ப்பதற்காகவே பல தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யாமலும், அமைப்புப் ரீதியாக இல்லாமலும் செயல்படுவது போலக் காட்டுகின்றன. ஆனால் டிஜிடல் புரட்சியினால், இவையாவும் ஒருங்கிணைக்கப்பட்டு, அரசுக்கு வரிவருவாய் கூடுதலாகக் கிடைப்பதுடன், அவற்றின் செயல்திறனும், நிதி வளமும் மேம்படும் என்பதிலும் ஐயமில்லை. இந்த பட்ஜெட் அறிவிப்பின்படி, ஆண்டுக்கு ஐம்பது கோடி அல்லது அதற்கும் குறைவான விற்று-முதல் செய்யக்கூடிய சிறிய தொழில் நிறுவனங்களுக்கு வரிவிகிதம் 25 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. எனவே குறு-சிறு தொழில் நிறுவனங்கள் தமது முதலீடுகளை அதிகரித்து, தொழில்துறை வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்புப் பெருக்கத்திற்கும் உதவிடமுடியும். மறுபுறத்தில், மேம்பட்ட தொழில் நுட்பங்களோடு வருகின்ற அந்நிய முதலீடுகளும் பட்ஜெட்டில் முக்கிய கவனம் பெற்றுள்ளன. அந்நிய நேரடி முதலீடுகளில் 90 சதவிகிதம் தங்கு தடையற்ற 'ஆட்டோமேட்டிக்' வழியில் வர வகை செய்திருப்பதோடு, அந்நிய முதலீட்டு மேம்பாட்டு வாரியமும் மூடப்படுகிறது. இதனால் அரசாங்க அலுவலகங்களில் காலவிரயம் இன்றி, அந்நிய முதலீடுகள் நம் நாட்டுக்குள் பாய்ந்து, பொருளாதார நடவடிக்கைகள் ஊக்கம் பெறும். அந்நிய நேரடி முதலீட்டின் 36 சதவீத அதிகரிப்பினால், முதலீடு பெருகி, வேலை வாய்ப்புகள் கணிசமாக உயரக்கூடும்.

### 'சங்கல்ப' திட்டம்:

தொழில்துறையின் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பல காரணிகள் துணை செய்கின்றன. அவற்றில் வணிக வெளிப்படைத் தன்மை, பெருங்கூட்டுப் பொருளாதார அமைப்பு, கட்டமைப்பு வசதிகள், தகவல்-தொழில்நுட்ப புத்தகங்கள், ஆகிய நான்கும் குறிப்பிட்டுச் சொல்லும் தன்மையன. புத்தாக்க முயற்சிகளால், இடுபொருள் சாராத கூடுதல் உற்பத்தி நிகழ்கிறது. அரசாங்கம் ஏற்படுத்துகிற கட்டமைப்பு வசதிகள், உற்பத்திக் காரணிகள் மற்றும் பேரளவு உற்பத்தி முறைகளுடன் ஊடாடி, உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவிகின்றன.

நம்முடைய தொழிலாளர்களின் திறன் குறைவினால் அவர்களை வேலையில் அமர்த்த முடியாதநிலை பெரும் தடையாக உள்ளது. இதனால் உற்பத்தித் துறையில் கடந்த சில ஆண்டுகளாகத் திறன்பெற்ற தொழிலாளர்களின் தேவையை நிறைவு செய்ய முடியவில்லை. மத்திய பட்ஜெட்டில் இந்தப் பிரச்சினை முறையாக அணுகப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில், ரூ. 4000 கோடி செலவில் சங்கல்ப் (Skill acquisition and knowledge awareness for Livelihood Promotion Programme - SANKLP) என்ற திட்டம் தொடங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மூன்றரை கோடி இளைஞர்களுக்குத் திறன்பயிற்சி அளிக்கப்படும். ஏற்கெனவே செயல்பட்டு வரும் பிரதம மந்திரியின் கௌஷல் கேந்திரா மேலும் அறுநூறு மாவட்டங்களுக்கு விரிவாக்கப்படும். சர்வேதச திறன் பயிற்சி மையங்கள் நூறு இடங்களில் ஆரம்பிக்கப்படும். தொழிற்திறன் பயிற்சி, மின்னணு நூலகம், வேலைவாய்ப்பு வழிகாட்டு மையம், திறன் மதிப்பீடு, போன்றவற்றை உள்ளடக்கியதாக கிராமப்புற இளைஞர்களுக்குப் பயன்படும் விதமாக சமுதாயத்திறன் மையங்களாக கௌஷல் கேந்திரா திகழும். இந்த முயற்சிகளால் நமது இளைஞர்களின் வேலை பெறும் / வேலை செய்யும் திறன் மேம்படும்.

### சர்வதேச இந்தியத்திறன் மையங்கள்

இந்திய இளைஞர்களுக்கு வெளிநாட்டு மொழிகளில் மேம்பட்ட திறன் முயற்சிகளை வழங்குவதற்காக நம் நாட்டின் பலபகுதிகளில் சர்வதேச இந்தியத்திறன் மையங்கள் (Inida Interntational Skill Centres - IISC) ஏற்படுத்தப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. வெளி நாடுகளில் வேலை தேடுகிற நமது இளைஞர்களுக்கு இவை வரப்பிரசாதமாகும். நமது ஐடிஐ என்ற தொழில் பயிற்சி நிறுவனங்களில் வழங்கப்படும் பயிற்சிகள் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன. நமது ஐடிஐயில் பிளம்பர் பயிற்சிப் பெற்ற ஒருவரை வெளிநாட்டு வேலைக்கு அனுப்ப வேண்டுமானால், அவருக்கு அதே துறையில் மறுபயிற்சி அளித்தாக வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலையை சர்வதேச இந்தியத் திறன் மையங்கள் மாற்றிவிடும் என நம்பலாம். இந்திய இளைஞர்களுக்கு வெளி நாடுகளில் வேலைவாய்ப்புகள் கிடைப்பதோடு, அவர்கள் மூலமாக வெளிநாட்டுச் செலாவணியும் நமக்குக்

கிடைக்கும். அவர்கள் அனுப்புகின்ற வெளிநாட்டுப் பணம் இங்குள்ள குடும்பத்தினரின் நலனுக்குப் பயன்படும் என்றாலும், அந்த வெளி நாட்டுச் செலாவணியை உற்பத்தித் திறன் மிக்க சொத்துக்களாக மாற்றுவதற்காக ஊக்கச் சலுகைகளை வருங்காலத்தில் அரசு அறிவிக்கக் கூடும். வெளிநாடுகளில் வேலை செய்ய விரும்பும் நமது இளைஞர்களுக்கான திறனை மேம்படுத்தும் இந்த நடவடிக்கை அரசின் தொலைநோக்குப் பார்வையைக் காட்டுகிறது.

**கட்டமைப்புத் துறை ஒதுக்கீடு:**

இந்த பட்ஜெட்டில் கட்டமைப்புத் துறைக்கும் பெருமளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டமைப்புகளை உருவாக்கப் பெருமளவு மனித ஆற்றலும் தேவைப்படுவதால் இதனாலும் வேலைவாய்ப்புகள் பெருகும். எனினும் பிராந்திய கண்ணோட்டத்தில் கட்டமைப்புகளை ஏற்படுத்த முனைந்தால், பலம் விரும்பத்தக்கதாக இருக்கும். சமீபகாலமாக பிராந்திய சமச்சீரின்மை பெருகிவிட்டது. மாநிலங்களுக்கு இடையேயான பொருளாதார வளர்ச்சிகள் ஒரு புள்ளியில் குவிவதற்கு மாறாக, ஏற்றத்தாழ்வுகள் பெருகிவிட்டன. இதனைக் களைய, பின்தங்கிய பகுதிகளில் அரசாங்கத்தின் கட்டமைப்பு வசதிகளுக்கான வேலைகள் நடக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் கட்டமைப்பு வசதிகள் பெருகி, ஒரு குறிப்பிட்ட தொழில்துறை அப்பகுதியில் அபரிமிதமாக வளர்வது பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதுதான் என்றாலும், எவ்விதமான முன்னேற்றமும் காணாத பின்தங்கிய பகுதிகளையும் பொருளாதார வளர்ச்சிக் கட்டமைப்புக்குள் சேர்த்துக் கொள்வதும் அரசின் கடமையாகும். குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களில் நிலவும் இனவழிப் பதற்றங்களைக் களைய அப்பகுதியில் தொழில்துறை வளர்ச்சிக்குக் கட்டமைப்புக்கான முயற்சிகளில் தீவிரமாக அரசு செயல்பட வேண்டும்.

**புதிய மெட்ரோ ரயில் கொள்கை:**

அரசு அறிவிக்க உள்ள புதிய மெட்ரோ ரயில் கொள்கையின்படி இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். நகர்ப்புற இளைஞர்களுக்கு இது ஆறுதலான செய்தி. மெட்ரோ ரயில் சேவை விரிவாக்கங்கள் போக்குவரத்துக் கட்டமைப்பைப் பெருக்குவதுடன், கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி இடம்பெயர்கிற மக்களுக்கும் வேலை வாய்ப்புகளைத் தரக்கூடும்.

தொழில்துறை உற்பத்தி மூலம் வேலை வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும் என்றால் அரசு மேலும் சிலவற்றைச் செய்திருக்கலாம். தொழிலாளர்கள் அதிக அளவில் உள்ள தோல் தொழில், நவரத்தினத் தொழில், ஆபரணத் தொழில் போன்றவற்றுக்குக் கூடுதலாக வரிச் சலுகைகளை அறிவித்திருக்கலாம். 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற திட்டத்திற்கு ஊக்கம் அளிப்பதாகவும், வேலைவாய்ப்புகளைப் பெருக்கி, ஏற்றுமதியை மேம்படுத்துவதாகவும் வரிச்சலுகை அறிவிப்பு அமைந்திருக்கும். சீனாவில் உள்ளது போல் உற்பத்திக் கூடங்கள், குடியிருப்புப் பகுதிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவற்றை உள்ளடக்கிய தொழில் நகரங்கள் இந்தியாவிலும், சீர்மிகு நகரத்திட்டங்களின் மூலம் உருவாக்கப் படுகின்றன. எனினும் இத்தகைய வளர்ச்சி மையங்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதமான அறிவிப்புகள் எதுவும் 2017 பட்ஜெட்டில் இல்லை. தொழிலாளர்கள் அதிக அளவில் உற்பத்தியில் ஈடுபடுகிற தொழில்களுக்கும் பட்ஜெட்டில் முக்கிய கவனம் தரப்படவில்லை. எனினும், மக்கள் தொகையில் பெரும் பான்மையினர் வசிக்கின்ற கிராமப் புறங்களுக்கும், அவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ள விவசாயத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழிலாளர்கள் அதிக அளவில் ஈடுபட்டுள்ள தொழில்களை நவீனப்படுத்தவும், அங்கே தரமான பொருள்களை உற்பததி செய்யவும், அதன் மூலம் ஏற்றுமதியைப் பெருக்கவும், அவற்றின் பயனாக உற்பத்தித்துறை வளர்ந்து வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்புப் பெருக்கத்திற்கும் வழிசெய்கின்ற யோசனைகள் காத்திருப்புப் பட்டியலில் தான் உள்ளன. இனி வரும் காலங்களில் இவ்விஷயம் குறித்து விவாதங்களில், தொழில்நுட்பங்களை இறக்குமதி செய்வதை விடவும், உள்நாட்டின் புத்தாக்க முயற்சிகளால் உற்பத்தித் திறனையும் வேலைவாய்ப்பையும் எவ்வாறு பெருக்க முடியும் என்பதே முக்கியமாக இடம் பெற வேண்டும்.

•

# புதிய வடிவில் இந்திய ரயில்வே பட்ஜெட்

- அருணேந்திர குமார்
இந்திய இரயில்வே முன்னாள் தலைவர்

93 வருடங்களாக சமர்ப்பிக்கப்பட்டு வந்த ரயில்வே பட்ஜெட் இந்த ஆண்டு வெளியிடப் படவில்லை. அது பொது பட்ஜெட்டோடு இணைந்தது. நாம் மேற்கொண்டு விவாதிப்பதற்கு முன் ரயில்வே பட்ஜெட்டும், பொது பட்ஜெட்டும் தனித்தனியாகவோ, ஒன்றாகவோ சமர்ப்பிக்கப்படுவதன் பின்னணியை முதலில் பார்ப்போம்.

1920ல் சர் வில்லியம் ஆக்வொர்த் தலைமையில் கிழக்கிந்திய ரயில்வே குழு அமைக்கப்பட்டது. இந்த ஆகவொர்த் குழுவின் பரிந்துரைகளின்படி 1924ல் ''பிரிவினை மாநாடு'' அடிப்படையில் ரயில்வேயில் நிதி நிலைமை பிரிக்கப்பட்டது. இந்த மாறுதலால் ஒரு பெரிய வர்த்தக நிறுவனம், அரசு முறையில் மார்ச் 31ஆம் தேதி, செயலிழந்து மீண்டும் ஏப்ரல் முதல் நாளில் செயல்படும் ஒரு நிலையிலிருந்து மாறி ரயில்வே துறைக்கு விடுதலை அளிக்கப்பட்டது. ரயில்வே வருவாயிலிருந்து பொது பட்ஜெட்டிற்கு ஒரு குறிப்பிட்ட அளவு ஆண்டு பங்களிப்பு இருக்க வேண்டும். ''ரயில்வேயின் மொத்த வருவாயில் அரசுக்கு, முதல் அதிகாரம் உண்டு'' என்று கூறப்பட்டிருந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின் ரயில்வே துறை மொத்தத்தில் 75 சதவிகித பயணிகள் போக்குவரத்தையும் 90 சதவிகித சரக்கு போக்கு வரத்தையும் கொண்டிருந்தது. ஆகவே, அந்தத் துறைக்கு தனியான பட்ஜெட் தேவை என்று கருதப்பட்டது. ஆனால், இன்று ரயில்வேயின் பங்கு பயணிகள் போக்குவரத்தில் 15 சதவிகிதமாகவும், சரக்கு போக்குவரத்து 30 சதவிகிதமாகவும் மட்டுமே உள்ளது. தற்போதைய அரசு, இந்த மாற்றத்தை உணர்ந்து இதில் ஒரு முடிவு எடுக்க தீர்மானித்தது. இந்த பின்னணியில் ரயில்வே பட்ஜெட், பொது பட்ஜெட்டின் உள் கட்டமைப்புத் துறையில் இணைந்துள்ளது. ஆனாலும், இந்திய ரயில்வேயின் நிதிசார் சுயத்தன்மை பாதுகாக்கப்பட்டு அது இதுவரை அனுபவித்த சுதந்திரம் தொடரப்படுகிறது.

போக்குவரத்துத் துறைகளை ஒருங்கிணைத்திருப்பது பட்ஜெட்டில் தெளிவாகத் தெரிகிறது. ரயில்வேத்துறை பொதுவான போக்குவரத்தில் புறப்படும் இடத்திலிருந்து சேரும் இடம் வரை மற்ற போக்குவரத்து அமைப்புகளோடு இணைந்து ஒரு தொடர் சேவையை வழங்க வேண்டியுள்ளது, அதாவது பொருள் போக்குவரத்து ஆரம்ப இடத்திலிருந்து ரயில் நிலையம் வரை பிறகு சென்றடையும் ரயில் நிலையத்திலிருந்து பொருள் போய் சேரும் இடம் வரை இந்த நிலைமை, பொருள்களை அனுப்புபவருக்கும் போக்குவரத்துத் துறைக்கும், ஒரு வெற்றிகரமான சூழ்நிலையாக இருக்கும். இதனால், ரயில் வேகன்கள் ஆங்காங்கே முடங்கிக்கிடப்பது தடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு பயன் அளிக்கும்.

இந்த பட்ஜெட்டில் நான்கு முக்கிய துறைகளை கவனிக்குமாறு ரயில்வே பணிக்கப்பட்டிருக்கிறது.

(i) பயணிகள் பாதுகாப்பு

(ii) மூலதனம் மற்றும் வளர்ச்சிப் பணிகள்

(iii) சுத்தம்

(iv) நிதி மற்றும் கணக்குகள் சீர்திருத்தம்

**பயணிகள் பாதுகாப்பு**

கடந்த சில ஆண்டுகளாகவே, பயணிகள் பாதுகாப்பை பலப்படுத்த தனியான முதலீடு செய்யப்பட வேண்டும் என்று கருதப்பட்டு வந்தது. ஏனெனில் ரயில்வே செயல்பாட்டில் வரும் வருமானத்தைக்கொண்டு பாதுகாப்புக்கு முதலிட போதிய வாய்ப்பு இல்லை. கடந்த காலத்தில் 1.4.2001ல் அப்போதிருந்த பிரதம மந்திரி திரு. அட்டல் பிஹாரி வாஜ்பாய், ரயில்வே பாதுகாப்பு சிறப்பு நிதியம் ஒன்றை ஏற்படுத்தினார். ரயில் தண்டவாளங்கள், பாலங்கள், சிக்னல் கட்டமைப்பு மற்றும் என்ஜின், சரக்கு மற்றும் பயணிகள் பெட்டிகள் ஆகிய பழுதடைந்த நிலையில் இருப்பவைகளை மாற்றியமைக்க இந்த நிதி உதவும் என்று கருதப்பட்டது. அதற்காக, ரூ.17,000 கோடி வட்டியில்லாத தொகையாக வழங்கப்பட்டது. அது, காலாவதியாகாமல் தொடரும். மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், பட்டியலிடப்பட்டு ''பச்சை புத்தகம்'' என்று வெளியிடப்பட்டது.

ரயில்வே பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்த இன்றைய அரசு இந்த பட்ஜெட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.1,00,000 கோடி முதலீடு செய்யும் வகையில் தேசிய ரயில் பாதுகாப்பு நிதியம் ஒன்றை அறிவித்துள்ளது. இந்த நிதியத்திற்கு இந்த அரசு ஒரு தொகையை அளிக்கும். மீதி நிதியை ரயில்வே, தன்னுடைய நிதி ஆதாரங்களிலிருந்தும் மற்ற

வகையிலிருந்தும் உருவாக்கிக் கொள்ளும். இந்த நிதியத்திலிருந்து எந்தெந்த பாதுகாப்பு வேலைகளுக்கு எவ்வளவு செலவிடப்பட வேண்டும் என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும். ரயில்வே பாதுகாப்பிற்கும் அவைகளை திறமையாகக் கண்காணிக்கவும், உலகளவிலான சிறப்பு நிபுணர்களின் சேவை நாடப்படும். இந்த முடிவு மிகத் துணிச்சலான ஒன்று சரியான சமயத்தில் வந்துள்ளது. இதனால் ICF வடிவமைத்த ரயில் பெட்டிகள் மாற்றியமைக் கப்பட்டு ஜெர்மனியால் வடிவமைக்கப்பட்ட LHB கோச்கள் பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளது. அது போலவே, தண்டவாளங்களில் ஏற்படும் விரிசலை முன் கூட்டியே அறிந்து கொள்ளும் தானியங்கித் தொழில்நுட்பம், மிகவும் பழுதடைந்துள்ள பாலங்களை மாற்றியமைத்தல் மற்றும் பழங்காலத்து ரூட் ரிலே இண்டர்லாக்கிங் சிக்னல்களை மாற்றி நவீன சிக்னல்களை பொறுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ள வாய்ப்புண்டு. கடந்த சில ஆண்டுகளாக ஆளில்லா ரயில் பாதை கடக்கும் இடங்களில் விபத்துக்கள் குறைந்துள்ளன. 2020க்குள் எல்லா ஆளில்லா கடக்கும் பாதைகளும் நீக்கப்பட வேண்டும் என்றும் பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது. அதுபோலவே ஆளுள்ள கடக்கும் பாதைகளில் ரயில் பாதைக்கு மேலேயோ அல்லது கீழேயோ பாலங்கள் பெருமளவு அமைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பாதுகாப்பு முயற்சிகளின் ஒரு அங்கமாக ரயில் பெட்டியில் பயன்படுத்தப்படும் பொருள்கள் தீயை எதிர் கொள்ளும் வகையில் மாற்றியமைக்கப்படும்.

இந்த தேசிய ரயில் பாதுகாப்பு நிதியத்திற்கான வரவு, வருவாய் மற்றும் மூலதன செலவினங்களிலிருந்து கிடைக்கும். இந்த பட்ஜெட்டில் வருவாய் தொகுப்பிலிருந்து ரூ.1000 கோடியும் மூலதன தொகுப்பிலிருந்து ரூ.10,000 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியம் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் பட்டியலிடப்படும்.

### மூலதனம் மற்றும் வளர்ச்சிப் பணிகள்

நடப்பு பட்ஜெட்டில் திட்ட ஒதுக்கீடு மிகக் கணிசமான அளவில் ரூ.1,21,000 கோடியிலிருந்து ரூ.1,31,000 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதே சமயத்தில் பட்ஜெட்டிலிருந்து மொத்த நிதி ஆதரவு ரூ.46,355 கோடியிலிருந்து ரூ.55,000 கோடியாக உயர்ந்துள்ளது. பட்ஜெட்டிற்கு அப்பாற்பட்ட நிதியை திரட்ட வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், ரயில்வேயின் செயல்பாட்டிலிருந்து திரட்டப்படும் நிதியின் அளவு நியாயமான அளவில், சென்ற ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.14,715 கோடியிலிருந்து ரூ.14,000 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. பட்ஜெட்டிற்கு அப்பாற்பட்ட நிதி ஆதாரம் பட்ஜெட்டிலிருந்து பொதுவாக ஒதுக்கப்பட்ட ஆதாரம் மற்றும் ரயில்வே தன்னுடைய நடவடிக்கையிலிருந்து சேமிக்கக்கூடிய தொகை போன்ற திட்ட மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ரூ. கோடியில்

| ஆண்டு | திட்ட ஒதுக்கீடு | பட்ஜெட்டில் பொதுவாக ஒதுக்கப்பட்ட தொகை | பட்ஜெட்டிற்கு அப்பாற்பட்ட நிதி | ரயில்வே செயல்பாட்டால் கிடைக்கும் நிதி |
|---|---|---|---|---|
| 2011-12 | 45,061 | 21,073 | 14,790 | 9,198 |
| 2012-13 | 50,383 | 25,234 | 15,142 | 10,007 |
| 2013-14 | 53,984 | 28,174 | 15,225 | 10,590 |
| 2014-15 | 65,798 | 31,596 | 17,788 | 16,414 |
| 2015-16 | 93,520 | 35,007 | 39,006* | 19,446 |
| 2016-17 | 121,000 | 46,355 | 59,930 | 14,715 |
| 2017-18 | 131,000 | 55,000 | 62,000 | 14,000 |

* இது நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் ரூ.17,136 கோடியை உள்ளடக்கியது. இப்படிப்பட்ட புதுவகையான நிதி ஆதாரம் முதல் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் பிறகு, இது நடைமுறையாக்கப்பட்டிருப்பது, அடுத்த இரண்டு ஆண்டுகளின் எண்ணிக்கையிலிருந்து தெரிகிறது.

இந்த பட்ஜெட்டில் திட்ட ஒதுக்கீடு 2014-15ல் ரூ.65,798 கோடியாக இருந்தது கிட்டத்தட்ட இரட்டிப்பாக்கப்பட்டு 2017-18 ரூ.1,31,000 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது, இந்தியாவின் உயிர்நாடியான இந்திய ரயில்வேயை வலுப்படுத்துவதற்கான அரசின் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. ரயில்வே பட்ஜெட்டை பொது பட்ஜெட்டோடு இணைத்ததால், ரயில்வே அரசுக்கு ஆண்டுதோறும் அளிக்க வேண்டிய ரூ.10,000 கோடி பங்கு லாபம் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் அதுவும் திட்டங்களுக்கு பயன்படும். இந்தப் பலன் ஆண்டுதோறும் கிடைக்கும். ரயில்வே துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளைப் பார்த்தால் அவை அந்தத் துறையின் முக்கியமான திட்டங்களாக விளங்கும். 2017-18ல் ரயில்வே, 3500 கி.மீ. பாதைகளை செயல்படுத்த எண்ணப்பட்டுள்ளது. 2016-17ல் இது, 2800 கி.மீட்டராக இருந்தது. ரயில் வழித்தடங்களை மின்மயமாக்குவதற்கு அதிக

முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 2016-17 திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடான 2000 கி.மீட்டருக்கு பதிலாக 2017-18ல் அது, இரட்டிப்பான அளவாக 4000 கி.மீட்டராக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துகளில் மொத்த அளவு, 10 சதவிகிதம் உயரும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரயில்வே நிலையங்களை புதுப்பிப்பதும் ஒரு மிகப்பெரிய திட்டமாகும். போபால் அருகே, ஹபீத்கஞ்சிலும், காந்தி நகரிலும் இந்த வேலை துவங்கிவிட்டது. 2017-18ஆம் ஆண்டில் ரயில்நிலையங்களை புதுப்பிக்க மேலும் 25 நிலையங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட உள்ளன. 500 ரயில் நிலையங்களில் மாற்றுத் திறனாளிகள் பயன்பாட்டிற்கு ஏதுவாக மின் தூக்கிகளும், மின் படிக்கட்டுகளும் அமைக்கப்படும். அடுத்த சில ஆண்டுகளில் 7000 ரயில்நிலையங்கள் சூரிய மின்சக்தி மூலம் செயல்படும். இதற்கான துவக்கம் 300 ரயில்நிலையங்களில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. 1000 மெகாவாட் சூரிய மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் 2000 ரயில் நிலையங்களில் இதற்கான வேலை துவக்கப்படும். சுற்றுலா மற்றும் புண்ணியஸ்தலங்களுக்கு சென்றுவர பிரத்யேகமான ரயில்கள் விடப்படும். மேற்கூறப்பட்ட திட்டங்களுக்கான பணிகள் ஏற்கனவே துவங்கப்பட்டுள்ளதை நாம் காண முடிகிறது. மாநில அரசுகளுடன் கூட்டு திட்ட முயற்சிகள் என்ற ஒரு புதிய உக்தியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், மாநில அரசுகளும் நிதி பங்களித்து திட்டங்கள் விரைவாக முடிக்கப்படும். இதன்படி, ஒன்பது மாநில அரசுகளோடு ரயில்வே திட்டங்கள் கூட்டாக மேற்கொள்ளப்படும். இதன்படி 70 திட்டங்கள், அடையாளம் காணப்பட்டுள்ளன.

### சுத்தம்

சுத்தமான இந்தியா இயக்கத்தின் கீழ் இந்திய ரயில்வேயின் சுத்தத்திற்கு மிகுந்த அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால், சுத்தமான ரயில்வே உருவாகும். தற்போது, ரயில் நடைமேடைகளிலும் தொடர் வண்டிகளிலும் சுத்தம் அதிகமாகக் காணப்படுகிறது. கைப்பேசி மூலம் குறுஞ்செய்தி அனுப்பி "என்னுடைய பெட்டியை சுத்தம் செய்யுங்கள்" என்ற திட்டம், பிரபலமாகியுள்ளது. இந்த பட்ஜெட்டில் ஒருவர் பயணிக்கும் ரயில் பெட்டியில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கிறதோ அவைகளை நிவர்த்தி செய்து கொள்ள பதிவு செய்ய பெட்டியின் நண்பன் என்ற திட்டம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. ரயில் நிலையங்களில், ரயில் பெட்டிகளிலிருந்த வெளியாகும் கழிவுகளை நாம் பார்த்திருக்கிறோம். இதனால், சுகாதாரமற்ற நிலைமை ஏற்படுவதோடு தண்டவாளங்களும் பாதிக்கப்படுகின்றன. 2019க்குள் எல்லா ரயில் பெட்டிகளிலும் உயிரி கழிவறைகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் தண்டவாளங்கள் புதிய பொலிவுடன் காணப்படும். உயிரி கழிவறை களிலிருந்து பெறப்படும் கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு சாதகமான வகையில், வெளியேற்றவும் அதனை எரிசக்தியாக உருவாக்கவும் புது டெல்லி மற்றும் ஜெய்பூர் ரயில் நிலையங்களில் முன்னோடி தொழிற் சாலைகள் அமைக்கப்படுகின்றன. சுத்தமாக இருக்கும் ரயில் நிலையங்களினால் அதைச்சார்ந்த சுற்றுபுறங்களும் சுத்தமாக இருக்கும்.

### நிதி மற்றும் கணக்குகள் சார்ந்த சீர்திருத்தங்கள்

மார்ச் 2019க்குள் வரவேண்டிய தொகை என்ற நிலையில் நிதி நிலை அறிக்கைகள் தயார் செய்யப்படும். வரவேண்டிய தொகை சார்ந்த கணக்கில் ஒரு சேவை செய்யப்பட்டவுடன் அதன் வரவு வைக்கப்படும். பண பரிவர்த்தனை பேரில் வைக்கப்படும் கணக்கில் எப்போது வரவு வருகிறதோ அப்போதுதான் சேர்க்கப்படும். இந்த புதிய கணக்கு விகிதத்தில் உள்ள நன்மை என்பது செலவு செய்யப்படும் அதே ஆண்டு கால கட்டத்தில் அதற்கான வரவும் வைக்கப்படும். அப்போதுதான், ரயில்வே செயல்பாட்டில் நிகர வருமானம் கணிக்கப்பட ஏதுவாக இருக்கும். இதனால், ரயில்வேத்துறை தான் வழங்கும் ஒவ்வொரு சேவையின் மதிப்பையும் துல்லியமாக கணக்கிட முடியும்.

இந்த பட்ஜெட்டில் பயணிகள் மற்றும் சரக்கு கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை. அது மட்டுமல்லாமல், IRCTC மூலம் வாங்கப்படும் கணிணிசார் டிக்கெட்டுகளுக்கு சேவைக் கட்டணம் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க நிகழ்வாகும். ரயில்வேசார் பொதுத்துறை நிறுவனங்களாக IRFC IRCON மற்றும் IRCTC பங்கு மார்க்கெட்டில் பதிவு செய்யப்படும்.

### வரவுகள் மற்றும் செலவுகள்

ரயில்வே பட்ஜெட்டில் முக்கிய அம்சங்களை இதுவரை கவனித்த நாம் தற்போது 2017-18ல் பின்வரும் வரவு செலவுகளை கவனிப்போம்.

## வரவுகள் செலவுகள் பற்றிய ஒரு பார்வை

ரூ. கோடியில்

| வ. எண். | நிகழ்வுகள் | நிகழ்ந்த அளவு 2015-16 | பட்ஜெட் 2016-17 | திருத்தப்பட்ட மதிப்பீடு 2016-17 | பட்ஜெட் 2017-18 |
|---|---|---|---|---|---|
| | வரவுகள் | | | | |
| 1 | மொத்த போக்குவரத்து வரவுகள்( 1a to 1e) | 164,334 | 184,820 | 172,155 | 188,998 |
| a | பயணிகள் வருவாய் | 44,283 | 51,012 | 48,000 | 50,125 |
| b | சரக்கு வருவாய் | 109,208 | 117,933 | 108,900 | 118,157 |
| c | மற்ற பெட்டிகள்சார் வருவாய் | 4,371 | 6,185 | 5,000 | 6,494 |
| d | மற்ற சிறு வருவாய்கள் | 5,929 | 9,590 | 10,100 | 14,123 |
| e | போக்குவரத்து தற்காலிக வரவு | 543 | 100 | 155 | 100 |
| 2 | இதர வருவாய் | 4,046 | 4,451 | 150 | 500 |
| 3 | மொத்த வருவாய் வரவு (1+2) | 168,380 | 189,271 | 172,305 | 18,498 |
| 4 | பட்ஜெட் பொது வருவாயிலிருந்து மூலதன ஆதரவு | 37,608 | 45,000 | 46,355 | 55,000 |
| 5 | மொத்த ரயில்வே வருவாய்கள் + பட்ஜெட் ஆதரவு (3+4) | 205,988 | 234,271 | 218,660 | 244,498 |
| 6 | பட்ஜெட் அல்லாத வருவாய்கள் | 39,066 | 59,325 | 59,930 | 62,000 |
| 7 | பட்ஜெட் அல்லாத வருவாய் சேர்த்து மொத்தம் (5+6) | 245,054 | 293,596 | 278,590 | 306,498 |
| | செலவுகள் | | | | |
| 8 | மொத்த செயல்பாட்டு செலவுகள் (8a to 8c) | 147,836 | 169,260 | 162,960 | 178,350 |
| a | சாதாரண செயல்பாட்டு செலவுகள் | 107,736 | 123,560 | 122,760 | 129,750 |
| b | ஓய்வூதிய நிதிக்கு ஒதுக்கீடு | 34,500 | 42,500 | 35,000 | 43,600 |
| c | தேய்மான சேமிப்பு நிதிக்கு ஒதுக்கீடு | 5,600 | 3,200 | 5,200 | 5,000 |
| 9 | இதர செலவுகள் | 1,315 | 1,800 | 1,650 | 2,200 |
| 10 | ரயில்வே வருவாயிலிருந்து மொத்த செலவுகள் (8+9) | 149,151 | 171,060 | 164,610 | 180,550 |
| 11 | பட்ஜெட் அல்லாத வரவுகளிலிருந்து செலவுகள் மற்றும் பட்ஜெட் ஆதரவு (4+6) | 76,671 | 104,325 | 106,285 | 117,000 |
| 12 | பட்ஜெட் அல்லாத வரவுகள் உள்ளிட்ட மொத்த செலவுகள் (10+11) | 225,826 | 275,385 | 270,895 | 297,550 |
| 13 | நிகர வருவாய் (310) | 19,228 | 18,211 | 7,695 | 8,948 |
| 14 | கொடுக்கப்பட வேண்டிய ஈவுத்தொகை | 8,723 | 9,731 | ... | ... |
| 15 | உபரி அல்லது குறைபாடு (1314) | 10,506 | 8,479 | 7,695 | 8,948 |
| 16 | வளர்ச்சி நிதிக்கு ஒதுக்கீடு | 1,220 | 2,515 | 2,515 | 2,000 |
| 17 | மூலதன நிதிக்கு ஒதுக்கீடு | 5,798 | 5,750 | 5,180 | 5,948 |
| 18 | கடன்கள் திருப்பு நிதிக்கு ஒதுக்கீடு | 3,488 | 214 | ... | ... |
| 19 | தேசிய ரயில் மேம்பாட்டு நிதிக்கு ஒதுக்கீடு | ... | ... | ... | 1000 |
| 20 | செயல்பாட்டு விகிதம் | 90.5மூ | 92.0மூ | 94.9மூ | 94.6மூ |

பின்குறிப்பு : மேற்கண்ட எண்களில் புள்ளிகள் முழுமையாக்கப்பட்டுள்ளன.

2017-18ன் மொத்த போக்குவரத்து வருவாய் ரூ.1,88,988 கோடிகளாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2016-17 மறுமதிப்பீட்டைவிட ரூ.16,843 கோடி ரூபாய் கூடுதல். (ரூபாய் 1,72,155 கோடி) இது 2016-17 பட்ஜெட் மதிப்பீட்டைவிட ரூபாய் 4,178 கோடி ரூபாய் அதிகம். 2016-17ன் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டைவிட பயணிகள்சார் வருவாய் ரூ.2,125 கோடி அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அது 2016-17க்கான பட்ஜெட் மதிப்பீட்டைவிட ரூ.887 கோடி குறைவாக உள்ளது. அதுபோலவே, 2016-17 திருத்தியமைக்கப்பட்ட சரக்குசார் வருமான மதிப்பீட்டைவிட 2017-18க்கான பட்ஜெட் மதிப்பீடு ரூ.9256 கோடி அதிகம். இது, 2016-17 பட்ஜெட் மதிப்பீட்டைவிட ரூ.224 கோடி அதிகம். இதர சிறு வருவாய்களும் கணிசமாக உயர்ந்து ரூ.14,122 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2016-17 திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டைவிட ரூ.4032 கோடி அதிகம். இதனால் நாம் அறிவது என்னவென்றால், வருவாய்க்கான மதிப்பீடுகள் எதார்த்த நிலையில் உள்ளன, மிகவும் அளவுக்கு மீறியதாக அல்ல. மூலதன மற்றும் வருவாய் சார்ந்த மொத்த வரவுகள், ரூ.3,06,498 கோடியாக உள்ளது. இது 2016-17 திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டைவிட ரூ.27,098 கோடி அதிகமாகவும் அந்த ஆண்டு பட்ஜெட் மதிப்பீட்டைவிட 12,903 கோடி அதிகமாகவும் உள்ளது. வருவாய்சார் செலவினங்களும், உண்மையான அளவில் மதிப்பிடப்பட்டு 2017-18 பட்ஜெட் மதிப்பீட்டில் ரூ.15,390 கோடி உயர்ந்து ரூ.1,78,350 கோடியாக உயர்ந்துள்ளது. (2016-17 திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட) 2016-17ல் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டின்படி ரயில்வேத்துறை தன்னுடைய சாதாரண செயல்பாட்டு செலவினங்களை ரூ.1,22,760 கோடி என்ற அளவுக்கு கட்டுப்படுத்தியுள்ளது, அதாவது, 2016-17 பட்ஜெட் மதிப்பீட்டைவிட ரூ.800 கோடி குறைவு. 2017-18க்கான பட்ஜெட் மதிப்பீட்டின்படி இது சாதாரண செயல்பாட்டு செலவினங்கள் ரூ.1,29,750 கோடியாக இருக்கும். 2017-18 பட்ஜெட் மதிப்பீட்டின்படி நிகர வருவாயின் இலக்கு ரூ.8,948 கோடியாக இருக்கும். 2016-17ன் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டை காட்டிலும் ரூ.1253 கோடி அதிகமாக இருக்கும். ஆனால், இது 2015-16ல் ஏற்பட்ட நிகர வருவாயான ரூ.19,228 கோடியைக் காட்டிலும் குறைவு. இந்திய ரயில்வேயின் செயல்பாட்டு விகிதம் இந்த ஆண்டு 94.6 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 2016-17ல் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் 94.9 சதவிகிதத்தைவிட சற்று குறைவு. இது, ஒரு சவாலான செயலாகும். ஏனென்றால், டிசம்பர் 2016 முடிவில் இந்த செயல்பாட்டு விகிதம் 109.6 சதவிகிதமாக இருந்தது. இந்த நிலைமையை பட்ஜெட் ஏற்றுக்கொள்கிறது. மொத்த செலவினங்கள், சேவைகளின் தரம், சமூகக் கடமை மற்றும் பிறவகையான போக்குவரத்துகளிடமிருந்து போட்டி ஆகியவற்றை கருத்தில் கொண்டு ரயில்வேயின் கட்டணங்கள் உறுதியாக நிர்ணயிக்கப்படும்.

ரயில்வே மேம்பாட்டு பணிகளில் சில முக்கியமானவற்றிற்கான மூலதன செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ரூ. கோடியில்

| நிகழ்வுகள் | ஏற்பட்ட செலவுகள் 2015-16 | பட்ஜெட் 2016-17 | திருத்தியமைக் கப்பட்டது 2016-17 | பட்ஜெட் 2017-18 |
|---|---|---|---|---|
| மூலதன செலவினம் (பட்ஜெட்டிலிருந்து) | | | | |
| புதிய வழித்தடங்கள் (கட்டுமானம்) | 13,248 | 11,963 | 13,660 | 11,533 |
| கேஜ் மாற்றியமைப்பு | 3,407 | 3,276 | 3,721 | 3,091 |
| ரயில்பாதை இரட்டிப்பாக்குதல் | 2,950 | 4,782 | 1,423 | 2,543 |
| போக்குவரத்து வசதிகள், யார்டு மாற்றியமைப்பு, பிற | 984 | 1,126 | 1,036 | 1,851 |
| ரயில்வே தளவாடங்கள் | 4,240 | 5,448 | 6,150 | 2,006 |
| வாடகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களுக்கான | 6,325 | 7,000 | 7,000 | 8,000 |
| மூலதன செலவுகள் - | | | | |
| சாலை பாதுகாப்பு செலவுகள் : | | | | |
| a) லெவல் கிராசிங் | 470 | 555 | 679 | 705 |
| b) ரயில்பாதைக்கு மேலே அல்லது கீழே | 2,133 | 2,443 | 3,066 | 4,512 |
| பாலங்கள் தண்டவாளங்கள் மாற்றியமைத்தல் | 5,586 | 4,000 | 6,740 | 9,961 |
| பாலங்கள்சார் வேலைகள் | 520 | 589 | 592 | 746 |
| சிக்னலிங் மற்றும் தொலைதொடர்பு வேலைகள் | 894 | 958 | 954 | 2,331 |

பின்குறிப்பு : மேற்கண்ட எண்களில் புள்ளிகள் முழுமையாக்கப்பட்டுள்ளன.

மேற்காண்பதுபோல், புதிய வழித்தடங்களுக்கான செலவு, ரூ.11,533 கோடியாக குறிக்கப்பட்டுள்ளது. கேஜ் மாற்றியமைக்கும் பணிக்கும் குறைவான ஒதுக்கீடான ரூ.3091 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறைவாக உள்ளன. இரயில் பாதைகளை இரட்டிப்பாக்குவதற்கும் மற்ற போக்குவரத்துத் தேவைகளுக்கும் அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் அவைகளால், மக்கள் விரைவாக செல்ல முடியும். ரயில்பாதைகளை இரட்டிப்பாக்குதலுக்கு 201617 திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டான ரூ.1,423 என்ற நிலையிலிருந்து ரூ.2543 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது போலவே, போக்குவரத்து வசதிகளுக்கான செலவினங்கள், 2016-17 திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடான ரூ.1036 கோடியிலிருந்து 1,853 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. சாலைப் பாதுகாப்பு வேலைகளுக்கும், குறிப்பாக ரயில் பாதைகளுக்கு மேலும், கீழும் அமைக்கப்படும் பாலங்களுக்கான மதிப்பீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது ரூ.3,066 கோடியிலிருந்து ரூ.4,512 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தண்டவாளங்களை மாற்றியமைக்கும் பணிக்கும் அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2016-17 மதிப்பீடான ரூ.4000 கோடியிலிருந்து திருத்தியமைக்கப்பட்ட 2016-17 மதிப்பீட்டில் அது 6740 கோடியாக இருந்தது. 2017-18 பட்ஜெட் மதிப்பீட்டில் ரூ.9961 கோடியாக உயர்ந்துள்ளது. இதனால், பழைய தண்டவாளங்களை மாற்றியமைக்க சீரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதைக் காணலாம். இதைப் போலவே, பாலங்கள் கட்டுவதற்கு 201617 திருத்தியமைக்கப்பட்ட தொகையான ரூ.592 கோடியிலிருந்து 2017-18 பட்ஜெட் மதிப்பீட்டில் ரூ.746 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. சிக்னல் மற்றும் தொலைதொடர்பு பணிகளுக்கும் ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. 2016-17 திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடான ரூ.954 கோடியிலிருந்து 2017-18 பட்ஜெட் மதிப்பீடாக ரூ.2331 கோடியாக அதாவது, 145 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது அல்லாமல், பாரம்பரிய பாதுகாப்பு செயல்களுக்கான ஒதுக்கீடும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. இதுமாதிரியான பாதுகாப்பு, செலவினங்கள் தண்டவாளங்கள் என்ஜின்கள், பெட்டிகள், பாலங்கள், சிக்னல்கள் என்ற அடிப்படையில் அமைந்துள்ளன. இதற்கான மொத்த செலவு, ரூ.42,679 கோடியாக இருக்கும். இது 2016-17 திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டை விட ரூ.814 கோடி அதிகம். விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**பாதுகாப்புசார் செயல்களுக்கு செலவினங்கள்**

ரூ. கோடியில்

| நிகழ்வுகள் | பட்ஜெட் 2016-17 | மாற்றியமைக் கப்பட்டது 2016-17 | பட்ஜெட் 2017-18 |
|---|---|---|---|
| வருவாய்சார் செலவினங்கள் | | | |
| தண்டவாளங்கள் பராமரிப்பு | 13,712 | 13.539 | 13,759 |
| என்ஜின்கள் | 6,318 | 6.108 | 6,204 |
| பயணி மற்றும் சரக்கு பெட்டிகள் | 14,312 | 14.351 | 14,734 |
| இயந்திரங்கள், கருவிகள் | 8,112 | 7.832 | 7,947 |
| போக்குவரத்து | 35 | 35 | 35 |
| மொத்த வருவாய் (பாதுகாப்பு) | **42,489** | **41,865** | **42,679** |

**போக்குவரத்து மொத்த பார்வை :**

போக்குவரத்து முன்னேற்றம் என்பதை நிகர டன் கிலோமீட்டர் என்றும், பயணிகள் கிலோமீட்டர் என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்தக் குறியீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நிகழ்வுகள் | 2015-16 உண்மையில் | 2016-17 பட்ஜெட் மதிப்பீடு | திருத்தியமைக் கப்பட்ட மதிப்பீடு | 2017-18 பட்ஜெட் |
|---|---|---|---|---|
| பயணிகள் கி.மீ. (மில்லியன்களில்) | 1,143,039 | 1,137,298 | 1,157,637 | 1,159,900 |
| நிகர டன் கி.மீ (மில்லியன்களில்) | 654,481 | 694,607 | 621,247 | 675,622 |

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட நான்கு முக்கிய நோக்கங்களுக்கும் தேவையான நிதி வளங்கள் அளிக்கப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேசிய ரயில் சேவைகள் நிதியத்திற்கு வேண்டிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பல திட்டங்களின் கீழான குறியீட்டு வருவாய் மற்றும் செலவினங்கள் நடைமுறை அளவுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் வளர்ச்சி என்ஜின் ஆக இருக்கும் இந்திய ரயில்வேயின் சேவைகள் பெருமளவு பெருகுவதற்கு இந்த புதிய அவதாரமான பட்ஜெட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

**குறிப்பீடுகள்**

1. பட்ஜெட் அறிக்கை 2017-18
2. இந்திய ரயில்வே புள்ளியியல் இயக்குனரகத்தின் தகவல்கள்.

•

# மத்திய பட்ஜெட் 2017-18 ரயில்வே தவிர்த்து பிற உள்கட்டமைப்புப் பிரிவுகளுக்கான ஒதுக்கீடு (திட்டக்குழு யோசனையின்படி).

- கட்டுரையாளர்: **கிருஷ்ணதேவ்**
உள்கட்டமைப்பு நிபுணர், ஆலோசகர்

மத்திய பட்ஜெட் 2017-18 இன் முக்கியமான நிகழ்ச்சி நிரலாக இருப்பது 'மாற்றம், இயக்கம், தூய்மை ஆகியவற்றை நோக்கிய இந்தியா' (TEC INDIA) என்பதாகும். இதனை வளர்த்தெடுப்பதற்கு விவசாயிகள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், ஏழைகளும் உரிமைஅற்றோரும், உள்கட்டமைப்பு, நிதித்துறை, மின்னணு பொருளாதாரம், பொதுச்சேவை, நிதிச்சேவை, வரிநிர்வாகம் ஆகிய தனித்துவமான பத்து ஆய்வுப்பொருள்கள் கவனத்திற்குரியவை. முக்கிய நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்கும், இலக்குகளை அடைவதற்குமாக 2017-18 இல் ரூ.21,46,715 கோடி பட்ஜெட் ஒதுக்கீடு முன்மொழியப்பட்டுள்ளது.

2017-18 பட்ஜெட், உள்கட்டமைப்புப்பிரிவின் மீது மிகவும் அதிகமாக கவனம் செலுத்தி இருக்கிறது. திறமை, உற்பத்தி, வாழ்க்கைத்தரம் ஆகியவை இந்த கவனத்தின் நோக்கங்கள். இவற்றை அடைவதற்கு ரூ.396135 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டில் 18.45% ஆக இருக்கிறது. சென்ற ஆண்டு ஒதுக்கீட்டைக் காட்டிலும் இது 14% அதிகம். 2016-17இல் ரூ.348952 கோடி ஒதுக்கப்பட்டு பிறகு திருத்திய மதிப்பீட்டில் ரூ.358634 கோடியாக அதிகரிக்கப்பட்டது. அட்டவணை 1 இல் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: செலவின விவரம்**

(ரூ.கோடிகளில்)

| வ.எ | பிரிவுகள்/தலைப்பு | 2016-17 (BE) | 2016-17 (RE) | 2017-18 (BE) |
|---|---|---|---|---|
| 1 | தற்போதைய சந்தை விலைகளில் GDP@2011-12 series | 1,50,75,429 | 1,50,75,429 | 1,68,47,544 |
| 2 | ஒட்டுமொத்த பட்ஜெட் செலவினம் | 19,78,060 | 20,14,407 | 21,46,735 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | (இதில்) உள்கட்டமைப்பிற்கு | 3,48,952 | 3,58,634 | 3,96,135 |
| 4 | (இதில்) போக்குவரத்திற்கு | 2,16,268 | 2,16,903 | 2,41,387 |

**ஆதாரம்: பட்ஜெட் ஆவணம் 2017-18**

2013 அக்டோபர் 8 நாளிட்ட நிதி அமைச்சகப் பொருளாதார விவகாரங்கள் துறை (உள்கட்டமைப்புப்பிரிவு) அரசிதழ் அறிவிக்கையின்படி, உள்கட்டமைப்புப்பிரிவு என்பது போக்குவரத்து, எரிசக்தி, தண்ணீரும் துப்புரவும், தகவல் தொடர்பு, சமூக வணிக உள்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

**1.போக்குவரத்து :**

2017-18 பட்ஜெட்டில் ரயில், சாலை, கப்பல், விமானம் ஆகிய அனைத்தையும் சேர்த்து ரூ.241387 கோடி ஒதுக்கீட்டை போக்குவரத்துத்துறை பெற்றுள்ளது. உள்கட்டமைப்பிற்கான ஒட்டு மொத்த பட்ஜெட்டில் இது 61% ஆகும்.

**அட்டவணை 2: கட்டமைப்போடு தொடர்புடைய அமைச்சககங்கள்/ துறைகளின் செலவுத்தொகை**

(ரூ.கோடிகளில்)

| வ.எ. | அமைச்சகம்/துறை | 2015-16 (Actuals) | 201617 (BE) | 201617 (RE) | 201718 (BE) |
|---|---|---|---|---|---|
| 1 | சாலைப்போக்குவரத்து, நெடுஞ் சாலைத்துறை அமைச்சகம் | 46,913 | 57,976 | 52,447 | 64,900 |
| 2 | ரயில்வேஅமைச்சகம் | 35,008 | 45,000 | 46,155 | 55,000 |
| 3 | கப்பல் போக்குவரத்து அமைச்சகம் | 1,324 | 1,531 | 1,454 | 1,773 |
| 4 | விமானப்போக்குவரத்து அமைச்சகம் | 4,168 | 2,590 | 3,452 | 2,702 |
| 5 | எரிசக்தி அமைச்சகம் | 7,735 | 12,253 | 10,476 | 13,881 |
| 6 | பெட்ரோலியம், இயற்கை எரிவாயு அமைச்சகம் | 31,287 | 29,160 | 30,241 | 29,158 |
| 7 | தகவல் தொடர்புத்துறை | 20,485 | 18,414 | 24,272 | 26,687 |
| 8 | குடிநீர், துப்புரவு அமைச்சகம் | 11,081 | 14,009 | 16,512 | 20,010 |
| மொத்த பட்ஜெட் செலவினம் | | **17,90,783** | **19,78,060** | **20,14,407** | **21,46,735** |
| தற்போதைய சந்தை விலைகளில் GDP@2011-12 series | | **1,36,75,331** | **1,50,75,429** | **1,50,75,429** | **1,68,47,544** |

உயர்வடையும் விருப்பத்துடன் கூடிய, இத்தகைய பரிமாணத்திலான முதலீடு நாடு முழுவதும் மிகப்பெரிய அளவில் பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தூண்டுகோலாக இருந்து அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும். இது நடைபெறுமானால், ஒட்டுமொத்த பொருளாதாரக் காட்சியையும் அது மாற்றிவிடும். உற்பத்தியை அதிகரித்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதுடன் பொருளாதாரத்தை உயரிய வளர்ச்சி நிலையை நோக்கியும் இந்த வழிமுறை இட்டுச்செல்லும். ஆனால், மறுபுறம் கவனத்தில் கொள்ளவேண்டிய மிகப்பெரிய சவால்கள் இருக்கின்றன. இந்த வேலைகள் அனைத்தும் குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிக்கப்பட்டாகவேண்டும்.

**அ. சாலைகள்:**

சாலைத்துறைக்கு, 2016-17 திருத்திய மதிப்பீட்டில் ரூ.57,976 கோடியாக இருந்த பட்ஜெட் ஒதுக்கீடு 2017-18 இல் ரூ.64,900 கோடியாக

உயர்த்தப்பட்டுள்ளது. (மேலே உள்ள அட்டவணை 2ஐ பார்க்கவும்). போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகையில் இது 27% ஆகும். இந்தத் தொகை நடைமுறையிலுள்ள மிக முக்கியமான பல திட்டங்களுக்கு செலவிடுவதற்கு யோசிக்கப் பட்டுள்ளது. 2000 கிலோ மீட்டர் நீள கடற்கரையோர புதிய இணைப்புச்சாலைகள் அமைத்து மேம்படுத்தும் புதிய திட்டத்திற்கும் இதிலிருந்து செலவிடப்படும். துறைமுகங்களுக்கும், உள்ளடங்கிய சிற்றூர்களுக்கும் சிறப்பான சாலை இணைப்பு வசதிகள் கிடைத்திட இது உதவிடும். பிரதம மந்திரியின் கிராமப்புற சாலைத்திட்டம் உட்பட, 2014-15 ஆம் ஆண்டு முதல் இதுவரை அமைக்கப்பட்ட மொத்த சாலைகளின் நீளம் 1,40,000 கிலோ மீட்டர். அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளைக்காட்டிலும் குறிப்பிடத்தக்க அளவில் இது அதிகம்.

இதனோடு கூட, பலவிதமான போக்குவரத்து வசதிகளையும் திறம்பட ஒன்றிணைக்கக்கூடிய போக்குவரத்துத் துறையினால் பொருளாதாரம் மிகவும் போட்டிபோட்டு வளரும். பலவிதமான போக்குவரத்து வசதிக்கான தளவாடப்பூங்காக்கள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றுகான குறிப்பிட்ட திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும். மிக நீண்ட காலமாக செயல்படுத்தப்படாமல் இருக்கும் இத்தகைய திட்டத்தை செயல்படுத்துவது வரவேற்கத்தகுந்த ஒன்று.

**அட்டவணை 3:: முக்கியமான மத்திய திட்டங்களுக்கான ஒதுக்கீடு**

(ரூ.கோடிகளில்)

| வ.எ. | திட்டங்கள் | 2015-16 (Actuals) | 2016-17 (BE) | 2016-17 (RE) | 2017-18 (BE) |
|---|---|---|---|---|---|
| 1 | பிரதம மந்திரி கிராமப்புற சாலைகள் திட்டம் (PMGSY) | 18,290 | 19,000 | 19,000 | 19,000 |
| 2 | பிரதமமந்திரி வீட்டுவசதி திட்டம் (PMAY) | 11,603 | 20,075 | 20,936 | 29,043 |
| (a) | பிரதமமந்திரி வீட்டுவசதித் திட்டம்(PMAY) ஊரகம் | 10,116 | 15,000 | 16,000 | 23,000 |
| (b) | பிரதமமந்திரி வீட்டுவசதித் திட்டம் (PMAY) நகர்ப்புறம் | 1,487 | 5,075 | 4,936 | 6,043 |
| 3 | தேசிய ஊரக குடிநீர்த்திட்டம் | 4,370 | 5,000 | 6,000 | 6,050 |
| 4 | தீன்தயாள் உபாத்ய்யாயா கிராமப்புற மின் திட்டம் (DDUGJY) | 4,500 | 3,000 | 3,350 | 4,814 |
| 5 | தூய்மை இந்தியா திட்டம் (SBM) | 7,469 | 11,300 | 12,800 | 16,248 |
| (a) | தூய்மை இந்தியா திட்டம் (SBM) ஊரகம் | 6,703 | 9,000 | 10,500 | 13,948 |
| (b) | தூய்மை இந்தியா திட்டம் (SBM) நகர்ப்புறம் | 766 | 2,300 | 2,300 | 2,300 |
| 6 | ஒருங்கிணைந்த மின் ஆற்றல் மேம்பாட்டுத்திட்டம் | 1,002 | 5,500 | 4,524 | 5,821 |
| 7 | நகர்ப்புற புத்துணர்ச்சித்திட்டம்: AMRUT-(Atal Mission for Rejuvenation and Urban Transformation & Smart Cities Mission) | 4,186 | 7,296 | 9,559 | 9,000 |
| 8 | பாரத் நெட் | | | 6,000 | 10,000 |
| 9 | மெட்ரோ ரயில் திட்டங்கள் | 9,300 | 10,000 | 15,700 | 18,000 |
| 10 | ஏழைகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு | | 2,000 | 2,500 | 2,500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | சாலை பாதுகாப்புப்பணிகள் | 2,603 | 2,998 | 3,745 | 5,217 |
| 12 | மின்னணுப்பொருள்கள் உற்பத்தி மேம்பாடு (M-SIPS & EDF and Manufacturing Cluster) | 52 | 70 | 50 | 745 |

ஆதாரம்: பட்ஜெட் ஆவணம் 2017-18.

பிரதம மந்திரி கிராமச்சாலைகள் திட்டம் இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிக வேகத்துடன் செயல்படுத்தப்பட்டுவருகிறது. பிரதம மந்திரியின் கிராமப்புற சாலைகள் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்கப்படும் வேகம் ஏறத்தாழ இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 2011-14 இல் ஒரு நாளைக்கு 73 கிலோ மீட்டர் சாலை அமைத்துவந்த நிலை மாறி 2016-17 இல் ஒரு நாளைக்கு 173 கிலோமீட்டர் சாலை அமைக்கப்பட்டது. இது மிகவும் போற்றத்தக்கது. இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் 100 பேருக்கு மேலுள்ள குடியிருப்புக்களுக்குக் கூட சாலை இணைப்பு கிடைப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

பிரதமமந்திரியின் கிராமப்புற சாலைகள் திட்டத்தின் கீழ் உள்ள தற்போதைய இலக்கினை 2019 வாக்கில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உயர்நிலை விருப்பத்தை நிறைவேற்ற 2017-18 இல் ரூ.19000 கோடி (அட்டவணை 3) ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலங்களின் பங்களிப்புத் தொகையையும் சேர்த்து 2017-18 இல் கிராமப்புறச் சாலைகள் அமைப்பதற்கு ரூ.27 ஆயிரம் கோடி செலவிடப்பட இருக்கிறது.

தேசிய நெடுஞ்சாலைகள் வளர்ச்சித் திட்டத்தில் குறிப்பிடத்தகுந்த விதிவிலக்கை நாம் அறிய வேண்டும். சாலைகள் இணைப்பிலான் கவனம் இணைப்புகளின் திறனை அதிகரிப்பதைக்காட்டிலும் இணைப்புகளை அதிகரிப்பதை நோக்கி திரும்பி இருக்கிறது. இந்தப் பிரிவில் மிகப்பெரிய தடைகளாக இருப்பவை காலக்கிரமத்தில் ஒப்பந்தங்களை வழங்குவது, நிலங்களைக் கையகப்படுத்துவது, சுற்றுச்சூழல் ஒப்புதல் பெறுவது, கட்டுமான ஆற்றலில் எப்போதும் நிலவிவரும் பற்றாக்குறைகள் போன்றவை. அதிவிரைவு நெடுஞ்சாலைகளில் மனிதர்கள், கால்நடைகளின் நடமாட்டதிற்கு உதவும் வகையில் சுரங்கங்களை அமைப்பது, சிற்றூர்களின் போக்குவரத்துக்கு உதவும் சேவைச் சாலைகளை அமைப்பது ஆகியவற்றிற்கு அதிக கவனம் தேவைப்படுகிறது. இன்னொரு பக்கம், பிரதம மந்திரியின் கிராமப்புற சாலைகள் திட்டத்தினால் ஊரகப்பகுதிகள் ஏராளமாகப் பயன் அடைந்துள்ளன. புதிய இணைப்பு சாலைகளுக்கும், அதிகரித்துவரும் போக்குவரத்திற்கு ஏற்ப சாலைகளைத் தரம் உயர்த்துவதற்கும் முக்கியத்துவம் தரவேண்டும். அனைத்து கால நிலைகளிலும் பயன்படுத்துவதற்கேற்ப தற்போதுள்ள ஊரகச்சாலைகளை மாற்றி அமைப்பபதற்கு உறுதியான நோக்கம் இல்லாமல் இருப்பது ஒரு குறையாகும்.

இதனிடையே, தாமதமாக வழங்கப்படும் ஒப்புதல், பல்வேறு அமைப்புகளிடம் ஒப்புதல் பெறவேண்டிய நிலை, ஒன்றுக்கும் மேற்பட்ட அதிகார வரம்பு எல்லைகள், தனியாருடன் இணைந்து செயல்படும்போது அடிக்கடி மாறக்கூடிய விதிமுறைகள், பொருத்தமான நிலக்கையகச்சட்டங்கள் இல்லாமை, திறன் குறைவு போன்றவை நிலைமை மேம்படுவதற்குத் தடைகளாக இருக்கின்றன.

சாலை மேம்பாட்டை தனித்த ஒன்றாகப் பார்க்கக்கூடாது. பல்வேறு விதமான போக்குவரத்து அமைப்புகளின் ஒரு பகுதியாகவே பார்க்கவேண்டும். எனவே சீரான காலஇடைவெளியில் விரிவான போக்குவரத்துக் கணக்கெடுப்புக்கள் நடத்தப்பட வேண்டும். குறைந்த பட்சம் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையாது இத்தகைய முயற்சிகள் செய்யப்படவேண்டும்.

### ஆ) விமான நிலையங்கள்:

விமான நிலையங்களுக்கு ஒதுக்கப்படும் பட்ஜெட் தொகை 2016-17 இல் ரூ.2590 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு இது ரூ.2701 கோடியாக அதிகரித்துள்ளது. ஆனால், 2016-17 திருத்தப்பட்ட மதிப்பீடான ரூ.3542 கோடியைவிடவும் இது குறைவாக இருக்கிறது. திருத்தப்பட்ட மதிப்பீட்டில் காணப்பட்ட அதிகரிப்பு, எப்போதும் தேவைகளைக் கொண்டதாக இந்தத்துறை இருப்பதையும், அத்தகைய தேவைகளுக்கு அதிக பணச்செலவு பிடிப்பதையுமே காட்டுகிறது. கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவில் விமானப்போக்குவரத்தில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய விமான நிறுவனங்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் புதுப்புது பாதைகளில் சேவைகளைத் தொடங்கியுள்ளன. விமான நிலையங்கள் விரிவாக்கப்பட்டு, நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. உலகின் பிற நாடுகளில் உள்ள விமான

நிலையங்களில் இருக்கக்கூடிய அளவுக்குப் பாதுகாப்புத்தரம் நம் நாட்டு விமான நிலையங்களிலும் பெருமளவுக்குப் பெருகி இருக்கிறது. விமானப்போக்குவரத்தில் மிகச்சிறப்பான சாதனையைத் தொடர்ந்து செய்வதற்குக் கணிசமான மூலதனம் தேவைப்படுகிறது. ஏற்கனவே சுறுசுறுப்பாக இயங்கிவரும் பெருநகரங்களின் வான் பரப்பில் விமானங்கள் மேலும் அதிகரித்துவருகின்றன. விமான முனையங்களில் மிக விரைவான செயலாக்கங்களும், புதிய தொழில்நுட்பங்களும் தேவைப்படுகின்றன. விமானப்புறப்பாடு, வருகை இரண்டையும் தனித்தனியாக பிரித்துக்கையாள வேண்டும் என்பதை இது குறிக்கிறது. விமான நிலையங்களுக்கு அருகில் விமானப்போக்கு வரத்தைக் கையாளுவதற்கு இன்னும் அதிநவீனமுறைகள் தேவைப்படுகின்றன.

2017-18 பட்ஜெட், இரண்டாம் அடுக்கு நகரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட விமான நிலையங்களில் தனியார் அரசு பங்களிப்புடன் இயக்கம், பராமரிப்பு ஆகியவற்றை மேற்கொள்வதை இலக்காகக் கொண்டுள்ளது. சொந்தமாக உள்ள நிலங்களில் இருந்து வருமானம் பெறும் வகையில் இந்திய விமானஆணையச்சட்டம் திருத்தப்படும். இப்படிக்கிடைக்கும் வருவாய் விமான நிலையமேம்பாட்டிற்குச் செலவிடப்படும். தற்போதைய நிலையில் அவசியத்தேவையாக இருக்கும் நவீனமயம் என்ற கூறு பட்ஜெட்டில் காணப்படவில்லை.

நம் நாட்டில் விமான நிறுவனங்களை வைத்திருக்கும் வெளிநாட்டு உரிமையாளர் களையும், விமானங்களை இயக்கி வருவோரையும் ஆளுகை செய்யும் விதத்தில் தெளிவான விதிமுறைகளை உருவாக்குவது பற்றி அரசு முடிவு செய்யவேண்டும். மலிவான கடன்கள், தொழில்நுட்பப்பரிமாற்றம், நிர்வாக நுணுக்கம், பன்னாட்டுச் சந்தைகளை அணுகக்கூடிய நிலை ஆகியவற்றை வெளிநாட்டு உரிமையாளர்கள் இந்தியாவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதையும் எதிர்பார்க்கலாம். உள்நாட்டு விமானப்போக்குவரத்தில் தனியார்பங்குகள், கடன் வழங்குதல் ஆகியவற்றின் நிலைத் தன்மையை அளவிடுவதற்கு ஒழுங்குமுறைகள் கவனமாக உருவாக்கப்படவேண்டும். இந்தத் துறைக்கான நிதி ஆரோக்கியத்தைப் பேணி வளர்க்கும் முறையில் ஒழுங்குமுறை அமையவேண்டும்.

### இ) கப்பல் போக்குவரத்து:

இந்தியத் துறைமுகங்களின் திறன்கள் மிகவும் அளவுக்குட்பட்டவைகளாக உள்ளன. வருங்காலத்திலும் இந்த நிலைமை நீடிக்கும். 2011-12 இல் சராசரி துறைமுகப்பயன்பாடு80% ஆக இருந்தது. உளகளாவிய மந்த நிலையைத்தொடர்ந்து உருவான சூழலிலும் கூட 12 பெரிய துறைமுகங்களின் பயன்பாட்டு விகிதம் 100% ஐ விடவும் அதிகமாகவே இருந்தது.

இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதியில் பெரும்பகுதி கடலோரத்துறைமுகங்களின் வழியாகவே நடைபெறுகிறது. இதற்கு முன் இல்லாத அளவுக்கு கடந்த 10 ஆண்டுகளில் ஏற்றுமதியும், இறக்குமதியும் அதிகரித்துள்ளது.ஏற்றுமதி 21% அதிகரித்துள்ள நிலையில் இறக்குமதி 25% அதிகரித்துள்ளது. உலகநாடுகளுடன் ஒப்பிடும் போது, துறை முகங்களின் திறனை அதிகரிப்பதற்கு, இந்தியா மிக அதிகமான மூலதனத்தைச் செலவிட வேண்டியிருக்கும். சுற்றுச்சூழலுக்கு உகந்த திறன்மிக்க துறையான கப்பல் போக்கு வரத்துக்கு2017-18 ரூ.1773 கோடி ஒதுக்கீடு தரப்பட்டுள்ளது.2016-17 இல் இது ரூ.1531 கோடியாகவும், 2016-17 திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ரூ.1454 கோடியாகவும் ஒதுக்கீடு இருந்தது.

துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்களுக்கு ஒதுக்கீடு 10% அதிகரிக்கப்பட்டுள்ளது. 2016-17 இல் ரூ.732.50 கோடியாக இருந்த ஒதுக்கீடு 2017-18 இல்801.40 கோடியாக அதிகரித்துள்ளது. கப்பல் போக்குவரத்திற்கும், வடகிழக்கு மாநிலங்களுக்குமான ஒதுக்கீடு 2016-17 இல் முறையே 172 கோடியாகவும், 100 கோடியாகவும் இருந்தது. 2017-18 இல் இது முறையே ரூ.238 கோடியாகவும், 126 கோடியாகவும் அதிகரித்துள்ளது.

உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து (IWT) சுற்றுச்சூழலுக்கு சாதகமான ஒரு போக்குவரத்து ஆகும். இதில் எரிபொருள் சிக்கனம் மிகுதி. புகை வெளியேற்றம் குறைவு. நீர்வழிப் பாதைகளுக்கு அருகில் இருக்கும் பகுதிகளின் ஒருங்கிணைந்த சமூகப்பொருளாதாரவளர்ச்சிக்குத் துணைபுரியக்கூடிய முக்கியமான ஒரு உயிரோட்டமாக IWT இருக்கிறது.

இதற்கான பட்ஜெட் ஒதுக்கீட்டில் வீழ்ச்சி காணப்படுகிறது. 2016-17 பட்ஜெட் இல் ரூ.326.42 கோடியும், 2016-17 திருத்திய மதிப்பீட்டில் ரூ278.42 கோடியுமாக இருந்த ஒதுக்கீடு 201718 பட்ஜெட்டில் ரூ.225 கோடியாக குறைந்துள்ளது. உள்நாட்டு நீர் வழிப்பாதைகளின் மூலம் எடுத்துச்செல்லப்படும்

சரக்குகளின் அளவு மிகவும் குறைவாக உள்ளது. கோவாவிலிருந்து இரும்புத்தாதுவும், மேற்குக் கடற்கரைப்பகுதியில் இருந்து வேதி உரங்களுக்கான மூலப் பொருள்களும் மட்டுமே அதிகமாக எடுத்துச்செல்லப்படுகின்றன. மற்ற வகையான போக்குவரத்துக்களுடன் போதுமான அளவில் ஒன்றிணைத்து உள்நாட்டு நீர் வழிப்போக்கு வரத்தை வளர்த்தெடுப்பதன் மூலம் சாலைகளிலும், ரயிலிலும் ஏற்படக்கூடிய நெரிசலையும், புகை வெளியெற்றத்தையும் மட்டுப்படுத்தமுடியும்.

**2. தகவல் தொடர்பு:**

உள்கட்டமைப்புச் சூழலில் தொலை தொடர்புத்துறை முக்கியமான பங்களிப்பைச் செய்கிறது. சமீபத்திய அலைகற்றை ஏலங்கள், அலைக்கற்றைப் பற்றாக்குறையை அகற்றி உள்ளன. நவீன கால கைபேசி, மின்னணு இந்திய ஆகியவற்றிற்கும், கிராமங்களிலும், உள்ளடங்கிய ஊர்களிலும் வசிப்பவர்கள் பயனடையவும், ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாவதற்கும் ஒரு உத்வேகத்தை அகன்ற அலைக்கற்றை தந்துள்ளது.

2017-18 இல் மொத்த ஒதுக்கீடு ரூ.26687 கோடி என முன்மொழியப்பட்டுள்ளது. இது 201617 பட்ஜெட் நிதி ஒதுக்கீடான ரூ.18414 கோடியைவிடவும் 45% அதிகம். 2016-17 திருத்திய மதிப்பீடான ரூ.24272 என்ற தொகையைவிடவும் 10% அதிகம்.

பாரத் நெட் எனப்படும் தேசிய அளவில் முக்கியத்துவம் உடைய ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வேறுபாடு இல்லாத நிலையில் பிணைப்பை அளித்து உள்கட்டமைப்பை அதிகமாக உயர்த்தி அகன்ற அலைக்கற்றை இணைப்பு கேட்டவுடன் கிடைக்கும் விதத்தில் எல்லா வீடுகளுக்கும், நிறுவனங்களுக்கும் ஏற்புடைய கட்டணத்தில் வழங்குவது இதன் நோக்கம். இதனால், மின்னணு இந்தியா சாத்தியப்படும். உலகிலேயே கண்ணாடிஇழைகளைப்பயன்படுத்தி ஊரக அலைக்கற்றை இணைப்பு வழங்கும் மிக பெரிய அமைப்பாக இது இருக்கும்.

பாரத் நெட் திட்டத்திற்கு 2017-18 இல் ஒதுக்கீடு ரூ.10ஆயிரம் கோடி. 2016-17 இன் திருத்திய மதிப்பீடான ரூ.6000 கோடியைவிடவும் இது அதிகம். 2017-18 இறுதியில் அதிவேக அகன்ற அலைக்கற்றை கண்ணாடி இழை இணைப்பு 1,50,000 கிராமப்பஞ் சாயத்துகளுக்குக் கிடைக்கும். வைபை வசதிகளும், மின்னணு சேவைகளை குறைந்த கட்டணத்தில் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் கூட கிட்டும். கண்ணாடி இழைத்தடம் (OPC) 1,55,000 கிலோ மீட்டர் தூரத்திற்கு பதிக்கப் பட்டுள்ளது. இதனுடன் சேர்த்து தொலைநிலைமருத்துவம், கல்வி, திறன் மேம்பாடு ஆகியவற்றை மின்னணு தொழில் நுட்பத்தின் மூலம் வழங்கக்கூடிய DIGI GAON எனும் முன் முயற்சியும் செயல் படுத்தப்படும்.

**3.எரிசக்தி:**

அ) மின்சக்தி: 2018 மேமுதல் நாளுக்குள் 100% கிரமங்களுக்கு மின் வசதி செய்து தரப்படுவதை உறுதி செய்யும் தடத்தில் அரசு சென்று கொண்டிருக்கிறது. தீன்தயாள் கிராம ஜோதி யோஜ்னாவிற்கு 2017-18 இல் கூடுதலாக ரூ.4814 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சூரிய சக்திப் பூங்கா உருவாக்கத்தில் இரண்டாவது கட்டம் 20 ஆயிரம் மெகவாட் கூடுதல் திறனுடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

மின்னணு சாதனங்கள் உற்பத்தியின் உலக மையமாக இந்தியாவை மாற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்னணுப்பொருள்கள் உற்பத்திக்கான 250க்கும் மேற்பட்ட முதலீட்டு முன்மொழிவுகள் கடந்த 2 ஆண்டுகளில் பெறப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த முதலீட்டு மதிப்பு ரூ.1.26 லட்சம் கோடி. உலக அளவில் தலை சிறந்து விளங்கும் உற்பத்தி நிறுவனங்களும், கைபேசி நிறுவனங்களும் இந்தியாவில் உற்பத்தி வசதிகளை உருவாக்கிகொள்ள முன்வந்துள்ளன. M-SIPS, EDF போன்ற ஊக்கத்திட்டங்களுக்கான ஒதுக்கீடு இதுவரை இல்லாத அளவுக்கு செய்யப்பட்டுள்ளது.

**ஆ) எண்ணெய் இயற்கை எரிவாயு:**

நவநாகரீகத்தின் உயிர் மூச்சு பெட்ரோலியம். வேளாண்மை, தொழில், போக்குவரத்துத் துறைகளுக்கு ஆற்றல் தரும் மூலமாக இது விளங்கிகிறது. இதன் காரணமாக பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத் துறைக்கு மிக பிரமாண்ட அளவிளான விரிவாக்கமும், இத்துறையில் வேலை வாய்ப்பும் இருக்கிறது. உள்கட்டமைப்பில் உதவக்கூடிய மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள

முறையான துறை இதுவாகும். வாகனப்போக்கு வரத்துப்பிரிவிலும், வீடுகளில் இருந்தும் உருவாகி வரும் இதற்கான தேவையின் பெருக்கம் மிக அதிகமாகும். இதனைக் கருத்தில் கொண்டும், இதன் தீர்ந்துபோகும் தன்மை, இது ஏற்படுத்தும் சூழல் மாசு ஆகியவற்றையும் மனதில் வைத்தும் பெட்ரோலியப்பொருள்களை திறமையாகவும், நீடித்துக் கிடைத்துவரும் விதத்திலும் பயன்படுத்திக் கொள்வதில் கவனம் திரும்ப வேண்டும்.

எரிசக்தித்துறையை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் மூலோபாய கச்சா எண்ணெய் கையிருப்புகளை அமைக்க முடிவு செய்துள்ளது. முதற்கட்டமாக இத்தகைய 3 கையிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்போது இரண்டாவது கட்டமாக, ஒரிசாவில் சண்டிகோல், ராஜஸ்தானில் பிக்கானெர் ஆகிய இரண்டு இடங்களில் எண்ணெய்க்குகைகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மூலோபாய கையிருப்புத்திறனை அதிகரிக்க இது உதவும்.

2017-18 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ.29158 கோடி. சென்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டை விடவும் இது குறைவு. 2016-17 இல் பட்ஜெட் ஒதுக்கீடு ரூ.29160 கோடி. திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.30241 கோடி. இவற்றைக்காட்டிலும் குறைவான நிதி ஒதுக்கப்பட்டிருப்பதற்கான காரணமெதுவும் பட்ஜெட்டில் குறிப்பிடப்பட வில்லை. ஏழைகளுக்கு சமையல் எரிவாயு வழங்கும் மத்திய அரசின் திட்டத்திற்கு 2017-18 இல் ரூ.2500கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2016-17 இல் இதற்கான ஒதுக்கீடு ரூ.2000 கோடி.

### 4. குடிநீரும் துப்புரவும்:

தூய்மை இந்தியா திட்டம் (கிராமம்), பாதுகாப்பு தரும் துப்புரவு, திறந்தவெளிகளில் சிறுநீர், மலம் கழித்தல் ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதில் மிகப்பெரிய முன்னேற்றத்தை கண்டுள்ளது. அக்டோபர் 2014 இல் 42% ஆக இருந்த துப்புரவு கிராமங்கள் இப்போது 60% ஆக அதிகரித்திருக்கின்றன. திறந்த வெளியில் மலம் கழிப்பதைக் கைவிடும் கிராமங்களுக்கு குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவதில் முன்னுரிமை தரப்படுகிறது.

இந்த திட்டத்தை மேலும் ஊக்குவிப்பதற்கு குடிநீரில் ஆர்சனிக், ப்ளூரைடு கலந்துள்ள 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்குப் பாதுகாகப்பட்ட குடிநீர் அடுத்த 4 ஆண்டுகளில் வழங்கும் திட்டம் உள்ளது. தேசிய ஊரகக் குடிநீர்த்திட்டத்தின் (NRDWP) துணைத்திட்டமாக இது செயல்படும். 2016-17 இல் ரூ.5000 கோடி ஒதுக்கீடு தரப்பட்டிருந்தது. 2017-18இல் இதற்கான ஒதுக்கீடு ரூ.6050 கோடி.

### ஒட்டுமொத்தக்கணிப்பு:

அனைத்தையும் சேர்த்துப்பார்க்கும் போது 2017-18 பட்ஜெட், இலக்குகளை அடைவதற்கு அரசுக்கு உள்ள நோக்கத்தை தெளிவாகக் காட்டுகிறது. குறிப்பிட்ட கால அளவிற்குள் வேகமாக இலக்கை அடைய வேண்டும் என்று அரசு விரும்புவதை மொத்த பட்ஜெட் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு உள்கட்டமைபிற்காக ஒதுக்கப்பட்டிருப்பது காட்டுகிறது. உள்கட்டமைப்புத்துறை உயர்ந்தெழ வேண்டுமானால் இலக்குகள் பேராவலுடன் எட்டப்படவேண்டும். இலக்கை அடையும் தீவிர முயற்சி பொருளாதாரத்தை ஊக்கப்படுத்தி, இளைஞர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்கி, வெளிநாட்டு முதலீடு கிடைக்கக்கூடிய சூழலை ஏற்படுத்தி, ஊரகப்பகுதிகளுக்கு புதிய வாழ்க்கையை வழங்கிடும்.

திட்டச்செலவுகள், திட்டங்களுக்குப் பிடிக்ககூடிய காலம், திட்ட ஆயத்தமும் அதற்கான ஒப்புதலும், நில ஆர்ஜிதம், சுற்றுசூழல் ஒப்புதல், சட்டங்கள் ஒழுங்குமுறைகள், அமைச்சகங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, திறமை உள்ள மனித ஆற்றல் கிடைகக்கூடிய நிலை, உடனடி நியமனங்கள், பாதுகாப்பு, நிதி தொடர்பான சிக்கல்கள், போன்ற பல பெரிய சவால்கள் இருப்பதால் உள்கட்டமைப்புத்துறையின் எழுச்சி அதே வேகத்திலேயே தொடரக்க்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது.

இலக்குகளை எட்டுவதற்கு பணம் செலவிட அரசு மிகக் குறைவான கால அளவையே தருகிறது. திட்டங்கள் தினசரி அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு அவைகளின் நிலை அந்தந்த வலைத்தளங்களில் அன்றாடம் பதிவேற்றப்படவேண்டும். இல்லாவிட்டால், உள்கட்டமைப்புத்துறை பழைய வளர்ச்சி நிலைக்கே மீண்டும் சென்றுவிடும்.

# 2017-18 மத்திய பட்ஜெட் : விருந்தினர் பகுப்பாய்வு

- N.R. பானுமூர்த்தி & A. ஸ்ரீஹரிநாயுடு
பொதுநிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனம், புதுடெல்லி

**அறிமுகம்**

அரசியல் சட்டப்பிரிவுகள் 112, 113, 114(3), 110 (a) ஆகிய பிரிவுகளின் கீழ் பட்ஜெட் என்பது இந்திய அரசின் கடமையாகும். வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது, இருப்புநிலை பற்றிய ஒரு குறிப்பாக மட்டுமே பட்ஜெட் என்பது முன்மொழியப் பட்டதாயினும், தற்போதுள்ள அரசாங்கங்கள் முக்கியமான கொள்கை முடிவுகளை, அதிலும் குறிப்பாக வரி உத்தேசங்களை அறிவிப்பதற்கான ஒரு தருவாயாக பட்ஜெட்டைப் பயன்படுத்திவருகின்றன.

இத்தகைய ஆண்டு நிகழ்வு, காலப்போக்கில் ஏராளமான மாற்றங்களைக் கண்டுவந்திருக்கிறது. இந்த ஆண்டும் கூட மூன்று முக்கியமான மாற்றங்கள் செய்யப்பபட்டன. மத்திய பட்ஜெட்டுடன் ரயில்வே பட்ஜெட் இணைக்கப்பட்டது, பட்ஜெட் சமர்ப்பிப்பு ஒரு மாதம் முன் கூட்டியே செய்யப்பட்டது, திட்டச்செலவினம், திட்டம் சாராத செலவினம் என்று இருந்த வேறுபாடு நீக்கப்பட்டது ஆகியவை இந்த மூன்று மாற்றங்கள் ஆகும். இந்த மாற்றங்கள் இந்த பட்ஜெட்டை பழைய பட்ஜெட்டுகளுடன் ஒரு சிறிது ஒப்பிட்டுப்பார்க்கச் செய்துள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. பட்ஜெட்டிற்கு முன்பாக பணமதிப்பிழப்பு, சரக்கு மற்றும் சேவைவரி மசோதா ஆகிய இரண்டு பெரிய கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டன. உலக அளவில் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உலகமயமாதலுக்கான எதிர் நிலைப்போக்குகள் அதிகரித்துவரும் நிலையிலும், கச்சா எண்ணெய் விலைஏற்றம், உலக அளவில் தாமதமாக ஏற்பட்டுவரும் பொருளாதார மீட்சி ஆகியவை இந்தியப்பொருளாதாரத்திற்கு கணிசமான ஒரு நிலையற்ற தன்மையை வழங்கிஉள்ளன.

இத்தகைய மிகப்பெரிய ஒரு நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியிலும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், பொருளாதாரத்தை உயிர்ப்பிக்கவுமான நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக பட்ஜெட் இருக்கும் என்று ஒரு பெரிய எதிர்பார்ப்பு நிலவியது. பட்ஜெட்டைப்பற்றி புரிந்துகொள்ளவும், பொருளாதாரத்தில் அதன் தாக்கம் பற்றி அலசிடவும் இங்கே ஒரு முயற்சி செய்யப்படுகிறது. நிதியமைச்சர் குறிப்பிட்டதைப்போல, மாற்றியமைப்பது, சக்தி ஊட்டுவது, தூய இந்தியாவை அமைப்பது (TEC INDIA) என்பது இந்த ஆண்டின் பட்ஜெட்டிற்குரிய நிகழ்ச்சிநிரல் ஆகும்.

**தற்போதைய பேரியல் போக்குகள்**

மத்திய புள்ளியியல் அலுவலகம் (CSO) இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (முன் கூட்டிய கணிப்பு) 201617 இல் 7.1% ஆக இருக்கும் என்று தெரிவிக்கிறது. இருந்தபோதிலும், இந்த CSO கணிப்பு பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட தாக்கத்தை கணக்கில் கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கிறது. பகுத்தாயும் பொருளாதார விமர்சிகர்கள் பலர் பணமதிப்பிழப்பின் காரணமாக 1 முதல் 2% வரை கீழிறங்கும் என்கின்றனர். GDP க்குள்ளேயும், வேளாண்துறை வளர்ச்சியில் உயர்வு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேவைத்துறையில் 9% அளவுக்கு வளர்ச்சி எதிர்நோக்கப்படுகிறது. தொழில் துறை 5.2% என்ற மிதமான வளர்ச்சியை எட்டும் (காண்க: அட்டவணை1)

CPI ஐ அடிப்படையாகக்கொண்ட பணவீக்கம் டிசம்பரில் 3.4% ஆக இருந்தது. இது ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ள கட்டளை இலக்கை விடவும் மிகவும் குறைவாகவே உள்ளது. வணிகத்தில் ஏற்றுமதி இறக்குமதி இரண்டுமே தொடர்ந்து வேகம் குன்றி இருப்பது கவலை அளிக்கிறது. நடப்புக்கணக்கில் 2016-17 நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பற்றாகுறை 0.3% என்ற அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. நிதி நிலையில் வருவாயில் உயர்வு தெரிகிறது. நிதிப் பற்றாக்குறை ஏப்ரல்நவம்பர் இலக்கில் 86% ஐ எட்டி இருக்கிறது. இதன் அடிப்படையில் பார்க்கும் போது 2016-17 இல் அரசாங்கம் 3.5% நிதிப்பற்றாகுறை இலக்கை தெளிவாக அடையும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

வங்கித்துறையில், பணமதிப்பிழப்பைத்தொடர்ந்து பணம் அதிகமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. வங்கிகள் கடன்/வைப்புத்தொகைகளுக்கன வட்டி விகிதத்தைக் குறைத்துள்ளன. இதனால், கடனுக்கான வேண்டுகோள்கள் கூடும். வளர்ச்சி அதிகரிக்கும்.

தற்போது முதலீடுகள் (GFCF) வளர்ச்சி 0.2 என்ற எதிர்மறை நிலையில் இருப்பது கவலை அளிக்கிறது. CMIE தரவுகளும் கூட புதிய திட்டங்கள் பற்றிய அறிவிப்புகள் பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு முந்தைய, பிந்தைய நாள்களில் 227 லிருந்து 177 ஆக வீழ்ச்சி கண்டுள்ளன என்று தெரிவிக்கிறது.

**அட்டவணை:1**

பேரியல் பொருளாதார சுட்டிக்காட்டிகள் சிலவற்றில் அண்மைக்கால போக்குகள்

| சுட்டிகாட்டி/ஆண்டு | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 PE | 2016-17 AE |
|---|---|---|---|---|---|
| GVA at basic prices (வளர்ச்சி விகிதம்) | 5.4 | 6.3 | 7.1 | 7.2 | 7.1 |
| GFCF(வளர்ச்சி விகிதம்) | 4.9 | 3.4 | 4.9 | 3.9 | -0.2 |
| ஒட்டுமொத்த உள்நாட்டு சேமிப்பு (as % of GDP) | 33.8 | 33 | 33 | - | - |
| வேளாண்மை (வளர்ச்சி விகிதம்) | 1.5 | 4.2 | -0.2 | 1.2 | 4.1 |
| தொழில் (வளர்ச்சி விகிதம்) | 3.6 | 5 | 5.9 | 7.4 | 5.2 |
| சேவைகள் (வளர்ச்சி விகிதம்) | 8.1 | 7.8 | 10.3 | 8.9 | 8.8 |
| பணவீக்கம் சிறிமி (annual average) | 10 | 9.4 | 5.8 | 4.9 | 3.41# |
| நடப்புக்கணக்குப் பற்றாக்குறை (as % of GDP) | 4.8 | 1.7 | 1.3 | 1.1 | 0.3* |
| ஏற்றுமதிகள் (வளர்ச்சி விகிதம்) | 6.7 | 7.8 | 1.7 | -5.2 | 2.2 |
| இறக்குமதிகள் (வளர்ச்சி விகிதம்) | 6 | -8.2 | 0.8 | -2.8 | -3.8 |
| வருவாய் பற்றாக்குறை (as % of GDP) | 3.7 | 3.2 | 2.9 | 2.5 | 2.3 |
| நிதி பற்றாக்குறை (as % of GDP) | 4.9 | 4.5 | 4.1 | 3.9 | 3.5 |

ஆதாரம்: பொருளாதார ஆய்வறிக்கை, 201617. * CAD 2016 ஆம் ஆண்டின் முதல் பாதிக்கானது, # டிசம்பர் 2016 தரவுகள்

**பட்ஜெட்டின் முக்கியமான அம்சங்கள்**

கடந்த ஆண்டில் திவால் சட்டங்கள், பணவீக்கத்தை நெகிழ்வுடன் குறிவைத்தல், நிதிகொள்கைக்குழு, ஆதார் சட்டம், GST போன்ற பல சீர்திருத்தங்களை மேற்கொண்ட பிறகு இந்த ஆண்டு பட்ஜெட்டில் பல பிரிவுகளுக்கும் மேலும் சில கொள்கை மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

**பாரம்பரியத் துறைகள்**

விவசாயிகளின் துயரங்களை அறுவடைக்கு முந்தைய துயரங்கள், அறுவடைக்காலத் துயரங்கள், அறுவடைக்குப்பிந்தைய துயரங்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். அறுவடைக்கு முந்தைய துயரங்கள் கடன்கள், உரம், நீர்ப்பாசனம் தொடர்பானவை. அறுவடைக்கால துயரங்கள் வறட்சி, வெள்ளம், இவற்றிற்கான காப்பீடுகள் போன்றவை. அறுவடைக்கு பிந்தைய துயரங்கள் என்பன சந்தைப்படுத்துதல், விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி, போக்குவரத்து ஆகியவற்றுடன் தொடர்புடையவை. நிலஉரிமைப்பத்திரங்களை கணினிமயமாக்குவது, ஊரக மின் வசதி, ஊரகப்பகுதிகளில் கண்ணாடி இழைத்தடம் பதிப்பது போன்ற கடந்த ஆண்டின் திட்டங்களைத் தொடர்ந்து மண்வள அட்டைகள், பயிர்க்காப்பீட்டுத்திட்டம், நீண்டகால நுண் நீர்ப்பாசன நிதியம், தேசிய வேளாண் மின்னணு சந்தை (eNAM) ஆகியவை முறையாக செயல்படுத்தப்பட்டால் இந்திய வேளாண்மையின் ஆபத்துக்கூறுகள் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மைக்கடனை 2017-18 க்கு ரூ.10லட்சம் கோடியாக பட்ஜெட் அதிகரித்துள்ளது. 2016-17 இல் இது ரூ.9 லட்சம் கோடியாக இருந்தது. நீண்ட கால நுண்ணீர்ப்பாசன நிதியத்திற்கு கூடுதல் ஆதரவாக ரூ.20ஆயிரம் கோடி வழங்கப்பட்டுள்ளது. சந்தைப்பகுதிகளில் ஆதாயம் தேடும் கும்பல்களைத் தவிர்க்கவும், இந்தியா முழுவதும் உள்ள வேளாண் சந்தைகளை ஒருங்கிணைக்கவும் தற்போதைய 250

சந்தைகளில் இருந்து 585 விவசாய விளைபொருள் விற்பனை மையங்கள் என விரிவுபடுத்தப்படும். குறிப்பாக, பால்பண்ணை, பழங்கள் காய்கறிகளில் ஒப்பந்த வேளாண்மைக்கு மாதிரி சட்டம் ஒன்றைக் கொண்டுவர அரசு கருதி இருக்கிறது.

### உள்கட்டமைப்பு

இந்தியாவில் அந்நிய முதலீடு, தனியார் முதலீடு ஆகியவற்றிற்கு மிகப்பெரிய பிரச்னையாக இருப்பது மோசமான உள்கட்டமைப்பாகும். உள்கட்டமைப்பு இடர்ப்பாடுகளை சரி செய்வதற்கு சாலைகள், மின்சாரம், மின்னணுகட்டமைப்பு ஆகியவற்றின் மீது பட்ஜெட் போதுமான கவனத்தை செலுத்தி இருக்கிறது. 100% கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதை அரசு 2018 மே முதல் நாளுக்குள் சாதித்துக்காட்ட எண்ணம் கொண்டுள்ளது. தீன்தயாள் உபாத்தியாய் கிராம் ஜோதி திட்டத்திற்கு ரூ.4814 கோடி ஒதுக்கீடு தரப்பட்டுள்ளது. பிரதம மந்திரி ஊரகச்சாலைகள் திட்டத்தின் (PMGSY) கீழ் 2011-14 இல் ஒரு நாளைக்கு 73 கிலோ மீட்டர் சாலை அமைத்து வந்த நிலை மாறி 2016-17 இல் ஒரு நாளைக்கு 133 கிலோ மீட்டர் தூர சாலை அமைக்க முடிந்திருக்கிறது. இந்தத்திட்டத்திற்கான ஒதுக்கீடு இந்த பட்ஜெட்டில் ரூ.19ஆயிரம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ரயில்வேக்கு ரூ.55 ஆயிரம் கோடி விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த போக்குவரத்துப்பிரிவுக்குமாக பட்ஜெட் ரூ.2.41 லட்சம் கோடியை வழங்கி உள்ளது. போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளிக்க அரசு முக்கிய கவனம் செலுத்துவது போலத்தெரிகிறது. இந்தத் துறையில் வேலைவாய்ப்புகள் தீவிரமானவையாக இருப்பதாலும் பிற துறைகளுடன் இதற்கு வலுவான பிணைப்பு இருப்பதாலும், செலவினத்தை அதிகரிப்பது உள்ளடக்கிய வளர்ச்சிக்கு உதவும்.

**அட்டவணை- 2: உள்கட்டமைப்பு ஒதுக்கீட்டின் போக்குகள்:**

| வகைகள் | 2015-16 | 2016-17 RE | 2017-18 BE |
|---|---|---|---|
| மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் | 38500 | 47499 | 48000 |
| பிரதம மந்திரி வீடு வசதித்திட்டம் | 20075 | 20936 | 29043 |
| பிரதம மந்திரி கிராமப்புற சாலைகள் திட்டம் | 19000 | 19000 | 19000 |
| அம்ருத் (AMRUT) | 7296 | 9559 | 9000 |
| இராணுவத்திற்கு கண்ணாடி இழை தடப்பிணைப்பு சேவைகள் | 2710 | 3210 | 3000 |
| பாரத் நெட் | 0 | 6000 | 10000 |
| மெட்ரோ திட்டங்கள் | 10000 | 15700 | 18000 |
| தீந்தயல் உபத்யாயா கிராமஜோதிதிட்டம் | 8500 | 7874 | 10635 |
| கடலோரச் சாலைகள் (சாகர்மாலா) | 450 | 406 | 600 |
| ஏழைகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு | 2000 | 2500 | 2500 |
| ரயிவேக்கு பட்ஜெட் ஒதுக்கீடு | 30121.2 | 35007.9 | 55000 |
| மொத்தம் | 138652.2 | 167691.9 | 187678 |

ஆதாரம்: பட்ஜெட் ஆவணங்கள்,இந்திய அரசு, 201718 மற்றும் பத்திரிகைதகவல் அலுவலகம் (PIB).

### பட்ஜெட்டும் பேரியல் பொருளாதாரமும்

இந்த பட்ஜெட்டின் மிக முக்கியமான கொள்கை முடிவுகளில் ஒன்று நிதி/வருவாய் பற்றாக்குறை இலக்குகள் பற்றியது. பின்னணியில் பன்னாட்டு மதிப்பீட்டு முகமைகளின் அழுத்தம் இருந்த போதிலும் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி அரசு 3% நிதிப்பற்றாக்குறையைப் பற்றி நிற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கு திஸிஙிவி குழு பரிந்துரைத்துள்ள புதிய பாதை என்ன என்பது தெளிவாக தெரியாதிருக்கும் நிலையில் பட்ஜெட் தனது நிதிப் பற்றாக்குறை இலக்கிலிருந்து விளிம்பு நிலையில் விலகி 3.2% என்ற (இலக்கு 3%) நிலையைப் பற்றி இருக்கிறது. வருவாய்ப் பற்றாக்குறை 2.3% லிருந்து 1.9% ஆக குறைக்கப்பட்டிருக்கிறது

என்பது முக்கியமானதாகும். எங்கள் பார்வையில் இது நிதி பலப்படுத்துதலில் முரணற்ற சீரான விரிவாகமாகவே தெரிகிறது. இருப்பினும், 2023 வாக்கில் அரசின் நடுத்தர காலக்கடன் வழியை 60% ஆக (மத்திய அரசு 40% மாநிலம் 20%) இருக்குமாறு பார்த்துக்கொள்ள FRBM குழு யோசனை கூறியிருப்பதாகத் தோன்றுகிறது. இந்த யோசனை பானுமூர்த்தியும் மற்றவர்களும் (2015) செய்திருக்கும் மதிப்பீடுகளுக்கு மிக நெருக்கமாகவும், முரணற்றும் இருக்கிறது. இத்தகைய பாதை நடுத்தர கால வளர்ச்சியை சாதிக்கவும், வளர்ச்சி இலக்குகளை எட்டவும் நிதி வெளியை நிச்சயம் வழங்கவேண்டும்.

### கொள்கைகளும் வருவாய்த் திரட்டும்

GST, பணமதிப்பிழப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து, வரிகட்டுபவர்களின் எண்ணிக்கை கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. வரிவருவாயில் பட்ஜெட்டின் எண்களை இந்த எதிர்பார்ப்பு வழி நகர்த்தி உள்ளது போலத் தெரிகிறது. வரிவருவாய் 1.4 க்கும் அதிகமாக இருக்கும் என்று அது உள்ளார்ந்து யூகிக்கிறது. 2003-07 காலகட்டத்தில் வரித்தகவல் பின்னலைமைப்பு (TIN) அறிமுகப்படுத்தப்பட்டபோது இந்தியா கண்ட மிதப்பை ஒத்ததாக இது இருக்கிறது. மூலதன வரவுகளில் கடந்த 5 ஆண்டுகளை ஒத்த நிலையில் பட்ஜெட் ரூ.72500 கோடியை பிற வரவுகளில் பாவனை செய்கிறது. (பெரும்பகுதி பங்குகளை விற்பனை செய்ததில் இருந்து கிடைத்தது). இது கடினமான பணியாக இருக்கும் என தெரிகிறது. அதேபோலவே சந்தையில் இருந்துபெற்ற கடன்களுக்காக சரிகட்டிய பிறகு அரசு தன்னுடைய பணக்கையிருப்பில் 2 லட்சம் கோடி அளவுக்கு இழுப்பை எதிர்பார்க்கிறது. இந்த அனுமானங்களை மெய்ப்படுத்துவதென்பது GDP வளர்ச்சி 2017-18இல் 11.75% ஆக இருக்கவேண்டும் என்ற அனுமானத்தின் மீது தான் அமைகிறது. 2016-17இல் இது11% ஆக இருந்தது. ஜூலை 1 முதல் அமல்படுத்தப்படுவதைச் சார்ந்தும் GST விகிதங்களைச் சார்ந்துமே இருக்கிறது.

நேரடி வரிகளைப்பொறுத்தவரை, பொருளாதார ஆய்வறிக்கை குறிப்பிடுவதைப்போல 100 பேரில் 7 பேர் மட்டுமே வரி செலுத்துகின்றனர். வரி செலுத்துவோர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு கீழ் அடுக்கில் இருப்பவர்களுக்கு வருமான வரியை 5% ஆக பட்ஜெட் குறைத்துள்ளது. எங்கள் பார்வையில் இந்த ஏற்பாடு அதிகமானோரை வரிசெலுத்தும் வலைக்குள் கொணரும். வருமான வரி விகிதங்களில் நிலையற்ற தன்மையையும் இது உருவாக்கும். வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்வது எளிமைபடுத்தப்பட்டிருப்பதும் மின்னணு கணக்குத்தாக்கல் முறைகளும் பிற சீர்திருத்த முயற்சிகளாகும்.

### வங்கிச் சிக்கலும் செயல்படாதநிலையில் உள்ள சொத்துக்களும்

இந்தியாவில் தனியார் முதலீடு பற்றாக்குறையாக இருப்பதற்கு வங்கித்துறையில் உள்ள இரட்டை இருப்புநிலைக்குறிப்புச் சிக்கல் முக்கிய காரணமாகும். பணமதிப்பிழப்பு நடவடிக்கை மலிவான வைப்புகளைத் திரட்டவும், வங்கி இருப்பு நிலைகளை சரிப்படுத்திக்கொள்ளவும் உதவியிருக்கக்கூடும். மறு மூலதன ஆக்கத்தின் மூலம் பட்ஜெட் வங்கிகளுக்கு உதவும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. பட்ஜெட்டில் கடந்த ஆண்டு ரூ.25 ஆயிரம் கோடி தரப்பட்டிருந்தது. இந்த ஆண்டு ஒதுக்கீடு ரூ.10 ஆயிரம் கோடி. பொதுத்துறை வங்கிகளில் செயல்படாத நிலையில் உள்ள சொத்துக்கள் அதிகரித்துள்ள நிலையிலும் இப்படி ஒதுக்கீடு நடந்துள்ளது. வங்கிகளுக்கு இது அதிகம் உதவாது. எனினும், திவால் சட்டம், கடன் வசூல் தீர்ப்பாயம், SARFESI சட்டத்தில் திருத்தம், வங்கிக்குழு, இந்திரதனுஷ் திட்டம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பது வங்கிகளுக்கு நீண்ட கால அடிப்படையில் உதவ வேண்டும்.

### பணமதிப்பிழப்பும் பட்ஜெட்டும்

பணமதிப்பிழப்பை அடுத்து பொருளாதாரத்தின் சில பிரிவுகளில் சில இடையூறுகளும் சில சுருக்கங்களும் நேரிட்டுள்ளது போலத் தெரிகிறது. SIAM தரவுகளின்படி வாகனங்களின் விற்பனை டிசம்பர் 2016இல் 18.66% சரிந்துள்ளது. பெரும்பாலும் பணம் செலுத்தி வாங்கப்படும் இரு சக்கர வாகனங்கள், 3 சக்கர வாகனங்களின் விற்பனை முறையே 22.04%, 36.23% என்ற அளவுக்கு குறைந்துள்ளது. KNIGHT FRANK தரவுகளின் படி, வீடுமனை, வீடுகளின் விற்பனை 2016 கடைசி 3மாதங்களில் 50% க்கு மேல் குறைந்துள்ளது. பணமதிப்பிழப்பு ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதகமான விளைவை 0.25% முதல்1% வரை ஏற்படுத்தும் என்று பொருளாதார ஆய்வறிக்கை கணித்துள்ளது.

மறுபக்கம், குறைவான GDP வளர்ச்சி இருந்தபோதிலும் பணமதிப்பிழப்பிற்கு பிறகு வரி வருவாய் கணிசமாக அதிகரித்துள்ளது. மாநகராட்சி வரி (4.4%), வருமான வரி (24.6%), மத்திய கலால்

வரி (43%), சேவைவரி (23.9%) சுங்கவரி (4.1%). பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்குப்பிறகு வரி செலுத்துவோரின் எண்ணிக்கை கூடி இருக்கிறது என்பதை இதற்கு ஒரு விளக்கமாகக் கொள்ளலாம். கணக்கில் காட்டப்படாத வரவு செலவுகளைசிறந்த முறையில் கண்காணித்து வரி ஏய்ப்பையும், வரி தவிர்ப்பையும் குறைத்திருந்தாலே இது நடந்திருக்கும். பொருளாதார ஆய்வறிக்கை, தேசிய செலவினக்கழகம் (NPCI) இவற்றின் கூற்றுப்படி ரூபே அட்டையைக்கொண்டு செய்யப்படும் பரிமாற்றம் விற்பனை முனையக்கருவிகளில் ரூ.13 ஆயிரம் கோடி அளவுக்கும், மின்னணு வணிகத்தில் ரூ.20 ஆயிரம் கோடி அளவுக்கும் கடந்த சில மாதங்களில் அதிகரித்துள்ளது தெரிகிறது.

இது தவிர, பணப்பரிமாற்றம் நிகழும் வரை கருப்புப்பணத்தைக் கட்டுபடுத்தமுடியாது என்ற பொதுவான பார்வையும் இருக்கிறது. இதற்கு ஒரு கூடுதல் நடவடிக்கையாக 3 லட்சத்திற்கும் அதிகமான பணப்பரிமாற்றத்திற்கு வரிவிதிப்பை பட்ஜெட் முன்மொழிந்துள்ளது. இதன் மூலம் காலஓட்டத்தில் பொருளாதாரம் ரொக்கமில்லாப் பரிவர்த்தனைகளுக்கு அதிகமாக மாறும். இதனால், வரி கட்டுவோரும் அதிகரிப்பர். கருப்புப்பணம் வீழ்ச்சி காணும்.

**பட்ஜெட்டும் மின்னணு பொருளாதாரமும்**

பொருளாதாரத்தை ரொக்கத்திலிருந்து ரொக்கமில்லாநிலைக்கு மாற்ற பரிமாற்றக் கட்டமைப்பில் கணிசமான வளர்ச்சி இருக்க வேண்டும். இதில் இந்தியா 3 முக்கியமான சவால்களை எதிர்கொண்டு வருகிறது. மின்னணு பரிமாற்றப்பாதுகாப்பு, மின்னணு கட்டமைப்பு, மின்னணு பணப்பரிமாற்றத்திற்காகும் செலவு ஆகியவை இவை. இதில் முதல் 2 பிரச்னைகளை பட்ஜெட் எதிர்கொள்ள முயன்றிருக்கிறது.

மின்னணு சேவையில் பாதுகாப்பு : அதிகரித்து வரும் சைபர் குற்றங்களிலிருந்து நிதித் துறையின் நேர்மைத்தன்மையையும், நிலைத்தன்மையையும் பாதுகாக்க நிதித்துறைக்கான கணினி அவசர கால எதிர்வினைக்குழு (ERT FIN) என்பதை பட்ஜெட் முன்மொழிந்துள்ளது.

மின்னணு கட்டமைப்பு : மின்னணு உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், பாரத்நெட், டிஜிகாவோன், திருத்தப்பட்ட சிறப்பு ஊக்கத்தொகுப்புத் திட்டம் (M - SIPS) ஆகியவற்றிக்கு பட்ஜெட் ஒதுக்கீடு அதிகரித்துள்ளது. இந்தக் கொள்கைகள் மின்னணு உள்கட்டமைப்பை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**உள்ளடக்கிய வளர்ச்சியை பட்ஜெட் உறுதிசெய்யுமா?**

வேலை வாய்ப்புகள் அதிகரிக்க கூடிய வகையில் வளர்ச்சியை எப்படி சாதிப்பது என்பது இந்தியா சந்தித்து வரும் சவால். இதற்காக, உற்பத்திப்பங்கை 25% அதிகரிப்பதற்கு மத்திய கால இலக்காக இருக்கிறது. உற்பத்தித்துறை வளர்ச்சியில் காணப்படும் அண்மைப்போக்கு ஒரு பெரிய சவாலாக எழுகிறது. வேலை வாய்ப்பு அதிகமாக உள்ள வீட்டுவசதி, சுற்றுலா, சாலைகள், பிற உள் கட்டமைப்புகளில் ஒரு பகுதியில் கவனம் செலுத்துவதன் மூலம் இந்த பிரச்னையை அணுக பட்ஜெட் முயற்சிக்கிறது. நிலம், தொழிலாளர் போன்றவர்களில் கொள்கை சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. இதனை பட்ஜெட் குறிப்பிடவே இல்லை.

**முடிவுரை** :

ஒட்டுமொத்தமாக, உள்நாட்டு, அயல்நாட்டுப் பொருளாதாரங்களில் நிச்சயமற்ற தன்மைகள் நிலவும் சூழலில் மத்திய பட்ஜெட் நாட்டின் வளர்ச்சியை மறுமலர்ச்சி அடைய செய்யும் கூறுகள் மீது கவனம் செலுத்தியுள்ளது. குறிப்பாக நீண்டகாலமாக இருந்து வந்த வெற்றிகாணாத நடைமுறையான ஊக்கத்தொகை வழங்குவது என்ற முறைக்கு மாறாக வளர்ச்சி வழி முறையின் பக்கம் கவனம் அதிகமாக திரும்பியுள்ளது ஆயினும் இத்தகைய முயற்சிகள் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டங்களும் இதனுடன் சேரவேண்டும். நடுத்தர காலவளர்ச்சியையும், வளர்ச்சி இலக்குகளையும் அடைவதில் இதற்கு அதிகமான பங்கு இல்லாவிடினும் சமமான பங்கு உண்டு.

மின்னஞ்சல்:nrbmurthy@gmail.com; hari.nayudu@nipfp.org.in

•

# நடைமுறை சாத்தியம் கொண்டுள்ள மத்திய பட்ஜெட் 2017

- பேராசிரியர் சரண்சிங்


IIM பெங்களூர், பொருளாதார இருக்கை பேராசிரியர்

பட்ஜெட் என்பது நிதிக்கொள்கையின் மாபெரும் ஒரு அங்கமாகும். பெரும் பண்புக்கூறுகளைக் கொண்டிருக்கும் பொருளாதாரக் கொள்கையின் நோக்கமும் நீடித்த வளர்ச்சி என்பதாகவே இருக்கும். நிதிக்கொள்கை, பணக்கொள்கை ஆகியவற்றை செயல்படுத்துவதன் மூலமே இதனை அடைய முடியும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நாடு செழிப்பதற்கு உகந்த வேலைச்சூழலை உருவாக்கி வாய்ப்பை அதிகரிப்பதும், நீடித்த வளர்ச்சியை உறுதிசெய்வதும் நிதிக்கொள்கையின் நோக்கம் ஆகும். நிதிக்கொள்கை வளர்ச்சியை மேம்படுத்துவது, வேலை வாய்ப்பை உருவாக்குவது ஆகிய நோக்கங்களைக் கொண்டதாக இருப்பதால், சிறந்த கல்வியை உறுதிப்படுத்தவும், திறன்களை உருவாக்கவும், பொது சுகாதார அமைப்புகளின் திறமையான செயல்பாட்டால் ஆரோக்கியமான பணியாளர்களை உருவாக்கவும், வலுவான கட்டமைப்பை உருவாக்கி வணிகத்திற்கு உதவவும், பாதுகாப்பு அமைப்புகளின் துணைகொண்டு உடமைகளைப் பாதுகாக்கவும், நிர்வாகத்திற்கும், நீதிபரிபாலனத்திற்குமென பலவிதமான கருவிகளைப் பயன்படுத்துகிறது. அரசின் அடிப்படையான பொறுப்புகளை நிறைவேற்றத் தேவைப்படும் அவசியமான செலவுகளுக்கு நிதி அளிப்பதற்கு, அரசாங்கம் நேரடி, மறைமுக வரிவிதிப்புகளின் மூலமும், பொதுத்துறை நிறுவனங்களின் ஈவுத்தொகை, லாபத்தொகை மூலமும், இறுதிப்புகலிடமாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கிடைக்கக்கூடிய நீண்ட கால கடன்களின் மூலமும் நிதி ஆதாரங்களைத் திரட்டவேண்டி இருக்கிறது. நிதி ஆதாரங்களைத் தேடித்திரட்டுவதும், அதனைச் செலவிடுவதும் வேலை, நுகர்வு, சேமிப்பு, ஓய்வுநேரமும் முதலீடும், நிதிகொள்கை ஆதிக்கவரம்பு அகியவற்றில் தாக்கங்களை உண்டாக்குகிறது. இடர்ப்பாடு மிகுந்த உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழலில் சமீபத்திய மத்திய பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தியாவில் நவம்பர் 8 ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை ஏற்படுத்தி இருக்கும் தாக்கத்தைப்பற்றி ஆராயவேண்டி இருக்கிறது. உண்மையில் பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் மூலம் பெறப்பட்டுள்ள பணத்தின் மதிப்பை இந்திய ரிசர்வ்வங்கி இன்னமும் உறுதிப் படுத்தவில்லை. பணமதிப்பிழப்பால் தொழில், வணிகத்துறைகளில் ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் பற்றியும் தெளிவாகத் தெரியவில்லை. மேலும், சுதந்திரத்திற்குப் பிறகான இந்தியாவில் மிக முக்கியமான வரிவிதிப்பு சீர்திருத்தங்களை GST என்ற வடிவில் அறிமுகம் செய்யும் கூரிய முனையின் மேல் இந்தியா இருக்கிறது. வெளி உலகில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி மந்தமாகவும், தேக்கநிலையிலும் உள்ளது. எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது. பாதுகாக்கும் விதத்திலான கொள்கைகள் வலுப்பெற்று வருகின்றன. UK BREXIT மற்றும் ஐரோப்பாவின் பிற அரசியல் நிலைமைகளும் அமெரிக்காவில் உலகமயமாதல் கொள்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களும், நிலையற்ற தன்மையையும், கட்டுக்கோப்பான திட்டமிடலுக்கான சங்கடங்களையும் மேலும் அதிகமாக்கி வருகின்றன.

சமீபத்திய பட்ஜெட்டிற்கான நிகழ்ச்சிநிரல், இந்தியாவை மாற்றியமைத்து இயங்கச்செய்யும் தூய இந்தியாவிற்கானது. பட்ஜெட் கருத்துருக்கள் பத்து வெவ்வேறுபட்ட ஆய்வுப்பொருள்களில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. விவசாயிகள், கிராமப்புறங்கள், இளைஞர்கள், ஏழைகளும் விளிம்புநிலை மக்களும், கட்டமைப்பு, நிதித்துறை, மின்னணுப்பொருளாதாரம், பொதுச்சேவை, கவனமுள்ள நிர்வாகம், வரி மேலாண்மை போன்றவை அவை.

**நிதிநிலையைத் திடப்படுத்துதல்:**

தடங்கல்களுக்கு மத்தியிலும், நிதி திடமாக்கலையும், பற்றாக்குறைகள் அனைத்தும் சுருங்கிக்கொண்டுவருவதையும் அனுசரித்து பட்ஜெட் நடக்கிறது. (படம் 1)




**படம் 1: முக்கியமான பற்றாக்குறைகள்:**

ஆதாரம்: வருவாய் போக்குகள், மத்திய பட்ஜெட் 2017 - 18, இந்திய அரசு

வருவாய்ப்பற்றாக்குறையையும் ஒட்டுமொத்த நிதிப்பற்றாக்குறையையும் வெற்றிகரமாக சுருக்கவேண்டும் என்று அரசாங்கம் முயற்சித்தது. எனினும், GDP சதவீதமாக மூலதனசெலவினம் குறைவாகவும், அதே நேரத்தில் வருவாய் வரவைக்காட்டிலும் வருவாய் செலவினம் அதிகரித்தும் இருந்துவிட்டது.(அட்டவணை 1)

அட்டவணை 1: மத்திய பட்ஜெட் சுருக்கம்

| வருவாய் | 2016-17 (RE) | 2017-18 (BE) | செலவினம் | 2016-17 (RE) | 2017-18 (BE) |
|---|---|---|---|---|---|
| வருவாய் வரவு | 9.4 | 9.0 | வருவாயில் செலவு | 11.5 | 10.9 |
| வருவாயில் செலவு - வருவாய் வரவு = வருவாய் பற்றாக்குறை | | | | 2.1 | 1.9 |
| மூலதன வரவு | 3.9 | 3.8 | மூலதனச் செலவு | 1.9 | 1.8 |
| மொத்த செலவு - மொத்த வரவு = மொத்த நிதி பற்றாக்குறை | | | | 3.5 | 3.2 |

ஆதாரம்: மத்திய பட்ஜெட் 2017 - 18, இந்திய அரசு

இந்தியாவில் திட்டகாலங்களின் தொடக்கத்தில் இருந்து பொதுவான போக்கு பற்றி பகுத்தாராயும்போது, மூலதன முதலீடு என்பது வேகத்தை குறைக்கும் ஒரு சாதனமாக இருந்து மற்ற கூறுகளில் ஏற்படக்கூடிய அதிர்வுகளை உள்வாங்கிக் கொள்ளும் என்றும், 1960களில் இருந்து அது சுருங்கிவருகிறது என்றும் தெரிவித்தது. (அட்டவணை 2)

அட்டவணை 2: வருவாய், மூலதனக்கணக்கு உட்கூறுகள் GDP சதவீதத்தில்:

| ஆண்டு | வருவாய் வரவு | மூலதன வரவு | வருவாய் செலவு | மூலதன செலவு |
|---|---|---|---|---|
| 1950-51 | 3.90 | 1.16 | 3.34 | 1.76 |
| 1960-61 | 4.89 | 6.44 | 4.60 | 5.74 |
| 1970-71 | 6.91 | 4.29 | 6.57 | 5.24 |
| 1980-81 | 8.27 | 5.29 | 9.63 | 5.59 |
| 1990-91 | 9.37 | 6.65 | 12.54 | 5.42 |
| 2000-01 | 8.85 | 6.16 | 12.76 | 2.19 |
| 2010-11 | 10.13 | 5.17 | 13.37 | 2.01 |
| 2011-12 | 8.60 | 6.51 | 13.12 | 1.82 |
| 2012-13 | 8.84 | 5.85 | 12.50 | 1.68 |
| 2013-14 | 9.00 | 5.00 | 12.17 | 1.66 |
| 2014-15 | 8.82 | 3.88 | 11.75 | 1.57 |
| 2015-16 | 8.75 | 3.97 | 11.26 | 1.85 |
| 2016-17 (RE) | 9.44 | 3.92 | 11.51 | 1.86 |
| 2017-18 (BE) | 9.00 | 3.75 | 10.90 | 1.84 |

ஆதாரம்: i) இந்தியப் பொருளாதாரப் புள்ளி விவரக்கையேடு, ரிசர்வ் வங்கி.

ii) மத்திய பட்ஜெட் 2017 - 18, இந்திய அரசு

வட்டிச்செலவு, மானியம், ஓய்வூதியம் ஆகிய செலவினங்கள் வருவாயில் பாதிக்குமேல் ஆகின்றன. (அட்டவணை 3)

அட்டவணை 3: வருவாய் பட்ஜெட் (GDP சதவீதத்தில்)

| வருவாய் வரவு | | | வருவாயில் செலவு | | |
|---|---|---|---|---|---|
| உட்கூறுகள் | 2016-17 (RE) | 2017-18 (BE) | உட்கூறுகள் | 2016-17 (RE) | 2017-18 (BE) |
| மாநகராட்சிவரி | 3.3 | 3.2 | வட்டிச்செலவு | 3.2 | 3.1 |
| வருமான வரி | 2.3 | 2.6 | மானியம் | 1.7 | 1.6 |
| சுங்கத்தீர்வை | 1.4 | 1.5 | ஓய்வூதியம் | 0.9 | 0.8 |
| மத்தியசுங்கத்தீர்வை | 2.6 | 2.4 | | | |
| சேவை வரி | 1.6 | 1.6 | | | |
| ஈவுத்தொகை, லாபம் | 1.0 | 0.8 | | | |
| மொத்தம் | 9.48* | 9.0* | மொத்தம் | 11.5 | 10.9 |

மொத்த மாநில வரி வருவாய்

ஆதாரம்: வருவாய் போக்குகள், மத்திய பட்ஜெட் 2017 - 18, இந்திய அரசு

1970-71 முதலான வருவாய் போக்கு பற்றிய ஆய்வு ஈவுத்தொகை உட்பட வரியல்லாத வருவாய் தேக்கநிலையிலும், வரி வருவாய் லேசான அதிகரிப்பையும் கொண்டதாக இருந்ததைக் காட்டுகிறது. (அட்டவணை 4)

அட்டவணை 4: முக்கியமான நிதிக்குறியீடுகள் (GDP சதவீதத்தில்)

| ஆண்டு | மொத்த வரி வருவாய் | வரியல்லாத வருவாய் | வருவாய் வரவு |
|---|---|---|---|
| 1970-71 | 5.2 | 1.8 | 6.9 |
| 1980-81 | 6.3 | 2.0 | 8.3 |

| | | | |
|---|---|---|---|
| 1990-91 | 7.3 | 2.0 | 9.4 |
| 2000-01 | 6.3 | 2.6 | 8.9 |
| 2014-15 | 7.2 | 1.6 | 8.8 |
| 2015-16 | 6.9 | 1.8 | 8.8 |
| 2016-17 (RE) | 7.2 | 2.2 | 9.4 |
| 2017-18 (BE) | 7.3 | 1.7 | 9.0 |

ஆதாரம்: வருவாய் போக்குகள், மத்திய பட்ஜெட் 2017 - 18, இந்திய அரசு

### உலக நாடுகளுடன் ஒப்பீடு

பிரச்னைகளுக்கு மத்தியிலும் கூட உலகப்பொருளாதாரத்தில் இந்தியா சிறப்பாக செயல்பட்டு போதுமான நிதிவெளியைப் பெற்றுள்ளது.

அட்டவணை 5: மொத்தக்கடன் GDP சதவிகிதமாக

| நாடுகள் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரேசில் | 60.4 | 63.3 | 73.7 | 78.3 | 82.4 | 85.2 | 87.9 | 90.8 | 93.6 |
| சீனா | 36.9 | 39.8 | 42.9 | 46.3 | 49.9 | 52.6 | 54.6 | 56.1 | 57.2 |
| ஃபிரான்ஸ் | 92.4 | 95.3 | 96.1 | 97.2 | 97.8 | 97.9 | 97.4 | 95.9 | 93.8 |
| ஜெர்மனி | 77.1 | 74.5 | 71.0 | 68.2 | 65.9 | 63.6 | 61.1 | 58.9 | 56.7 |
| இந்தியா | 68.0 | 68.3 | 69.1 | 68.5 | 67.2 | 65.6 | 63.5 | 61.4 | 59.2 |
| இந்தோனேசியா | 24.8 | 24.7 | 27.3 | 27.5 | 28.2 | 29.2 | 29.9 | 30.4 | 30.9 |
| ஜப்பான் | 244.5 | 249.1 | 248.0 | 250.4 | 253.0 | 254.9 | 254.7 | 254.5 | 253.9 |
| ரஷ்யா | 13.1 | 15.9 | 16.4 | 17.1 | 17.9 | 18.6 | 19.1 | 18.9 | 18.5 |
| தென் ஆப்ரிக்கா | 44.0 | 46.9 | 49.8 | 51.7 | 53.3 | 54.6 | 55.4 | 55.9 | 56.2 |
| இங்கிலாந்து | 86.0 | 87.9 | 89.0 | 89.0 | 88.8 | 88.6 | 86.6 | 84.3 | 82.1 |
| அமெரிக்கா | 104.6 | 104.6 | 105.2 | 108.2 | 108.4 | 107.9 | 107.8 | 107.9 | 108.3 |

ஆதாரம்: உலகப்பொருளாதாரப்பார்வை அறிக்கை - அக்டோபர், 2016

### மத்திய பட்ஜெட்டின் தொடர்புநிலைகள்

அட்டவணை 6 இல் ஆராயப்பட்டதைப்போல பட்ஜெட் வளர்ச்சியை சார்ந்ததாகவும், வேலை வாய்ப்பை உருவாக்குவதாகவுமிருக்கிறது.

அட்டவணை 7 : பட்ஜெட்டின் பிணைப்பு ஆதாரம்: மத்திய பட்ஜெட் உரை 2017-18.

| விவரங்கள் | வளர்ச்சி | வேலைவாய்ப்பு | நுகர்வு | மூலதனம் |
|---|---|---|---|---|
| விவசாயக்கடன் ரூ. 10 லட்சம் கோடி. | ✓ | | | ✓ |
| நீண்டகால நீர்ப்பாசன நிதி ரூ. 40,000 கோடி. | ✓ | | | ✓ |
| மஹாத்மா காந்தி ஊரகவேலைவாய்ப்புத் திட்டம் ரூ.48,000 கோடி. | ✓ | ✓ | ✓ | |
| கிராமச்சாலைகள் திட்டம் ரூ. 27,000 கோடி. | ✓ | ✓ | | ✓ |
| ஆவாஸ்யோஜ்னா ரூ.23, 000 கோடி. | ✓ | ✓ | | ✓ |
| ரயில்வே ரூ. 1.3 லட்சம் கோடி. | ✓ | ✓ | | ✓ |
| நெடுஞ்சாலை ரூ. 64,900 கோடி. | ✓ | ✓ | | ✓ |
| போக்குவரத்துப்பிரிவு ரூ. 2.4 லட்சம் கோடி. | ✓ | ✓ | | ✓ |
| முத்ராயோஜ்னாஇலக்கு ரூ. 2.4 லட்சம் கோடி. | ✓ | ✓ | | ✓ |

உலகளாவிய நிலையில் வளர்ச்சி என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மாற்றம், வளர்ச்சி, தூய்மை ஆகிய நோக்கங்களில் அரசாங்கம் தீவிர முனைப்பு காட்டிவருகிறது என்ற நம்பிக்கையைப் பெறுவது அவசியமாகிறது. சந்தையில் நம்பகத்தன்மையை விதைப்பதற்கு அரசாங்கம் தொடர்ச்சியான பல நடவடிக்கைகளை அறிவித்துவருகிறது. (அட்டவணை 7)

அட்டவணை 7: நம்பிக்கை அளிக்கும் நடவடிக்கைகள்

| விவரங்கள் | வளர்ச்சி | கணக்கில்வராத தொகை | நம்பிக்கை |
|---|---|---|---|
| பங்குச்சந்தையில் ரயில்வே PSEகளின் பங்குகள். | ✓ | | ✓ |
| வங்கிகளுக்கு மறுமுதலீடு ரூ.10,000 கோடி | ✓ | | ✓ |
| 60%. GDPக்கு கடன் | ✓ | | ✓ |
| அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 3% நிதி பற்றாக்குறை | ✓ | | ✓ |
| ஆண்டு விற்றுமுதல் ரூ.50 கோடி வரை உள்ளவர்களுக்கு வரிச்சலுகை | ✓ | | ✓ |
| மார்ச் 2017 வாக்கில்10 லட்சம் புதிய விற்பனை முனையக்கருவிகள் | ✓ | ✓ | ✓ |
| ரூ. 3 லட்சம் வரை ரொக்கப்பரிமாற்றம் | ✓ | ✓ | ✓ |
| அரசியல்கட்சிகளுக்கு நிதி அளிப்பதில் கட்டுப்பாடு | ✓ | ✓ | ✓ |

ஆதாரம்: மத்திய பட்ஜெட் 2017 - 18, இந்திய அரசு

### முக்கியமான சில பிரச்சினைகள்

பட்ஜெட் என்பது வெறும் வரவுசெலவு கணக்கு மட்டுமல்ல. நிதிக்கொள்கையில் ஒரு பெரிய கொள்கை ஆவணமாகும். சமீபத்திய பட்ஜெட்டில் பலவிதமான விஷயங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

### வரிகட்டுவதைத் தவிர்க்கும் தேசம்

வரி கட்டுவதை பெரும்பாலும் தவிர்க்கும் ஒரு தேசமாக இந்தியா இருக்கிறது என்று நிதி அமைச்சரே தெரிவித்துள்ளார். (அட்டவணை 8, 9) மத்திய, மாநில அரசுகள் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் மொத்த வரி வருவாய் (வெவ்வேறு மாநிலங்களின் உள்ளாட்சி அமைப்புகளின் வரி வருவாய் பற்றிய சீரான தரவுகள் இல்லாத நிலையில்) GDPஇல் 18 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கிறது. மிகவும் வளர்ந்த நாடுகளில் இது 30 விழுக்காடு ஆக இருக்கிறது. இருப்பினும், இந்தியாவின் 30 விழுக்காடு மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் இருக்கும் நிலையில், ஏறத்தாழ 60 விழுக்காடு மக்கள் ஊரகப்பகுதிகளில் விவசாய வருமானத்தை சார்ந்து வாழ்ந்து வரும் நிலையில் (விவசாய வருவாய்க்கு வரி இல்லை) நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் சங்கடங்கள் இருக்கின்றன என்பது வெளிப்படை. அதோடு கூட, சுங்கத்தீர்வை கட்டவேண்டிய பொருள்களுக்கு அதில் இருந்து விலக்கு தரப்பட்டிருக்கிறது. மேலும் வரி விதிப்புதான் வருவாய்க்கான அடிப்படை என்றாலும் இலங்கை, மெக்சிகோ, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய வளர்ந்துவரும் நாடுகளின் வரி வருவாய், வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 8 இந்தியாவின் இணக்கப்பட்டியல்

| வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| முறைசார்ந்த பிரிவுகளில் ஈடுபட்டிருப்போர் | 4.2 கோடி |
| சம்பள வருவாய்க்கு கணக்கு சமர்ப்பிக்கும் தனி நபர்கள் | 1.7 கோடி |
| முறைசாராத தனிப்பட்ட நிறுவனங்கள் | 5.6 கோடி |
| சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 1.8 கோடி |
| பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் | 13.9 லட்சம் |
| கணக்கு சமர்ப்பித்த கம்பெனிகள் | 5.9 லட்சம் |
| வருவாய் இல்லை அல்லது நஷ்டம் என்று தெரிவித்த கம்பெனிகள் | 2.8 லட்சம் |
| ரூ.1 கோடிக்கு கீழ் லாபத்தை அறிவித்துள்ள கம்பெனிகள் | 2.8 லட்சம் |
| ரூ.1கோடிக்கு மேல் 10 கோடிக்கும் கீழ் லாபம் பெறும் கம்பெனிகள் | 28,667 |
| ரூ.10கோடிக்கும் அதிகமாக லாபம் ஈட்டும் கம்பெனிகள் | 7,781 |

ஆதாரம்: மத்திய பட்ஜெட் உரை 2017-18, இந்திய அரசு.

அட்டவணை 9 : இந்தியாவில் வரி கட்டுவோர் - தனி நபர்கள்

| வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| தனி நபர் வருமானவரி கணக்குகள் | 3.7 கோடி |
| வரிவிலக்கிற்கு கீழ் உள்ளவர்கள் | 99 லட்சம் |

| | |
|---|---|
| ரூ.2.5 லட்சம் முதல் 5 லட்சம் வரை வருமானம் உள்ளவர்கள் | 1.9 கோடி |
| ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை வருமானம் உள்ளவர்கள் | 52 லட்சம் |
| ரூ.10லட்சத்திற்கு மேல் வருமானம் உள்ளவர்கள் | 24 லட்சம் |
| ரூ.5 லட்சத்திற்கு மேல் வருமானம் உள்ளவர்கள்<br>இவர்களில் சம்பளதாரர்களின் எண்ணிக்கை | 76 லட்சம்<br>56 லட்சம் |
| ரூ.50 லட்சத்திற்கு மேல் வருமானம் உள்ளவர்கள் | 1.7 லட்சம் |

ஆதாரம்: மத்திய பட்ஜெட் உரை 2017-18, இந்திய அரசு.

அரசாங்கம் தூய்மை இந்தியாவிற்கான தனது ஆர்வத்தை வெளிப்படுத்தி இருப்பதையும் சொகுசுக்கார்கள் வாங்கப்படுவது, வெளிநாட்டுப் பயணங்கள் ஆகியவை பற்றிய தரவுகள் தெரிவிக்கும் தகவல்களையும் வைத்துப் பார்க்கும்போதுவரி நிர்வாகம் மிகவும் திறமையாகவும், விழிப்புடனும் செயல்பட வேண்டிய தேவை தெரிகிறது. ஜப்பான் போன்ற தேசங்களில் வரி செலுத்துவோருக்கு ஊக்கச்சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதற்கு மாறாக அமெரிக்காவில் வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு அச்சுறுத்தும் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

வரிக்கும் GDPக்குமான விகிதம் அதிகமாக இருக்கும் பல முன்னேறிய நாடுகளில் பொது சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, குடிமைச்சேவைகள் மிக உயரிய தரத்துடன் உள்ளன. இவற்றோடு, மக்களின் உயிருக்கான பாதுகாப்பும் பணிபுரியும் மகளிருக்கு பாதுகாப்பான சூழ்நிலையும், பூசல்களுக்கு விரைவாக நீதி வழங்கும் நடைமுறையும் வரிசெலுத்துவோரை ஊக்குவித்துவருகின்றன.

இந்தியாவின் மக்கள் தொகையில் 66 விழுக்காடு பேர் 34 வயதுக்கும் குறைவானவர்களாக உள்ளனர். இந்தியாவிலேயே தொழில்கள் தொடங்கப்பட்டு நிமிர்ந்து நிற்கும் தன்மைக்கு வழிவகை செய்யவும், தொழில்கள் செய்வதற்கு உரிய நடைமுறைகளை எளிதாக்கவும் ஊழல் இல்லாத இந்தியா எதிர் வரும் தலைமுறைக்கு மதிப்புமிக்கதாக அமையும். தாமாக முன்வந்து தகவல் தெரிவிக்கும் பல்வேறு திட்டங்கள், மன்னிப்பு வழங்கும் திட்டங்கள் போன்றவை இருந்த போதிலும் கணக்கில் காட்டப்படாத பணத்தை வெளிக்கொணர அரசாங்கம் எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், ஊழல் குறியீட்டில் இந்தியா தொடர்ந்து படுமோசமான நிலையில் இருந்து வருகிறது. ஆகவே கணக்கில் காட்டப்படாத பணத்தை வெளிக் கொணர்வதற்கு உறுதியான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த முயற்சியில் பட்டயக்கணக்காயர்கள், சட்டவல்லுனர்கள், சமூகவியலாளர்கள், ஆன்மீகத்தலைவர்கள், அரசியல், ஊடகத்துறை சார்ந்த சமுதாயத் தலைவர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி ஒரு முழுமையான அணுகுமுறையை உருவாக்க வேண்டும்.

கடந்த ஆண்டுகளில் இருந்த போக்குகளின் தொடர்ச்சியாக வங்கிகளில் மறுமுதலீட்டிற்கு வகை செய்யப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. வங்கிகளுக்கான இத்தகைய நிவாரணம் தொடர்ச்சியாக தன்னியக்கமுறையில் வழங்கப்படுவதாக இருக்க வேண்டுமா அல்லது வங்கிகளின் செயல்பாட்டுத்திறன் குறியீடுகளின் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டுமா என்பதை ஆலோசித்துப் பார்ப்பது முக்கியமானதாகும். வணிக வங்கிகள் வணிக ரீதியான சாத்தியங்கள் உடையதாக இருக்க வேண்டும். அவைகளின் சொத்துக்களில் சிலவற்றை விற்பதுபற்றி ஆலோசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். வங்கிகள் தங்களின் செலவினங்களை குறைத்துக் கொள்ளவும், இழப்புகளை ஈடுகட்டவும்வேண்டும். கூடுதலாக, அனைத்து பொதுத்துறை வங்கிகளும் அவை லாபத்தில் இயங்கினாலும், நஷ்டத்தில் இயங்கினாலும் ஒரே மாதிரியான ஊதிய உயர்வை ஊழியர்களுக்கு வழங்குகின்றன. ஆக, வரி செலுத்தும் அப்பாவிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் வளங்களுக்கு முன்பாக வணிக வங்கிகளின் இறுக்கிப்பிடிக்கும் செயல்பாடுகள் முன்னிற்க வேண்டும். வணிக வங்கிகளில் தொடர்ச்சியாக உட்புகுத்தப்படும் மூலதனம் தார்மீக நடவடிக்கைகளை சீர்குலைக்கும்.

### மத்திய பட்ஜெட் முன்கூட்டியே சமர்ப்பிப்பு

மத்திய பட்ஜெட் சமர்ப்பிப்பு இந்த ஆண்டு முன்கூட்டியே நடத்தப்பட்டது. மார்ச் இறுதிவாக்கில்

பட்ஜெட் ஏற்கப்பட்டு அமைச்சகங்கள் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கான நிதியை ஏப்ரல் 1 முதல் பெறுவதற்கு வகை செய்வதற்கான ஏற்பாடாகும் இது. இந்தியாவில், பருவமழைகள் ஜூனில் தொடங்கி விடுகின்றன. பருவமழை உருவாவதற்குள் அமைச்சகங்கள் தங்கள் செலவினங்களைக் கணக்கிட்டு திட்டங்களை செயல்படுத்துவதற்கு போதிய நேரம் கிடைக்கும். வருவாய் திரட்டுவதற்கும் மூலதன செலவினங்களுக்கும் நிதியாண்டின் தொடக்கம் முதற்கொண்டே முயற்சிகள் செய்வதற்கு முன்கூட்டிய பட்ஜெட் சமர்ப்பிப்பு உதவி செய்யும். பிப்ரவரி முதல் நாள் என்பது குடியரசு தினத்தை ஒட்டி இருப்பதால் ஆலோசனைகள் செய்வதற்காக தில்லிக்கு வருவது தடைப்பட்டு விடுகிறது. அதனால் பிப்ரவரி 1 க்கும் முன்பாகவே பட்ஜெட் சமர்ப்பிபதை ஏன் செய்துமுடிக்கக்கூடாது? மேலும், பட்ஜெட் சமர்ப்பிப்பதை ஒரு வேலை நாளின் காலை வேளையிலோ அல்லது உதாரணத்திற்கு பிப்ரவரி மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை மதியம் 2 மணி அல்லது முதல் சனிக்கிழமை காலை 11 மணி என்று ஒரு குறிப்பிட்ட தினத்திலோ செய்யப்படவேண்டுமா? என்பதையும் யோசிக்கலாம்.

### நிதிக்கொள்கை - ஆண்டுச்செயல்பாடாக இருக்க வேண்டுமா?

வளர்ந்த நாடுகளில்பட்ஜெட் சமர்ப்பிப்பு ஒரு நிகழ்வாகவே கருதப்படுவதில்லை. நம்நாட்டில் ஒரு மாதம் முழுவதும் பட்ஜெட்டோடு பொருத்தப்பட்டுவிடுகிறது. தொழிலுலகம், பங்குச்சந்தை, தனிநபர்கள் யாவருமே பட்ஜெட் எனும் வருடந்திரத்திருவிழாவிற்கு மிகப்பெரியப் பதற்றத்துடன் காத்திருக்கின்றனர். பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதற்கும், நீடித்த வளர்ச்சியை உருவாக்குவதற்கும் இது இடையூறு பயக்கக்கூடியது. ஏனெனில், முதலீடுகளுக்கு பல ஆண்டுகள் சூல் கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் நிதி கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படலாம். நிதிக் கொள்கையானது பட்ஜெட்டில் இருந்து பிரிக்கப்பட்டு இடைக்கால, நீண்ட கால உதாரணமாக 5 ஆண்டுகள் அளவுக்கு அறிவிக்கப்படலாம்.

### ரயில்வே பட்ஜெட்

ரயில்வேக்கென்று ஒரு தனி பட்ஜெட் 1924ஆம் ஆண்டு முதல் சமர்ப்பிக்கப்பட்டுவந்தது. பிரிட்டிஷ் ரயில்வே பொருளியலாளர் வில்லியம் அக்வொர்த் என்பவரின் பரிந்துரையின் பேரில் இது நடைபெற ஆரம்பித்தது. ஆயினும், 1949 முதற்கொண்டே ரயில்வே பட்ஜெட்டை பொது பட்ஜெட்டுடன் இணைக்க வேண்டுமென்று பல்வேறு குழுக்கள் ஆலோசனை தெரிவித்து வந்தன. அரசியல் காரணங்களால் இது ஏற்கப்படாமல் இருந்து வந்தது. இப்போது ரயில்வே பட்ஜெட் பொது பட்ஜெட்டுடன் இணைக்கப்பட்டு இருப்பதால் ரயில்வேயின் செயல்பாட்டில் தொழில்நுட்பம் சார் நிபுணத்துவத்தை நுகர்வோர் எதிர்பார்க்கலாம். தரமான சேவைகள், நவீன கருவிகள், பாதுகாப்பு அம்சங்கள், சந்தை நிலைமைக்கேற்ப மாற்றம் காணும் கட்டணங்கள் போன்றவற்றையும் எதிர்நோக்கலாம். அதைப்போலவே, நாடாளு மன்றத்தின் நிலையான மீளாய்வுக்கு ரயில்வே உட்படுவது நீங்கும். கொங்கன் ரயில்வே போன்றதொரு தொழில்நுட்பம் கொண்ட நிறுவன கட்டமைப்பை அது பெறமுடியும்.

### பட்ஜெட் பதங்களுக்குப் பொருத்தமான வரையறைகள்

மத்திய பட்ஜெட்டில் திட்டச்செலவினம், திட்டம் சாராத செலவினம் என்பனவற்றைக் கைவிடுவது மிக முக்கிய சீர்திருத்தம்ஆகும். திட்டம் என்ற சொல்லைக் கைவிடுவது என்று மேற்கொள்ளப்பட்ட கொள்கை முடிவின் காரணமாக இந்த சீர்திருத்தம் துவக்கி வைக்கப்பட்டது. சமூகப்பொருளாதார நலத் திட்டங்களைப் பிரித்து அறிவதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்தியாவில், திட்டச்செலவு சிறந்தது, திட்டம் சாரத செலவு வீணானது என்ற பிரபலமான எண்ண ஓட்டம் இருக்கிறது. இதன் காரணமக சொத்துக்களைப் பராமரிக்கும் திட்டம் சாரா செலவினங்களும் கூட நிராகரிக்கப்பட்டன. இதன் விளைவாக மாநிலங்களிலும், மத்தியிலும் திட்டச் செலவினங்களை அதிகரித்துக்காட்டும் போக்கு ஏற்பட்டது. இந்த வேறுபாட்டைக் களைவதின் மூலம் செலவிற்கும் பலனிற்கும் உள்ள நேரடித் தொடர்பு நிறுவப்படுவது ஏதுவானது. பொது செலவினங்கள் திறம்பட செயல்படுத்தப்படுவதை அளவிடுவதற்கு இது உதவியாக இருக்கும். ஆக, அரசியலமைப்பு ஆரம்பத்தில் தெரிவித்திருப் பதைப் போன்ற நிலையான வருவாய் மூலதனச் செலவினம் என்பதை நோக்கி பட்ஜெட்டின் கவனம் தற்போது இருந்து வருகிறது. வருவாய், மூலதனச் செலவினம் இரண்டிற்கும் இடையே உள்ள தெளிவான தனித்தன்மைகள் பகுப்பாய்வு, வெளிப்படைத்தன்மை, முடிவுகளைத் திறம்பட மேற்கொள்வது ஆகியவற்றிற்கு அவசியமான தாகும். இந்தத் தனித்தன்மைகள்

அரசின் நிர்வாகச் செலவு, அரசு செய்யக்கூடிய மூலதனம் ஆகியவற்றை அளவிட்டு அறிவதற்கு உதவக்கூடியது.

அரசியல் சட்டப்பிரிவு 112இன் படி, ஆண்டு நிதி அறிக்கை, வருவாய் கணக்கில் ஆகும் செலவை பிற செலவுகளில் இருந்து தனித்துப் பிரித்துக் காட்டவேண்டும். அரசின் நிதி விதிமுறைகள் 2005 இன் படி செலவின மதிப்பீடுகள் மூலதனக்கணக்கில் இருந்து செய்யப்படும் செலவு, அரசின் கடன்கள், கடன்களை திருப்பிச்செலுத்துதல், குறுகிய காலக்கடன்கள் பெறுவது உட்பட வருவாய்க் கணக்கிலிருந்து செய்யப்படும் செலவினங் களுக்கென தனியான ஒரு முன்னேற்பாட்டை செய்து வைத்திருக்கவேண்டும்.

செலவினங்களை தனித்துப் பிரித்துக் காட்டுவது அவசியமான தேவை அல்ல என்று சர்வதேச அனுபவங்கள் தெரிவிக்கின்றன. வளர்ந்துவரும், முகிழ்த்துவரும் நிலையில் முன்பு இருந்த தற்போதைய வளர்ந்த நாடுகள் பலவும் வளங்களை சிறப்புற பிரித்து வழங்குவதற்காக வருவாய் மூலதனக் கணக்குகளுக்கிடையே ஒரு வேறுபாட்டைக் கடைபிடித்துவந்தன. இவற்றில் சில நாடுகள் இந்த வழக்கத்தை இன்னும் தொடர்கின்றன. சில நாடுகள் இந்த வழக்கத்தை கைவிட்டுவிட்டன.

### முடிவுரை

உலக அளவில் நிச்சயமற்றதன்மை நிலவிவரும் நிலையிலும், பணமதிப்பிழப்பு நடவடிக்கையிலிருந்து மீண்டு வந்து கொண்டிருக்கும் நிலையிலும் இந்த பட்ஜெட் நடைமுறைசாத்தியமான ஒரு பட்ஜெட் தான். பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு அரசு பெற்ற ஆதரவு, ஊழலற்ற தேசத்தை உறுதி செய்வதற்காக திறம்பட வெளிக் கொணரப் பட்டிருக்கலாம். 3 லட்சத்துக்கும் மேல் ரொக்கமாகப் பணம் எடுக்கக்கூடாது, கணக்கில் காட்டாமல் அரசியல் கட்சிகள் நன்கொடைப் பணம் பெறக்கூடாது என்பன போன்ற கருணையுடன் கூடிய முடிவுகளைக்காட்டிலும் இன்னும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். பொதுவாக, பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வரிகட்டுவோரின் எண்ணிக்கையையும், வளர்ச்சி வேலைவாய்ப்பு ஆகியவற்றையும் அதிகரிக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனாலும், இந்த பட்ஜெட் நடுத்தர, நீண்டகால தொலைநோக்குப் பார்வைக்கான அறிவுறுத்தல்களையும் சேர்த்திருந்திருக்கலாம். மக்களுக்கு ஈவுகிடைக்கும் வகையிலும், மின்னணு இந்தியாவைக் காணும் வகையிலும் நீண்டகால நிதித்துறை சீர்திடுத்தங்களை மேற்கொள்ளும் வகையிலுமான செயல்வரைவையும் கூட இந்த பட்ஜெட் அளிக்கலாம்.

●

## பட்ஜெட் 2017 - கட்டுமானத்துறையை மாற்றியமைக்க வாய்ப்புகள்

- Dr. ரஞ்சித் மேத்தா

Phd. வர்த்தக சபையின் இயக்குநர், புதுடெல்லி

2017ஆம் ஆண்டு பட்ஜெட் பலவகைகளில் புதுமையான ஒன்று. முதலாவதாக அரசு, திட்ட மற்றும் திட்டம் அல்லாத செலவினங்கள் என்ற பாகுபாட்டை விலக்கியுள்ளது. செலவினங்கள் இனி வருவாய் சார் செலவினங்கள் மற்றும் மூலதன செலவினங்கள் என்று இருக்கும். இரண்டாவதாக, 92 வருட பாரம்பரியமான ரயில்வே பட்ஜெட் தனியாக இல்லாமல் பொது பட்ஜெட்டோடு இணைக்கப்பட்டது. இரண்டுமே, சரியான வழியில் செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இதனால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பொருளாதார மந்த நிலைமையில், நிதியமைச்சர்கள் அளிக்கும் பட்ஜெட்டில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க இரண்டு வழிகளை கைப்பிடிப்பார்கள் : பொருட்களின் தேவையை ஊக்குவித்தல் மற்றும் அவைகளை வழங்குவதை ஊக்குவித்தல், அல்லது இரண்டுமே. பொருட்களின் தேவையை ஊக்குவிப்பது என்பது மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க நேரடி மற்றும் மறைமுக வரிகளை குறைத்து, மக்களின் கைகளில் அதிகப்பணத்தை புழங்க விடுவது. இது அல்லாமல், ஊக்கமும் மானியங்களும் அளிக்கப்படலாம். இதனால், மக்கள் விரும்பும் பொருட்களின் தேவைகள் அதிகரித்து பொருளாதாரம் வலுப்படும். நிதியமைச்சர்கள், ஏதாவது ஒன்றை மட்டும் தேர்ந்தெடுப்பது, அரிதான செயலாகும். அவர்கள் அதிகமாக கடைபிடிப்பது மக்களின் பொருட்களின் தேவையையும் அவற்றின் உற்பத்தியையும் அதிகரிக்க ஊக்கங்களை அளிப்பதே.

பட்ஜெட் 2017ல் நிதியமைச்சர் திரு. ஜெய்ட்லி பெருமளவு தேவை சார்ந்த வளர்ச்சியை ஊக்குவிப்பது என்பதற்கு பதிலாக முதலீடு சார்ந்த வளர்ச்சியையே தேர்ந்தெடுத்து இருக்கிறார். இந்தியாவில் ஏற்கனவே நுகர்வோர் மற்றும் தொழில் நிலைமைகள் மந்தமாக உள்ள நிலையில் வருமான வரி குறைப்புக்

காரணமாக நுகர்வோரை ஊக்குவிப்பது கடினமான காரியம். ஆகவே, தேவைகள் அதிகரிக்கும் என்ற நினைப்பில் வரிகளை குறைத்துக்கொள்வது ஆபத்தாக முடியலாம். ஆகவே, நிலைமையை சீர்செய்ய அரசின் முதலீடுகளை அதிகரித்து, வளர்ச்சிக்கு வழிவகுக்கலாம்.

நிதியமைச்சர் தன்னிடம் இருக்கும் எல்லா சக்திகளையும் பயன்படுத்தி முதலீடு மற்றும் பொருள் உற்பத்தி அதிகரிப்புக்கு வழிவகுத் திருக்கிறார். உள் கட்டமைப்புத் திட்டங்களுக்கு ரூ.3.96 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் முனைவுத் திட்டமான உதய்க்கு ரூ.2.44 லட்சம் கோடி கிராமப்புற விவசாய மற்றும் அதைச்சார்ந்த திட்டங்களுக்கு ரூ.1.85 லட்சம் கோடியும். கிராமப்புறங்களில் சிறந்த சொத்துக்களை உருவாக்கும் வண்ணம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்திற்கு ரூ.48,000 கோடி, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்திற்கு ரூ.1.84 கோடி என்று ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மற்ற பிற துறைகளில் தேவைகள் அதிகரித்து, பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சி பெறும் என்று கருதப்படுகிறது.

நுகர்வோர் தேவையை அதிகரிப்பது மற்றும் அதற்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்குவிப்பது ஆகிய இரண்டுமே பொருளாதாரத்தை ஊக்குவிக்கின்ற காரியமாக இருந்தாலும் நுகர்வோர் பொருள் தேவைகளை ஊக்குவிப்பதினால் அடுத்த மூன்று மாதங்களுக்கு நல்ல பயன் கிடைக்கலாம். ஆனால், மூலதனத்தை பெருக்குவதன் மூலம் ஏற்படும் வளர்ச்சியின் பயன்கள் நிதானமாக சுமார் 9 மாதங்களுக்கு பிறகு உள்நாட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சியில் காணப்படும். இந்த சூழ்நிலையில் இந்திய கட்டுமானத்துறைக்குத் தேவையான பொருள் உற்பத்தித் துறைகளுக்கும் இந்தக் கட்டுமானங்களால் பயன்பெறும் சுமார் 265 துணை தொழில்களுக்கும் உடனடியான ஊக்கம் தேவைப்பட்டது.

இந்திய கட்டுமானத்துறை சமீப காலத்தில் மிக வேகமான வளர்ச்சி கண்டு இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. ஆனால், ரூபாய் நோட்டுக்கள் முடக்கத்திற்குப் பின் மந்தம் ஏற்பட்டுள்ளது. இந்தத் துறை, தற்போது, பெரும்பாலும் உதிரியாகவும் முறைப்படுத்தப்படாத வகையிலும் செயல்பட்டு வந்தாலும் மேலை நாடுகளைப் போல, ஒரு கட்டமைப்போடு, முறைப்படுத்தப்பட்ட தொழிலாக மாற முயன்று வருகிறது. உலகப் பொருளாதார சூழ்நிலையில் இந்தியாவின் பங்கு மிகுந்து கொண்டு வரும் வேளையில், இந்தத் துறையிடமிருந்து மிகுந்த எதிர்பார்ப்பும், பொறுப்பும் உள்ளது.

2017-18 பட்ஜெட்டில் ஆதரவான நிலையை எதிர்பார்த்த கட்டுமானத்துறை நியாய விலை வீட்டுவசதித் துறைக்கு உள் கட்டமைப்பு அந்தஸ்து கிடைத்திருப்பதன் மூலம் “2022க்குள் அனைவருக்கும் வீட்டுவசதி” என்று அரசின் திட்டத்திற்கு ஊக்கம் கிடைத்துள்ளது. இந்த மலிவான வீட்டுவசதித் துறையில் ஏற்கனவே செயல்படும் கட்டுமானத் துறையினருக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும். பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் மூலம், 2022க்குள் நகர்ப்புற ஏழை மக்களுக்கு இரண்டு கோடி வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 2022க்குள் எல்லோருக்கும் வீடு என்ற முனைப்பு இயக்கத்திற்கு 305 நகரங்களையும், பெரு நகரங்களையும் அடையாளம் கண்டுள்ளது. தற்போது, 2 கோடியே 90 லட்சம் மக்கள் பணியாற்றும் இந்த துறையில் 2030க்குள் மூன்று கோடியே 80 லட்சம் பணியாளர்கள் தேவைப்படுவார்கள் என்பதால் இது ஒரு நல்ல வேலைவாய்ப்பு திட்டமாகும்.

### 2017 பட்ஜெட்டில் “மாற்றியமைத்து சக்தியளித்து சுத்தப்படுத்து” என்ற தலைப்பில் பத்து கொள்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன

1. விவசாயிகள் : அவர்களுடைய வருமானத்தை ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாக்க திட்டம்.
2. கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பும், அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்துதல்.
3. இளைஞர்களுக்கு : கல்வி, செய்திறன் அளித்து வேலை வாய்ப்பு வழங்கி சக்தி அளித்தல்
4. ஏழை மற்றும் பின் தங்கிய மக்கள் : சமூகப் பாதுகாப்பை பலப்படுத்துதல் மற்றும் மலிவு விலையில் வீட்டு வசதி.
5. திறமை மேம்பாடு, உற்பத்தித் திறன் வளர்ப்பு மற்றும் வாழ்க்கை வளம் பெருக்க உள் கட்டமைப்பு வசதிகள்.
6. நிதித்துறை : வலுவான அமைப்புகள் மூலம் வளர்ச்சியும், ஸ்திரத்தன்மையும்.
7. பொறுப்புத் தன்மையையும், வெளிப்படைத் தன்மையையும் விரைவாக செயல்படுத்த மின்பதிவு பொருளாதாரம்
8. பொதுச் சேவை : மக்கள் பங்கேற்பு மூலம் திறமையான ஆளுமை மற்றும் சேவைகளை சிறப்பாக வழங்குதல்
9. வளங்களை சிறப்பாக பயன்படுத்தவும், நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாக்கவும் ஏற்ற நிதிநிலை ஆளுமை.

## 2017 பட்ஜெட்டின் கட்டுமானத்துறையை ஊக்குவிக்க சிறப்பு அம்சங்கள்

- மலிவு விலை வீடுகளுக்கு உள்கட்டமைப்பு அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது.
- 2019க்குள் கிராமப்புறங்களில் ஒரு கோடி வீடுகள் கட்டப்படும்.
- தேசிய வீட்டு வசதி வங்கி மூலம் ரூ.20,000 கோடி அளவுக்கு மறு கடன் வழங்கப்படும்.
- பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்திற்கு ரூ.23,000 கோடி ஒதுக்கீடு, கட்டுமானத் துறைக்கு வரிச்சலுகை. விற்கப்படாத வீடுகளுக்கான மூலதன லாபம், திட்டம் பூர்த்தியடைந்த பிறகுதான் மதிப்பிடப்படும். மலிவு விலை வீடுகளுக்கான வீட்டின் மொத்த பரப்பளவு 30 மற்றும் 60 சதுர மீட்டரிலிருந்து உட்பரப்பு அளவு 30 மீட்டரிலிருந்து 60 மீட்டராக மாற்றியமைப்பு.
- அசையா சொத்துக்களின் மூலதன லாபம் கணக்கெடுப்பது மூன்று வருடம் வைத்திருப்பதற்கு பதிலாக இரண்டு வருடங்களாக குறைப்பது. வீடு கட்டி முடிக்கப்பட்ட சான்றிதழ் பெற்றபின், விற்கப்படாத வீடுகளுக்கு ஒரு வருடத்திற்கு வரி கிடையாது.
- ரூபாய் மூன்று லட்சத்திற்கு மேல் பணப்பரிவர்த்தனைக்கு அனுமதி கிடையாது.
- இந்திரா வீட்டு வசதி திட்டம் மேலும் 600 மாவட்டங்களுக்கு விஸ்தரிப்பு.
- மூலதன லாப கணக்கீட்டிற்கான குறியீட்டு காலம் 1.4.1981 லிருந்து 1.4.2001ஆக மாற்றப்படுகிறது.

## மலிவு விலை வீடுகளுக்கு உள் கட்டமைப்பு அந்தஸ்து

2017 மத்திய பட்ஜெட்டில் பொருளாதார சீர்திருத்தங்களின் தொடர்ச்சியும், விலை உயர்வு கட்டுப்பாடும் சிறந்த நிதி நிலை மேம்பாடும் உறுதியாக்கப்பட்டுள்ள நிலையில் இப்போது மலிவு விலை வீடுகளுக்கு உள் கட்டமைப்பு அந்தஸ்து கிடைத்திருப்பது மத்திய தர பயனீட்டாளர்களுக்கு நல்ல பலன்களை அளிக்கும். இதனால், 2022க்குள் எல்லோருக்கும் வீடு என்ற சிறப்பு திட்டத்திற்கு பெரிய பலம் கிடைக்கும். இதனால் இந்தத் துறையில் தனியார்களின் போட்டி மிகுந்து நடுத்தர மற்றும் வசதியற்ற மக்களுக்கு சொந்த வீடு கிடைக்கும் வாய்ப்பு அதிகமாகும்.

கட்டுமானத்துறைக்கு தொழில் அந்தஸ்து அளிக்க வேண்டும் என்று பல காலமாக அரசுக்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. கட்டுமானத்துறை ஒரு தொழில்துறையாக அங்கீகரிக்கப்படாததால், வீட்டுவசதி உற்பத்தி செய்பவர்கள் கட்டுமானத்துறையில் உள்ளவர்கள் மற்றும் முதலிடுபவர்கள் உயர் வட்டியில்தான் கடன்களை பெற வேண்டியிருந்தது. உயர் வட்டி காரணத்தினால், இத்துறையினருக்கு பணத்தட்டுபாடு நிலவி வந்தது.

பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் மூலமாக, மலிவு விலை வீடுகளுக்கு மற்றொரு சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் 9,00,000க்கும் மேலான கடன்களுக்கு நான்கு சதவிகிதம் மட்டும், 15,00,000 ரூபாய்க்கும் மேலான கடன்களுக்கு மூன்று சதவிகிதம் மட்டுமே வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால், பொருளாதார ரீதியாக நலிவடைந்த வர்க்கத்தினரும், குறைந்த ஊதியம் பெறும் வர்க்கத்தினருக்கும் இந்த சலுகைகள் கிடைக்குமா என்பது பற்றி தெளிவு இல்லை. இது மட்டுமல்லாமல், இதுமாதிரியான வீடுகளை கட்டி முடிக்க வேண்டிய கால அவகாசம் மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், பல திட்டங்களுக்கு லாபம் சார்ந்த வருமான வரி சலுகைகள் கிடைக்க உள்ளன. மிக அதிக அளவு தேவையிருந்தாலும், இந்த மலிவு விலை வீடுகள் துறையில் தனியார் கட்டுமானத் துறையினரின் ஈடுபாடு மிகக்குறைவாகவே இருந்து வந்தது. லாபம் சார்ந்த வருமான வரி விலக்குகள் மற்றும் மலிவு விலை வீடுகளுக்கு உள் கட்டமைப்பு அந்தஸ்து அளித்திருப்பதன் மூலம் அதிகப்படியான தனியார் துறையிலுள்ள வீட்டு வசதி உற்பத்தி செய்பவர்கள் ஈர்க்கப்படுவார்கள்.

## மலிவு விலை வீடுகளுக்கான தகுதிகள்

மலிவு விலை வீடுகளுக்கான தகுதி முன்பிருந்த வீட்டின் மொத்த பரப்பளவு 30 மற்றும் 60 சதுர மீட்டரிலிருந்து உட்பரப்பு அளவு 30 மீட்டரிலிருந்து 60 மீட்டராக மாற்றி யமைக்கப்பட்டுள்ளதால் இந்தத் துறை ஊக்கம் பெற்று வாங்குபவர்களுக்கு வசதியாக அமையும். மொத்த அளவிலிருந்து உட்பரப்பளவுக்கு மாற்றப்பட்டுள்ளதால், இந்த மக்கள் பெரிய வீடுகளை வாங்க முடியும். அதே சமயம், வீடு கட்டுபவர்களுக்கும் பயன் கிடைக்கும். 30 சதுர மீட்டர் என்பது, நான்கு பெரு நகரங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும் பிற பகுதிகளுக்கு 60 சதுர மீட்டர் அளவிற்கான வீடுகளும் கிடைக்கும்.

## அசையா சொத்துக்களை வைத்திருப்பதன் காலக்கெடு மூன்று ஆண்டுகளிலிருந்து இரண்டு ஆண்டுகளாக குறைக்கப்படுகிறது.

நீண்ட கால மூலதன லாபத்திற்கான அசையா சொத்துக்களின் கையிருப்பு மூன்று ஆண்டுகளிலிருந்த இரண்டு ஆண்டுகளாக 2017-18 பட்ஜெட்டில் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், இரண்டு

வருடங்களுக்கு பிறகு வீடு விற்பனை செய்பவர்களுக்கு வருமான வரி குறைந்து அதனால், கட்டுமானத்துறையில் முதலீடுகள் அதிகரிக்கும். இது அல்லாமல், நீண்டகால மூலதன லாபத்தை கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படும் விலை குறியீட்டு அடிப்படை வருடம் 1981லிருந்து 2001க்கு மாற்றியமைக் கப்பட்டிருக்கிறது. இதனால், நீண்ட கால மூலதன லாபம் சார்ந்த வருமான வரி குறையும். இது அல்லாமல், வீடு கட்டி முடிக்கப்பட்டபின் ஓராண்டிற்கு விற்கப்படாத வீடுகளுக்கான வரிச்சலுகை வீடு கட்டுபவர்களுக்கு சாதகமாக இருக்கும்.

**2017 பட்ஜெட்டில் தேசிய வீட்டுவசதி வங்கி, ரூ.20,000 கோடி அளவிற்கு மறு கடன் வழங்கும்.**

2016 இறுதியில் மேற்கொள்ளப்பட்ட ரூபாய் நோட்டுகள் முடக்கத்தால் வங்கிகளில் பணம் குவிந்து, அவைகள் தங்களுடைய கடன் வட்டி விகிதத்தை குறைக்க வாய்ப்புள்ளது. இந்த கடன் வட்டி குறைவினால், புதிதாக வீடுகளுக்கு கடன் வாங்குபவர்கள் மட்டுமல்லாமல் ஏற்கனவே வீட்டுக்கடன் வாங்கியவர்கள் கூட மகிழ்ச்சி அடைவார்கள். இது அல்லாமல், தேசிய வீட்டுவசதி வங்கி மூலம் மறு கடனால், நிலைமை மேலும் பலம் பெறும்.

**வீட்டுமனையாளர், வீடு கட்டுபவர் இணைந்து மேற்கொள்ளும் திட்டங்களுக்கு நீண்ட கால மூலதன லாப வரி மாற்றம் :**

தன்னுடைய வீட்டு மனை நிலங்களில் மற்றவர்களோடு சேர்ந்து வீடு கட்டும் திட்டத்தை மேற்கொள்பவர்களின் மூலதன லாப வரி அந்த திட்டம் கட்டி முடிக்கப்பட்ட பின்தான் விதிக்கப்படும் என்று இப்போது பட்ஜெட்டில் மாற்றப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய மாற்றமாகும். ஏனெனில் இதுவரை, இது சார்ந்த பல வழக்குகள் வருமான வரித்துறையில் உள்ளன. இதன்படி கூட்டாக, வீடுகளை கட்டும்போது, அதனால், விளையும் மூலதன லாபத்திற்கான வரி, வீடுகள் கட்டி முடிக்கப்பட்டபின்தான் விதிக்கப்படும். மற்றபிற மூலதன லாப வரிச்சலுகைகள் அல்லாமல் இந்த நடவடிக்கைகளினால், வீட்டு மனை வைத்திருப்பவர்களும், கூட்டாக சேர்ந்து வீடு கட்டுபவர்களும் பயனடைவர். இதனால், வீட்டு மனைகளுக்கான தேவை அதிகரித்து, தற்போது மந்தமாக உள்ள வீட்டு மனை விலைகள் உயர வாய்ப்புள்ளன.

**ரூபாய் 3லட்சத்திற்கு மேல் பண பரிவர்த்தனை தடை :**

ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக ரூ.3 லட்சத்திற்கு மேல் பண பரிவர்த்தனை செய்ய முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டுமானத்துறையில் நோட்டுக்கள் முடக்க நடவடிக்கைகளுக்கு முன்பு பெருமளவு பணப் பரிவர்த்தனைகள் ஏற்பட்டு வந்துள்ளன. ஆனால், இந்த நடவடிக்கைக்குப் பிறகு, பணப் பரிவர்த்தனை பெருமளவு குறைந்துள்ளது. குறுகிய கால கட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும், நீண்ட கால நல்ல விளைவாக, இந்தத் துறைக்கு நல்ல அடித்தளம் அமைக்கப்பட்டு பன்னாட்டு முதலீடு ஈர்க்கப்பட வாய்ப்புள்ளது.

**ஆந்திரபிரதேச மாநிலத்தின் புதிய தலைநகரை உருவாக்குவதற்கு நிலங்களை ஒன்று சேர்க்கும் முறை - நில கையகப்படுத்துதல் மசோதா சார்ந்த முக்கிய நிகழ்வு**

ஆந்திரபிரதேச மாநிலத்தின் புதிய தலைநகரம் உருவாக்குவதற்கு நிலத்தை கையகப்படுத்தாமல் தேவையான நிலங்களை ஒன்று திரட்டுதல் முறை என்பது இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. நிலங்களை கையகப்படுத்துவது என்பது மிகவும் விவாதிக்கப்பட்ட விஷயமாகும். ஏனெனில் பல பெரும் திட்டங்கள் இதனால் முடங்கிக் கிடந்தன. இந்தப் புதிய ஒன்று திரட்டுதல் மூலம் நிலங்கள் சார்ந்த வழக்குகள் குறைந்து வளர்ச்சிப் பணிகள் வேகமடைந்தது. அரசாங்க திட்டத்தின் கீழ் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலங்களை ஒன்று படுத்துவதால் மூலதன லாப வட்டி இலக்கு கிடைக்குமாதலால் பலர் நிலம் தர முன் வருவார்கள். ஆனால், இந்த சலுகை, ஆந்திரபிரதேச மாநில உருவாக்கம் அறிவிக்கப்பட்ட ஜூன் 2, 2014ல் யார் நிலம் வைத்திருந்தார்களோ அவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

**அடிப்படை வருமான வரி அடுக்குக்கு வரி ஐந்து சதவிகிதமாகக் குறைப்பு**

தனிநபர் வருமானம் ரூ.2.5 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சம் வரை உள்ளவர்களுக்கு தற்போதிருந்த வருமான வரி 10 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால், முதல் முறையாக வீடுகளை வாங்குபவர்களுக்கு மேலும் உதவி கிடைக்கும். இந்த வரி குறைப்பினால், வருமானவரி கட்டுபவர்களின் எண்ணிக்கை உயர்வதோடு, இந்த அடுக்கில் இருப்பவர்களின் கைகளில் பணப்புழக்கம் அதிகமாகும். இதோடு, மலிவு விலை வீடுகளுக்கு சலுகை அளித்திருப்பதும், வட்டியை குறைத்திருப்பதும் இம்மாதிரியான வீடுகளை வாங்குவதில் உயர்வு ஏற்படும்.

இந்த பட்ஜெட், கட்டுமானத்துறைக்கு பெரிய மாற்றம் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அதோடு, மக்கள் வருமான வரியை செலுத்த

வேண்டும் என்ற உணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசு, தொடர்ச்சியாக நிதிசார்ந்த முயற்சிகளை மேற்கொண்டு அதற்கான கொள்கைகளை வடிவமைத்து வருகிறது. அது, பலன்களை மெதுவாக தந்து வருகிறது. நோட்டுக்கள் செல்லாது என்ற திட்டம் குறுகிய கால தொல்லைகளை கொடுத்தாலும், பொருளாதாரம் மீண்டும் வலுப்பெறும். பொருள்கள் மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) செயல்பட்டவுடன் மற்ற நல்ல நிலைமைகள் தென்படும்.

இதைப்போன்ற சில அடிப்படை தொல்லைகளை நாம் களைந்து எறியும் போது, வளர்ச்சி ஏற்பட்டு சந்தையில் நல்ல பொருள்கள் கிடைக்கும். கட்டுமானத் துறையில் இருப்பவர்கள் இப்போது பெருமளவு நிலச் சொந்தக்காரர்களோடு கூட்டாக, திட்டங்களை மேற்கொள்வதால், இதில், நிகழக்கூடிய இழப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தேவையான மூலதனமும் குறைகிறது. அரசு, இந்த கட்டுமானத்துறையில் கருப்புப் பணத்தை முழுவதுமாக ஒழிக்க நினைப்பதால், நிலம் சார்ந்த பரிவர்த்தனைகள் காசோலை மூலமாக செய்யப்பட்டு நல்ல பயன்கள் கிடைக்கும்.

பட்ஜெட்டில் பத்து கொள்கைகளைக் கொண்ட திட்டமானது : "மாற்றியமை, சக்தியூட்டு, சுத்தமாகச் செய்" என்று நோக்கத்தோடு அறிவிக்கப்பட்டிருப்பது. நல்ல மதிநுட்பத்துடன் நிதிசார் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு மூலதன செலவுகள் நுகர்வு மற்றும் மிகுதியான உற்பத்தி திறமை ஆகியவைகளை உறுதிபடுத்துகிறது.

இந்த பட்ஜெட்டின் நோக்கங்களுக்கு உந்து சக்தியாக அமைவது, மலிவுவிலை வீடு கட்டும் திட்டமாகும். நகர்ப்புற பகுதிகளில் பொருளாதாரத்தில் பின் தங்கிய அல்லது குறைந்த வருமானம் இருப்பவர்களில் 96 சதவிகிதத்தினருக்கு சொந்த வீடு இல்லாத நிலையில் 1,81,00,000 வீடுகள் தேவைப்படுகின்றன. ஆகவே, தொடர்ந்த முன்னேற்றத்திற்கும் இந்தியாவை அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு இந்தத் துறைக்கு ஊக்கமளிக்க வேண்டியது அவசியமாகும். இந்த பட்ஜெட்டில், கட்டுமானத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. மலிவு விலை வீடுகள் கட்டுவதற்கு உள் கட்டமைப்பு அந்தஸ்து வழங்கப்பட்டு அந்த துறைக்கு குறைந்த வட்டியில் அதிக முதலீடு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அது அல்லாமல், வீடு கட்ட தேசிய வீட்டு வசதி வங்கி ரூ.20,000 கோடிக்கு மறு கடன் அளிக்க உள்ளது. இது அல்லாமல், வருமான வரி குறைப்பும், குறைந்து வரும் வட்டி விகிதமும் இந்த வீடுகளுக்கு அதிகத் தேவையை ஏற்படுத்தும்.

தற்போதுள்ள இந்திய ஜனத்தொகையில் இளைஞர்களின் எண்ணிக்கை மிக அதிக அளவில் உள்ளதால் அவர்களுக்கு தேவையான வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டியுள்ளது. கட்டுமானத்துறையில் பெருமளவு வேலை வாய்ப்பு உள்ளது. கட்டுமானத்துறைக்குத் தேவைப்படும் பொருட்கள் உற்பத்தித் துறைகளில் வேலை வாய்ப்பு பெருகும். ஆகவே, இந்திய இளைஞர்களுக்கு வளர்ச்சியில் பயன்கள் கிடைக்கும். ஆகவே, இந்த பட்ஜெட் சரியான திசை நோக்கி செல்கிறது.

---

# இளைஞர்களுக்கான பட்ஜெட்


- டாக்டர் எஸ்.எஸ்.மந்தா

அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழுவின் தலைவர்


2016ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச குடிமையியல் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதன்படி இந்தியாவின் மக்கள் தொகை 1.3 பில்லியன் ஆகும். மேலும் உலகளவில் மக்கள்தொகை அதிகமாக உள்ள நாடுகளில் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.2% என்ற நிலையில், 2022ஆம் ஆண்டில் இந்திய மக்கள் தொகையானது சீனாவைவிட அதிகமாகிவிடும். 1.5 பில்லியனுக்கு மேல் மக்கள் தொகை கொண்ட முதலாவது பெரிய ஜனநாயக நாடாக இந்தியா **இனி** வரலாற்றில் இடம் பெறும். தற்போது இந்தியாவின் மக்கள் தொகையில் 60%க்கும் அதிகமான மக்கள் 35 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள். 2020ஆம் ஆண்டுக்குள் ஒரு இந்தியக் குடிமகனின் சராசரி வயது 29 ஆண்டுகள் என இருக்கும் இது ஒப்பீட்டு அளவில் சீனாவுக்கு 37 என்றும் ஜப்பானுக்கு 48 என்றும் இருக்கும்.

நாம் 2020ஆம் ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த எண்ணிக்கையும்,

உண்மைகளும் தகவல்களும் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகின்றன சூழலின் தாக்கத்தை, வீச்சை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோமா? வளர்ந்து வரும் நாட்டுக்குக் கல்வி, தொழில் திறன்கள் மற்றும் தகுந்த வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்ற சவாலை எதிர்கொள்ள விரிவான திட்டமிடல், தெளிவான அணுகுமுறை தேவைப்படும். இது அண்மையில் மேற்கொள்ளப் பட்டுள்ள மத்திய அரசின் பட்ஜெட் 2017 அறிவிப்புக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

மாற்றம், ஆற்றல் மற்றும் தூய்மை இந்தியா (டி.இ.சி.இந்தியா) எனச் சரியாக தலைப்பிடப்பட்டுள்ள இந்த பட்ஜெட் அரசாங்கத்தின் தரம் மற்றும் வாழ்க்கையின் தரத்தை மாற்றியமைக்க முயல்கிறது. இந்த விரிவான செயல்திட்டத்தை வளர்த்தெடுப்பதற்கு ஏற்ற பலவகையான தனித்த மையக்கருத்துகளில் அதாவது கிராம மக்கள், உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், வேலைவாய்ப்புக்கான திட்டங்கள், பாதுகாப்பு, செலவு குறைவான வீடுகள் போன்ற அம்சங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மேலும் விரைவுபடுத்துதல், பொறுப்புடைமை, வெளிப்படைத்தன்மை ஆகிய அம்சங்களில் மின்னணு பொருளாதாரத்தை வலுப்படுத்துதலுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

உருகுவே நாவலாசிரியர் எதுவர்தோ காலியானோ ஒரு முறை கூறினார், ‘‘எனக்கு கருணை மீது நம்பிக்கை இல்லை, நான் ஒருமைப்பாடு மீதுதான் நம்பிக்கை வைத்துள்ளேன். கருணை என்பது செங்குத்து கோட்டு முறையிலானது; அது புண்படுத்துவது ஆகும். இது மேலிருந்து கீழ்நோக்கிச் செல்வதாகும். ஒருமைப்பாடு என்பது கிடைக்கோட்டு முறையிலானது. இது மற்றவரை மதிக்கிறது; மற்றவரிடம் இருந்து கற்றுக் கொள்கிறது. மற்றவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள எனக்கு நிறைய விஷயங்கள் உள்ளது’’.

கிராமப்புற இந்தியா இன்று முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டிய மூன்று விஷயங்கள் இருக்கின்றன அனைத்து விதமான அணுகுதல்களும் வரம்புக்கு உட்பட்டுள்ளன மூலவளங்கள் குறைவாக உள்ளன மற்றும் அவை அணுகுவதற்கு உரிய தொலைவில் இல்லை. ஆழமாக வேரூன்றி உள்ள கருத்துகளை மாற்றுவது என்பது அல்லது அதனை மாற்றுவதற்கு தூண்டுதல் செய்வது மிகவும் கடினமாக உள்ளது என்பவை இதைவிடவும் முக்கியமானதாக உள்ளன. இத்தகைய சூழல்களில் மிகவும் தேவையானதாக இருப்பது கல்விதான். காலியானோவின் சிந்தனையின்படி பார்த்தால், அமெரிக்க எழுத்தாளர் மற்றும் எதிர்காலவியலாளரான ஆல்வின் டாஃப்ளர் கூறுகிறார், ‘‘இன்று சமுதாயத்தால் தம்மைச் சுற்றி உள்ள பெரும்பான்மையான இளைஞர்களுக்குச் சொல்லப்படும் ரகசியமான செய்தி என்னவென்றால் அந்த இளைஞர்கள் அவர்களுக்குத் தேவைப்படவில்லை என்பதுதான். சமுதாயம் எதிர்காலத்தில் ஏதாவது ஒரு காலகட்டத்தில் கடிவாளங்களைப் பற்றிக் கொள்ளும் வரை நன்றாகவே செயல்பட்டு வரும். ஏனெனில் எஞ்சி உள்ள நாம் அனைத்து ஆற்றல், அறிவு, கற்பனை மற்றும் திறமையை எதிர்நோக்கி உள்ளோம். இவற்றை இளைஞர்கள் நம்முடைய கஷ்டங்களைத் தீர்ப்பதற்காகக் கொண்டு வருவார்கள் எனக் காத்திருக்கிறோம். இளைஞர்களின் முழுமையான பங்கேற்பு இல்லாமல் சமுதாயம் தனது மனக்கசப்பான பிரச்சனைகளைத் தீர்க்க முயல்வது என்பது அறிவற்ற செயலாகும்’’.

கல்வியானது மிக முக்கியப் பங்கினை சமுதாயத்தில் வகிக்கிறது. உணர்திறன்கள் மற்றும் புலன் உணர்வுகளைக் கல்வி கூர்மைப்படுத்துகிறது. இது மனம் மற்றும் ஆன்மாவின் சுதந்திரத் தன்மைக்கு உதவுகிறது. சமதர்மம், சமயச்சார்பில்லாத கோட்பாடு மற்றும் ஜனநாயகம் ஆகிய மதிப்பீடுகளைக் கல்வி ஆழமாகச் சார்ந்துள்ளது. பொருளாதாரத்தின் பல நிலைகளுக்கு ஏற்ப மனித ஆற்றலை வளர்த்தெடுக்கிறது. ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் செயல்படும் தளமாக கல்வி உள்ளது. தேசிய அளவில் சுயசார்பு என்பதை உறுதிப்படுத்தும் ஒரு அம்சமாக கல்வி இருக்கிறது. தேசியக் கல்விக் கொள்கையில் கூறி உள்ளவாறு கல்வியின் சாராம்சமும் பங்கும் என்பது அனைவருக்கும் கல்வி என்ற சமத்துவம்தான். கல்விக்கான உரிமை (ஆர்.டி.இ) என்பது 2010 முதல் செயல்பாட்டில் உள்ளது. இதுவே இந்தத் திசையில் மிக முக்கியமான நடவடிக்கை ஆகும்.

வளர்ச்சிக்குத் தடங்கலாக எப்போதுமே ஒரு சில தடைக்கற்கள் இருக்கத்தான் செய்யும். அத்தகைய தடைக்கற்களில் ஒன்றுதான்

உள்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் இல்லாத நிலைமையாகும். கிராமப்புறங்களில் நல்ல ஆசிரியர்கள், கற்றல் பொருட்கள் முதலான மூலப்பொருட்களின் பற்றாக்குறை இருப்பதோடு அதிகரித்து வரும் வறுமை, குழந்தைத் தொழிலாளர், ஆரம்பக் கல்வியிலேயே இடைநிற்றல் விகிதாச்சாரம், எழுத்தறிவின்மை போன்ற அடிப்படை பிரச்சனைகளும் உள்ளன. இவை வெளிப்படையான பிரச்சனைகள் ஆகும். இவற்றை எதிர்கொள்ள புதிய தொழில்நுட்பத்தை ஏற்பதுவே தற்போதுள்ள ஒரே தீர்வாக இருக்கும்.

மின்னணு தொழில்நுட்பம் ஒரு சிறிய அளவு உள்ள நெல் வயலைக்கூட ஒரு வகுப்பறையாக மாற்றி விடும். அதுவும் ஒரு சில நிமிடங்களிலேயே இந்த மாற்றம் நிகழ்ந்து விடும். முன்பு மாணவர்கள் தங்கள் குடும்பங்களில் இருந்து தொலைதூரம் வந்து குருகுலங்களில் தங்கி கல்வி பயின்றனர். இவர்களுக்கு வாழ்க்கை முறை பற்றி கற்பிக்கப்பட்டது. இப்போது மின்னணு குருகுலம் பல அற்புதமான செயல்களை நிகழ்த்திக் காட்டுகிறது. இந்தப் புதிய நிர்மாண அமைப்புகளில் மாணவர்கள் எளிதாகக் கல்வி பயில்வதோடு தங்கள் குடும்பங்களுக்கும் ஆதரவாக இருக்கின்றனர். இளம் பருவத்திலேயே வேலை வாழ்க்கை என்ற இரு துருவங்களையும் சமநிலையாக நிர்வகிப்பதற்குக் கற்றுக் கொள்கிறார்கள். இந்தப் பரந்தப்பட்ட மாற்றத்துக்கான அலைவரிசையை உருவாக்குவதற்கு, கிராமப்புறங்களில் வைஃபி வசதி ஏற்படுத்துதல்: தொலைக்காட்சி, வானொலி, கணிப்பொறிகளை கற்றல் உதவி உபகரணங்களாகப் பயன்படுத்துதல்: தொழில்நுட்ப ஆர்வலர்களை உருவாக்கி களத்துக்கு அனுப்புதல்: இத்தகைய கல்வி மையங்களை உருவாக்குதல் ஆகியனவே வெற்றிக்கான படிக்கட்டுகளாக அமையும். தொடக்கநிலைக் கல்வியைப் பொருத்த அளவில் மொத்த சேர்க்கை விகிதம் (Gross Exrolment Ratio) 95 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருந்தாலும்கூட, கல்வியின் தரம் குறித்து இன்னமும் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் நிறைய உள்ளன. பல அரசுப் பள்ளிகளில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதி இல்லாமை, மிகச் சிறந்த தனியார் பள்ளிகளில்கூட பொருள் உணரா மனப்பாடக் கல்விமுறை இருப்பது போன்றவை மாணவர்களிடம் இருந்து உருவாகும் எந்த ஒரு புத்தாக்கச் செயலையும் தொடக்க நிலையிலேயே முடக்கி விடுகின்றன.

இந்தச் சூழலைப் புரிந்து கொண்டு பட்ஜெட்டில் பள்ளிக் கூடங்களில் கற்றல் விளைவுகளை வருட முடிவில் கணக்கீடு செய்து பார்க்கும் ஒரு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூர் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் வகையில் "இடைநிலைக் கல்விக்குப் புத்தாக்க நிதியம்" தொடங்க முன்மொழியப்பட்டுள்ளது. இது அனைவருக்கும் கல்வி, பாலினச் சமத்துவம், தர மேம்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 3,479 கல்வியில் பின்தங்கி உள்ள மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது என்பது முன்னோக்கிய வெற்றிக்கான பாதையில் சரியான படி நிலையாக அமையும். இதனை நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறுகிறார், "நவீன கல்வியானது மிகப்பெரும் நம்பிக்கையினால் உந்தப்பட்டிருக்கவில்லை. எனவே அந்தக் கல்வி முறையால் மிகச்சிறந்த விளைவுகள் அடையப்பட முடியவில்லை. நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற விருப்பத்தைவிட பழமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற விருப்பமே இளைஞர்களுக்குக் கல்வி அளிப்பதைக் கட்டுப்படுத்தும் நிலையில் உள்ளவர்களின் மனதில் மேலோங்கி உள்ளது." இதுதான் கல்வியில் அடுத்த படிநிலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது அவைதான் பல்கலைக்கழகங்கள்.

அறிவைத் தருவதற்கும் பட்டங்கள் மற்றும் பட்டயங்களை வழங்குவதற்கும்தான் உயர்கல்விக்கான பல்கலைக்கழகங்கள் நிர்மாணிக்கப்பட்டன. கற்றலின் உத்வேகம், விவாதம், இது இப்படி இருந்தால் என்பது போன்ற கேள்விகளை எழுப்பி அதற்கு விடையைத் தேடுதல் ஆகியன உயர்கல்வியின் முக்கிய அம்சங்கள் ஆகும். கற்பதற்கான சூழ்நிலையானது உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. கட்டுப்பாடற்ற நிறுவனத்தில்தான் சிறந்த கற்பித்தல் நிலைமை இருக்க முடியும். அதிலும் பல்வேறு துறைகளில் இருந்து வரும் கற்றறிந்த அறிஞர்களுடனான பகிர்தல்தான் சிறந்த கல்வியாக இருக்கும். எனவேதான் மிகச்சிறந்த பல்கலைக்கழகங்கள் ஏறத்தாழ அனைத்துத் துறைகளையும் நன்கு வளர்த்தெடுக்கின்றன. இப்பல்கலைக்கழகங்களில் கலைத்துறை முதல்

சமூக அறிவியல் வரை; அடிப்படை அறிவியல்கள் முதல் பயன்பாட்டு அறிவியல் வரை பல்வேறு வகையான துறைகள் செயல்படுகின்றன.

எனினும் இந்தியாவில், மிகப் பெரிய அளவில் விரிவடைந்து வரும் மாணவர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கும் வகையில் பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்பதில் வரம்பு எல்லைகள் மாறி வந்துள்ளன. ஒருங்கிணைந்த தரக் கட்டுப்பாடுகள் மற்றும் போதுமான நிதி வசதி முதலான அம்சங்கள் கல்வி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இணைப்பு பெறும் செயலுக்கு மட்டுமே நிர்ப்பந்திக்கின்றன. இது கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. நிர்வகிக்க முடியாத விகிதாச்சார அளவில் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெறும் அமைப்புகள் உருவான பிறகு, பல்கலைக் கழகத்தின் கவனம் கற்றல் மற்றும் அறிவைப் பகிர்தல் என்பதில் இருந்து மாறி நிர்வாகம் என்பதே முதன்மைக் காரணமாக இடம் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத்தின் மைய நடவடிக்கையாக தேர்வு நடத்துதலும் முடிவுகளை அறிவித்தலும் என்பது மாதிரியான சூழல் தற்போது உருவாகி உள்ளன. எனவே பல்கலைக்கழகத் துறைகளானது ஆசிரியர் மற்றும் மூல ஆதார வளங்கள் பற்றாக்குறையால் மாணவர்களுடன் பகிர்தலை நிறுத்திவிட்டன. மேலும் நிர்வாகக் குழு/ஆட்சிக் குழு, பாடத்திட்டக் குழு போன்ற நிறுவனத்துக்குள் செயல்படும் குழுக்களில் பல்வேறு அரசியல் குழுக்களின் ஆதிக்கம் நிரம்பிவிட்டது. இது கல்வி என்பதற்கு நேரம் ஒதுக்க முடியாத சூழலை ஏற்படுத்தி உள்ளது பல்கலைக்கழகம் எதற்கு முக்கியத்துவம் தர வேண்டுமோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாத சூழல் ஏற்பட்டு விட்டது.

இத்தகைய தேக்கத்தில் இருந்து விடுபட கல்வி நிலையங்களுக்குத் தன்னாட்சி என்பது சிறந்ததொரு வழிமுறையாக இருக்கிறது. தன்னாட்சி கல்வி நிலையங்களின் மரியாதைக்குரிய தலைவர்கள் கல்விக்கான சூழ்நிலையை மீட்டெடுப்பார்கள், பல்கலைக்கழக வளாகத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கல்விப்புலத் தேடல்களை பல்கலைக்கழக நிர்வாகச் செயல்களில் இருந்து பிரித்தெடுத்து மேற்கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பும் இருக்கிறது. ஒரு பல்கலைக்கழகத்தை நடத்துவதற்கான சட்டபூர்வ அனுமதி அம்சங்களும் மிகப்பெரிய மாற்றங்களுக்கு ஆளாக வேண்டிய தேவை உள்ளது. இவற்றை மிகச் சரியாக உணர்ந்துள்ள அரசு மிகச் சிறப்பான நிர்வாகத்தையும் தன்னாட்சியாக்க கல்விப் புலத்தையும் பராமரிக்கும் மிகத் தரமான உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

வாழ்நாள் முழுவதும் கற்றல், மெய்நிகர் கற்றல் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட/கலப்பு முறையிலான கற்றல் ஆகியன இன்று பலருடைய வாழ்க்கையை மாற்றி உள்ளது. பல்கலைக் கழகங்களின் மிகச் சிறந்த பாடத்திட்டங்கள் ஆன்லைன் மற்றும் ஆஃப்லைனில் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் ஸ்வயம் (SWAYAM) என்ற அடித்தளத்தை உருவாக்குவதற்காக அரசு முயற்சி எடுத்து வருகிறது. 350 ஆன்லைன் படிப்புகளுடன் இதனைத் தொடங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்வதற்கு சேர்கின்ற வாய்ப்போடு யார் வேண்டுமானாலும் மெய்நிகர் முறையில் படிப்புகளை மேற்கொள்ள இது உதவும்.

இதற்கு எதிரான நடவடிக்கையாக, உயர்கல்வி நிலையங்களுக்கான அனைத்து நுழைவுத் தேர்வுகளையும் நடத்துவதற்கான முதன்மைத் தேர்வு அமைப்பாகவும் தன்னாட்சி நிலையினதாகவும் சுயசார்பு கொண்டதாகவும் தேசிய நுழைவுத் தேர்வு ஏஜென்சியை நிறுவ வேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மீது ஏற்படுத்தும் அழுத்தம் மற்றும் மனச்சுமையைக் குறைத்து விடும். பலப்பல விண்ணப்பங்களை நிரப்பி அனுப்ப வேண்டிய தேவை, பல நுழைவுத் தேர்வுகளைக் கவனத்தில் கொண்டு எழுத வேண்டிய கட்டாயம், அத்தகைய தேர்வுகளில் ஒரு சிலவற்றையாவது நன்றாக எழுத வேண்டிய கட்டாயம் ஆகியன இல்லாத நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி படிப்பைத் தொடர்வதற்கான பணத்தேவைக்கு அதிர்ஷ்டத்தை நம்பி இருக்க வேண்டிய தேவையும் இல்லாமல் போகிறது.

இந்த நிலையில் ஃப்ரான்ஹோஃபர் மாதிரியைப் பின்தொடர்ந்து நிறுவப்படும் கல்வி நிலையங்களை ஊக்குவிக்கும் திட்டங்கள் வருவதையும் பார்க்க முடியும் என நான் நம்புகிறேன். இந்த மாதிரியில் ஒரு சங்கம் (நம்மைப் பொறுத்து இது தனியார்/அரசு

நிர்மாணிக்கும் சங்கம்) தனது வருவாயில் சுமார் 70%த்தை தொழிற்சாலை அல்லது குறிப்பிட்ட அரசு செயல்திட்டங்களுடனான ஒப்பந்தங்கள் மூலம் பெறும். மீதியுள்ள 30% பட்ஜெட்டானது 9:1 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில (மாநிலம்) அரசுகள் மூலம் சங்கத்திற்குக் கிடைக்கும். இது தொடக்கநிலை தயாரிப்பு ஆய்வுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும். எனவே சங்கத்தின் பட்ஜெட் அளவு என்பது கமிஷன்களில் இருந்து எந்த அளவு அதிகபட்சமானதாக வருவாயை வெற்றிகரமாக ஈட்டமுடியுமோ அதைப் பொருத்து உள்ளது. இந்த நிதியளிப்பு மாதிரியானது மத்திய அளவிலான சங்கத்துக்கு மட்டுமே பொருந்துகின்றது எனக் கூற முடியாது. மாறாக தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் கூடப் பொருந்தும். பயன்பாட்டு ஆய்வில் ஒரு முன்னணி நிலைக்கு வருவதை நோக்கிய ஃப்ரான்ஹோஃபர் சங்கத்தின் கனவை நனவாக்கும் உந்துதல் என்பதை இது நிறைவேற்றுகிறது. மேலும் நெகிழ்ச்சியான, தன்னாட்சியான, தொழில்முனைவான அணுகுமுறைக்கு சங்கத்தின் ஆராய்ச்சியானது முன்னுரிமை வழங்குகிறது.

இதுதவிர, இந்தியாவில் மேக்ஸ் பிளான்க் போன்ற கல்வி நிலையங்களின் அடிப்படை தொடக்கம் ஏற்படவே இன்னமும் நீண்ட காலம் ஆகும். தன்னுடைய முதன்மை இலக்கின்படி, மேக்ஸ் பிளான்க் சங்கம் தனது 83 மேக்ஸ் பிளான்க் கல்வி நிலையங்களில் இயற்கை, உயிரியியல், சமூக விஞ்ஞானங்கள்; கலை மற்றும் மானுடவியல் ஆகிய பிரிவுகளில் அடிப்படை ஆராய்ச்சிக்கு ஆதரவு அளிக்கிறது. இவற்றில் ஆய்வின் உயர்தரநிலைக்கு கவனம் தரப்படுகிறது. இத்தகைய கல்வி நிலையங்கள் பல்கலைக்கழகங்களோடு நெருக்கமான பிணைப்பில் இருந்து செயல்பட்டாலும் அவை தன்னாட்சி கொண்டவை ஆகும். இவை புத்தாக்க ஆய்வுக்கு முக்கியத்துவம் தருகின்றன. இந்தப் புத்தாக்க ஆய்வானது பெரும்பாலும் பல்கலைக்கழக அமைப்புக்குள் பொருந்தி வருவதில்லை. ஏனெனில் பல்கலைக்கழகங்கள் பல்துறை அல்லது துறை கடந்த முறையைக் கொண்டுள்ளன அல்லது மாநிலப் பல்கலைக் கழகங்களால் நிறைவு செய்து கொள்ள முடியாத அளவு இவற்றுக்கு மூலாதார தேவை உள்ளது.

இந்தியாவின் இளைய தலைமுறைக்கு உதவுவது போன்ற நீடித்த, நிலையான சூழலியல் அமைப்பு நமக்கும்கூட தேவைப்படுகிறது. மேலும் சர்வதேச தரத்திலான தொழில்த் திறன்களை மேம்படுத்தக்கூடிய தொழிற் சாலைகளும் பல பிரிவுகளில் தேவைப்படுகின்றன. நாடு முழுவதும் தொழில் திறன் அடிப்படையில் பயிற்சி தர வேண்டிய ஒரு வலைப்பின்னல் அமைப்பும் நமக்குத் தேவைப்படுகிறது. பல படிநிலைகளில் பணியாளர்களை உருவாக்கும் வகையில் மல்ட்டிகாலர் வேலைத்திறன் (உடலுழைப்பு தொழிலாளர் (Blue collar) அலுவலகப் பணியாளர் (White Collar) போன்ற பல பிரிவுகளுக்கும் தேவையான தொழிலாளர் சக்தி) பயிற்சி இருக்க வேண்டும். மதிப்புச் சங்கிலித் தொடரில் பணியாளர்கள் முன்னோக்கி நகர்வதாக இருக்க வேண்டும். இது நம்மை விவாதத்தின் அடுத்த பகுதிக்குக் கொண்டு வருகின்றது. தொழில்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு கல்வி நிலையங்களுக்கான மிகப் பெரிய தேவையை எதிர்கொள்ளுதல் என்ற விவாதம் இப்போது தோன்றி வருகிறது.

தேசத்தின் கல்விக்கான முன்னோடி நடவடிக்கைகளில் மிக முக்கியமான கூறாக இருப்பது தொழில் கல்வி மற்றும் பயிற்சியாகும் (Vocational Education and Training -VET). மாறிவரும் தேசிய சூழலில் தொழில்கல்வி தனது பங்கைத் திறம்பட செயலாற்றவும் குடிமையியல் பங்கீட்டின் பலனை இந்தியா பெறவும், தொழில்கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதில் உள்ள முக்கிய கூறுகளை மறுவரையறை செய்ய வேண்டியதன் அவசரத் தேவையை அரசு உணர்ந்துள்ளது. இக்கல்வி மற்றும் பயிற்சியானது நெகிழ்ச்சியானதாக, தற்கால நிலைமைக்கு ஏற்றதாக, பொருத்தமானதாக அனைவருக்கும் உரியதாக, படைப்பாக்க முறையிலானதாக இருக்க வேண்டும்.

இந்த யோசனைகளில் பலவற்றைச் செயலாக்க வேண்டிய தேவையைப் பட்ஜெட் மீண்டும் வலியுறுத்தி உள்ளது. எனவே நாடு முழுவதும் 600 மாவட்டங்களுக்கும் மேலாக பிரதம மந்திரி கௌஷல் கேந்திராக்கள் விரிவாக்கப்பட்டுள்ளன. மேலும் நாடு முழுவதும் 100 இந்தியா இன்டர்நேஷனல் தொழில்கல்வி மையங்கள் அமைக்க முன்மொழியப்

பட்டுள்ளது. மேலும் சங்கல்ப் (SANKALP) திட்டம் 4,000 கோடி ரூபாயில் தொடங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. சங்கல்ப் திட்டம் என்பது வாழ்வாதார மேம்பாட்டுக்கான தொழில்திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வு என்பதாகும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 3.5கோடி இளைஞர்களுக்கு சந்தை தொடர்பான பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அது பற்றிய சில புள்ளி விவரங்களை இப்போது பார்ப்போம்:

- 2012ல் 474.1 மில்லியன் தொழிலாளர்கள் இருந்தனர். சீனாவிற்கு அடுத்து தொழிலாளர்கள் அதிகம் உள்ள இரண்டாவது நாடாக இந்தியா உள்ளது.
- வரையறுக்கப்படாத, ஒருங்கிணைக்கப்படாத தொழில்களில் 94% வேலை என்பது எந்தவித சமூக பாதுகாப்பையோ மற்றும் வேலை வாய்ப்பின் எந்த ஒரு பலனையோ தருவதில்லை. தள்ளுவண்டி வியாபாரிகள் முதல் வீட்டிலேயே வைரம் மற்றும் ஜெம் பாலிஷ் செய்பவர்கள் வரை இதில் அடங்குவர்.
- அரசாங்கம், அரசுக்குச் சொந்தமான தொழில்கள் மற்றும் தனியார் தொழில்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பிரிவினராக உள்ளனர்.
- இந்தியாவில் உள்ள தொழிலாளர்களில் 60% பேர் சுயவேலைவாய்ப்பில் உள்ளவர்கள் ஆவர். இவர்கள் ஏழைகளாகவே தொடர்ந்து இருக்கின்றனர்.
- சுமார் 30% ஊழியர்கள் தற்காலிகத் தொழிலாளர்கள் ஆவர். சுமார் 10% பேர்தான் நிரந்தர ஊழியர்கள் ஆவர். இந்த நிரந்தர ஊழியர்களில் ஐந்தில் இரண்டு பங்கினர் பொதுத்துறையில் வேலை பார்ப்பவர்கள் ஆவர்.
- தனிநபர் வருமானம் மற்றும் உற்பத்தித் திறன் ஆகியன மிகக் குறைந்த அளவில் இருக்கும் நாடாக இந்தியா உள்ளது. தனிநபர் வருமானம் ஜப்பான் நாட்டில் 30,000 டாலராகவும் இலங்கையில் 879 டாலராகவும் இருக்கிறது. இந்தியாவில் இது 433 டாலராக உள்ளது. தற்போதைய நிலையில் இந்தியாவின் தனிநபர் வருமான அளவு என்பது வளர்ந்த நாடுகளின் தனிநபர் வருமானத்தில் 7.5%ஆக மட்டுமே உள்ளது. இன்னும் அரை நூற்றாண்டில் இது 80%ஆக அதிகரித்தாக வேண்டும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
- நமது மக்கள் தொகையில் 55% பேர் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆவர். ஆனால் இந்த விவசாயப் பிரிவானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அளித்து வரும் பங்கு தற்போது மெதுவாகக் குறைந்து கொண்டே வருகிறது. கிராமம் நகரம் இடப் பெயர்வு என்பது குறிப்பிடத்தக்க பிரச்சனைகளுக்குக் காரணமாக உள்ளது.

இந்த நிலைமையில் இத்தகைய பிரச்சனைகளைத் திறம்படச் சமாளிப்பதற்காக சங்கல்ப் திட்டமானது நன்கு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டாக வேண்டிய தேவை உள்ளது. அது மட்டுமின்றி 2017-18ல் 2,200 கோடி செலவு மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ள தொழிலக மதிப்பு கூட்டுக்கான தொழில்திறனை வலுப்படுத்துதல் (STRIVE) என்ற திட்டம் எம்.எஸ்.இ.பிரிவோடு அதிகபட்சமாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும். குறிப்பிடத்தக்க மதிப்பு கூட்டல் செயல்பாடுகளுக்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள தொழில் பிரிவுக்கான மேம்பாடு என்பதற்கு இணையாக தோல் மற்றும் காலணி தொழில்களில் வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டங்களைக் கூறலாம். சுற்றுலா மற்றும் உள்ளூர் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் உலகம் முழுவதும் இன்கிரடபிள் இந்தியா 2.0 பிரச்சாரம் தொடங்கப்பட வேண்டும்.

பெரும்பான்மையான வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் முதுமையடையும் மக்கள் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து வருகிறது. தொழிலாளர் சக்தியில் இருந்து இவர்கள் வெளியேறுவதால் வேலை வாய்ப்புகளுக்கான இடைவெளியை இது அதிகமாக்குகிறது. இந்த இடைவெளியை நிரப்புவதில் இந்தியா முன்னணியில் இருந்தாக வேண்டும். அண்மைக்கால செய்தித்தாள் அறிக்கை ஒன்றின்படி, அடுத்துவரும் சில ஆண்டுகளில் இந்த எண்ணிக்கையானது ஜப்பானில் 8 மில்லியன், அமெரிக்காவில் 17 மில்லியன், ஒட்டுமொத்த ஐரோப்பிய மக்கள் தொகையில் 4% என்ற அளவில் பெரியதாக உள்ளது. இந்தியா

இதைப் புறக்கணித்துவிட்டால், இந்திய வாய்ப்புகளை நாம் சீனா, இலங்கை மற்றும் வளர்ந்துவரும் ஆசிய பொருளாதாரங்களிடம் இழக்க வேண்டி வரும்.

## நிறைவுக் குறிப்புகள்

மின்னணுமயமாதலுக்கான பிரதமர் மோடியின் உந்துதல் நடவடிக்கைகள் இளைஞர்கள் மீது பலபடிநிலையிலான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். அதே போன்று இந்தியாவில் வர்த்தகம் நடத்தப்படும் முறை, பொதுவில் மதிப்புசார் அமைப்புகளின் மீதும் விளவுகளை ஏற்படுத்தக் கூடும். ஆக்கப்பூர்வமான தொடக்க நடவடிக்கைகள் எனச் சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமென்றால், பீம் செயலி போன்ற மின்னணு பொருளாதாரத்துக்காக பட்ஜெட்டில் சொல்லப்பட்டுள்ள அம்சங்களைக் குறிப்பிடலாம். அதேபோன்று தனிநபர்களுக்கான ரெஃபரல் போனஸ் திட்டம் மற்றும் வியாபாரிகளுக்கான பணம் திரும்பப் பெறும் திட்டம், ஆதார் பே ஆகியவற்றையும் குறிப்பிடலாம். 2017-18ல் 2,500 கோடி மின்னணுப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற இலக்கோடு இயக்கம் தொடங்கப்பட முன்மொழியப்பட்டுள்ளது. யு.பி.ஐ, யு.எஸ்.எஸ்.டி, ஆதார் பே, ஐ.எம்.பி.எஸ், டெபிட் அட்டைகள் ஆகியவை மூலமாக இந்தப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும். அனைத்து அரசாங்கப் பரிவர்த்தனைகளும் மின்னணு வழிமுறை மூலமாகவே செய்யப்பட வேண்டும் என்ற முன்மொழிவுகளும் உள்ளன. இவை எல்லாம் சேர்ந்து அரசாங்கத்தில் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்துவதோடு தனியார் துறையிலும் இதே நிலைமையை ஏற்படுத்தும். மேலும் புதிய வேலை வாய்ப்புகளும் தொழில்திறன் பெறும் வாய்ப்புகளும் உருவாக்கப்படும்.

முன்னர் சுட்டிக்காட்டியபடி, மேக்ஸ் பிளாங்க் அல்லது ஃபிரான்ஹோஃபர் கல்வி நிலையங்கள் போன்ற வாய்ப்புகள் ஒருங்கிணைந்த புத்தாக்கத்துக்கான வழியை உருவாக்க உள்ளன. அதேபோன்று இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள்/ஸ்டார்ட் அப் இந்தியா போன்ற திட்டங்களும் புத்தாக்கத்தை ஊக்குவிக்கின்றன. நாட்டிற்குள்ளேயே உற்பத்தி செய்தலை முன்னிறுத்தும் இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் திட்டமானது பாதுகாப்பு, ரெயில்வே, உள்கட்டமைப்பு முதலான பல்வேறு துறைகளில் புதிய பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய உதவும். இதுவே பட்ஜெட்டின் பிரலமான அம்சமாக இருக்கிறது.

நமது பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்திறன்களையும் கல்வியையும் ஒருங்கிணைக்கக் கூடிய பல கூடுதலான திட்டங்களை நான் தனிப்பட்ட வகையில் விரும்புகிறேன். முறையான கல்வி அமைப்பில் இருந்து தொழில்கல்வி முறைக்கு மாறவும் வெளியேறவும் பலநிலையிலான வழிமுறைகள் இருக்க வேண்டும். அதே போன்று வேலைச் சந்தையிலும் இது போன்ற நிலைமை இருக்க வேண்டும். அரசின் அனைத்து தொழில்திறன் தொடர்பான முன்னோடி நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் வகையில் தேசிய தொழில்திறன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்டால் செய்யப்படும் முதலீடுகளுக்கான பலன்கள் சரியான அளவில் கிடைக்கும்.

இளைஞர் மேம்பாட்டை மையமாகக் கொண்டு தொடங்கப்படுகின்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும்கூட, 2012ஆம் ஆண்டு முதல் கல்விக்காகச் செலவிடுவது ஜி.டி.பி அளவைக் கொண்டு பார்க்கும் போது குறைந்து கொண்டே வருகிறது. அதேசமயம் இளைஞர் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்தியாவின் வளர்ச்சி மற்றும் எதிர்காலம் குறித்த புதிய அத்தியாயத்தை அரசாங்கம் எழுத வேண்டும் என நான் நம்புகிறேன். குடிமக்களுக்கான சாசனத்தை உருவாக்குதல், அவர்களின் தேவைகளை நிறைவு செய்தல், கடமைகளைக் கவனமாக நிலைநிறுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்தப் புதிய அத்தியாயம் எழுதப்பட வேண்டும். இந்த உத்வேகத்தைத் தொடர்ந்து வைத்திருக்க, குடிமக்கள் சட்டரீதியிலான செல்வத்தைச் சேர்க்க வேண்டிய தேவையும் உள்ளது. அவர்களின் நெறிமுறை சார்ந்த பொறுப்புகளும் நிறைவேற்றப்பட வேண்டும். இப்போது கட்டியக்கோல் அடுத்த தலைமுறைக்கு கையளிக்கப்பட்டுள்ளதால், அதிக அதிகாரம் அதிக பொறுப்புகள் இருக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

•

# நிதிநிலை அறிக்கையில் புதிய மாற்றங்கள்: கட்டமைப்பு மற்றும் நடைமுறை

- ஹப்பி பந்த்

பட்ஜெட், அரசின் பொறுப்பு ஆகியவற்றிற்கான மையத்தின் ஆலோசனைக் குழுத் தலைவர்

## அறிமுகம்

12வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுக்கு வர இருக்கும் நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட சில முடிவுகள் பட்ஜெட் நடைமுறையில் வரும் சில மாற்றங்களுக்கான அறிகுறியாகவே அமைந்திருந்தது. கடந்த பிப்ரவரி மாதம் முதல் தேதி தாக்கல் செய்யப்பட்ட தற்போதைய அரசின் நான்காவது நிதிநிலை அறிக்கை இத்தகைய சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்த மத்திய பொது பட்ஜெட் 2017-18 நிதி ஒருங்கிணைப்பைப் பொறுத்த வரை ஒட்டுமொத்த கொள்கைகள் தொடர்ந்து பின்பற்றப்படுவதை எடுத்துக்காட்டுகிறது. பட்ஜெட் நடைமுறைகளைப் பொறுத்தவரையில், அது ஏராளமான நடைமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. பொது பட்ஜெட்டுடன் ரயில்வே பட்ஜெட் இணைக்கப்பட்டது. மத்திய அரசின் செலவுக்கான பட்ஜெட்டில் திட்டம் மற்றும் திட்டமில்லா பிரிவுகள் நீக்கப்பட்டு, பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் தேதி ஒரு மாத காலம் முன்னதாக மாற்றிஅமைக்கப்படுள்ளது.

## பொது பட்ஜெட்டுடன் ரயில்வே பட்ஜெட் இணைப்பு

ரயில்வே பட்ஜெட் பொது பட்ஜெட்டின் ஒரு பகுதியாக தாக்கல் செய்யப்பட்டது இந்த பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பெரிய மாற்றமாகும். நிதி ஆயோக்கின் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த முடிவால், கடந்த 92 ஆண்டுகளாக தனியாக ரயில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வந்த நடைமுறைக்கு முடிவு கட்டப் பட்டுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியின்போது, 1920களின் தொடக்கத்தில் ரயில்வேக்கான நிதி பொது நிதியில் இருந்து தனியாக பிரிக்கப்பட்டது. இந்த இரண்டு பட்ஜெட்களும் ஒன்றாக இணைக்கப்பட்டதன் காரணமாக ரயில்வேயில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று வாதிடப்படுகிறது.

இந்த மாற்றம் வெறும் ஒப்பனை மாற்றம் தான் என்று கருத்து தெரிவித்துள்ள சிலர், ரயில்வே துறையை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்று கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட ராகேஷ் மோகன் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது மிகவும் முக்கியம் என்றார். இந்தக் குழு இந்திய ரயில்வே துறை “முதலீடுகளைப் பொறுத்தவரை ஒரு மோசமான வட்டத்திற்குள் சிக்கிக் கொண்டு இருப்பதாகவும், பற்றாக்குறை வளங்களின் தவறான ஒதுக்கீடு, அதிகரித்து வரும் கடன், மோசமான வாடிக்கையாளர் சேவை மற்றும் வேகமாக சீரழிந்து வரும் பொருளாதார நிலை” ஆகியவற்றில் சிக்கிகொண்டிருப்பதாக கருத்து தெரிவித்திருந்தது. இந்திய ரயில்வே துறை ஒரு வர்த்தக நிறுவனமாக செயல்படுகிறதா அல்லது சமூக நோக்கத்துடன் செயல்படுகிறதா என்ற முக்கிய கேள்வி எழுந்துள்ளது. இந்திய ரயில்வே துறையில் சீர்திருத்தம் மற்றும் நவீனமயம் உடனடித் தேவை என்றும் இந்தக் குழு கருத்து தெரிவித்துள்ளது. முக்கியமற்ற செயல்பாடுகள் தொடரக்கூடாது, செயல் திறன் நிர்வாக முறைகளில் மறுசீரமைப்பு தேவைப்படுகிறது. இந்திய ரயில்வே துறையின் சமூக செயல்பாடுகளுக்கான செயல்பாடுகளின் செலவுகள் மத்திய அரசு அல்லது மாநில அரசுகளால் நேரடியாக ஏற்கப்பட வேண்டும் என்று பல்வேறு குழுக்கள் பரிந்துரை செய்துள்ளன.

## திட்டம் மற்றும் திட்டமில்லா செலவின வகைகளை முடிவுக்கு கொண்டுவருதல்

செலவினத்துக்கான பட்ஜெட்டை திட்டம் மற்றும் திட்டமில்லா என வகைப்படுத்தப்படும் முறை 1951ம் ஆண்டு முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. திட்ட ஒதுக்கீடு, ஐந்தாண்டு காலத் திட்டத்தில் விளக்கமாக கூறப்பட்டுள்ள திட்டங்களுக்கான அரசு திட்ட செலவினங்கள் திட்டக் கமிஷனால் முடிவு செய்யப்படும். இதில் திட்டங்களுக்கான அனைத்து செலவினங்கள், மீண்டும் ஏற்படக்கூடிய செலவுகள் அல்லது மூலதன செலவுகள் இதில் அடங்கும். உதாரணத்துக்கு சர்வ சிக்ஷ அபியான் கீழ் ஆசிரியர்களுக்கான ஊதியச் செலவு, நிறுவப்பட்ட வருவாய் திட்டச் செலவு, மற்றும் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவு ஆகியவை திட்ட மூலதன செலவாகும். திட்டக் குழு/ ஐந்தாண்டு திட்ட காலம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட அரசின் சேவைகள் மற்றும் விழாக்களுக்கான செலவுகள் திட்டமில்லா செலவாகும். உதாரணத்திற்கு வட்டிக் கட்டணங்கள், மானியங்கள், ஊதியம் மற்றும் ஓய்வூதியம் (பல்வேறு துறைகளில் வழக்கமான பணியாளர்களுக்கு), காவல்துறை, பாதுகாப்பு மற்றும் சொத்துக்கள் பராமரிப்புக்கான செலவுகள் அல்லது பல்வேறு துறைகளுக்கான உள்கட்டமைப்புச் செலவுகள் ஆகியவை திட்டமில்லாச் செலவுகள் ஆகும். திட்டமில்லாச் செலவு என்பது பாதுகாப்பு, காவல்துறை அல்லது வட்டிக் கட்டணங்கள் போன்றவைக்கு மட்டுமல்ல என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும், முக்கிய வளர்ச்சித்

துறைகள் போன்ற கல்வி மற்றும் சுகாதாரம், வழக்கமான நிலை அரசுப் பணியாளர்கள் அனைவரின் ஊதியங்கள், வெவ்வேறு துறைகளுக்கான திட்டமில்லா பட்ஜெட்களில் இருந்து வரும் உள்கட்டமைப்பு மற்றும் சொத்துக்களின் நிர்வாகத்துக்கான ஆதாரங்கள் அடங்கும்.

திட்ட செலவு மற்றும் திட்டமில்லா செலவுகளை வகைப்படுத்த தற்போதுவரைப் பின்பற்றப்படும் நடைமுறைகளைப் புரிந்து கொள்ள நாம் சில உதாரணங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்க ஊரக மேம்பாட்டுத்துறைக்கான ஒதுக்கீடு திட்ட செலவுகளாகவும், ஆனால் அவற்றின் நிர்வாகம் திட்டமில்லா பட்ஜெட்டைச் சேர்ந்ததாகும். கேந்திரிய வித்யாலயாக்கள், நவோதயா வித்யாலயாக்கள் இதர அரசுப் பள்ளிகளின் வழக்கமான நிலையிலான ஆசிரியர்களுக்கான ஒதுக்கீடு, சுகாதார மையங்கள் மற்றும் அரசு மருத்துவக்கல்லூரிகளின் வழக்கமான நிலை மருத்துவர்களுக்கான நிதி திட்டமில்லா பட்ஜெட்டிலிருந்து வருகிறது, எனினும் சர்வ சிக்ஷ அபியான் கீழ் ஒப்பந்த ஆசிரியர்கள், மற்றும் தேசிய சுகாதார திட்டத்தின் கீழ் ஒப்பந்த மருத்துவர்களுக்கான ஊதியம் திட்ட பட்ஜெட்டிலும் வருகிறது. இந்த பட்ஜெட் நடைமுறைக்கு வரும்போது இந்த செலவினங்கள் அனைத்தும் ஒன்றாக சேர்க்கப்படும்.

செலவின பட்ஜெட்டை திட்டம் மற்றும் திட்டமில்லா என இரண்டாகப் பிரிப்பதன் விளைவாக திட்டச் செலவுகள் வளர்ச்சி சார்ந்தவை என்றும் திட்டமில்லா செலவுகள் வளர்ச்சி சாராதவை என்றும் தவறாக புரிந்துகொள்ளப்படுகிறது.

இதனால் திட்டச் செலவுகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படுவதுடன், திட்டமில்லா செலவாக வகைப்படுத்தப்பட்ட நிர்வாகம் போன்ற அம்சங்களும் திட்டமில்லா செலவுத் தேவைகள் புறக்கணிக்கப்பட்டு, அதனால் பெரும்பாலான மாநிலங்களில் பல்வேறு துறைகளில் வழக்கமான நிலை பணியாளர்களின் தீவிர பற்றாக்குறை ஏற்பட்டது. இந்தப் பிரிவு பட்ஜெட்டிற்கான ஆதாரங்கள் கிடைப்பதை பாதிக்கச்செய்து சேவைகளை அளிப்பதற்கான ஒட்டுமொத்த செலவை உறுதிசெய்வதையும் கடினமாக ஆக்கியது. 2017 பட்ஜெட் முதல் பட்ஜெட் ஆவணங்கள் ஒட்டுமொத்த செலவினங்களையும் ஒன்றாக அளிக்கும். திட்டம் மற்றும் திட்டமில்லா செலவுகளை இணைப்பதன் மூலம், ஆதாரங்களுக்கான ஒதுக்கீடு எளிதாக இருப்பதுடன், விளைவுகளுக்கான ஒதுக்கீட்டை இணைக்கவும் முடியும் என்றும் நம்பப்படுகிறது. திட்டம் மற்றும் திட்டமில்லா செலவுகளை இணைப்பது குறித்து ஆராய அமைக்கப்பட்ட செயல் குழு, அரசு செலவின பட்ஜெட்டில் திட்டம் மற்றும் திட்டமில்லா வகைகளை பிரிக்கப்படுவதை தவிர்ப்பது, ஆதாரங்களுக்கான சரியான ஒதுக்கீட்டை துறைகள் மற்றும் அமைச்சகங்களுக்கு முழுமையான பட்ஜெட் ஒதுக்கீட்டை வசதிப்படுத்துவதற்காக செய்யப்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

தற்போது வரை தலித்துகளுக்கான ஒதுக்கீடுகள் தலித்துகளுக்கான திட்ட முதலீட்டில் 16.6 சதவிகிதம் இருக்க வேண்டும் என்ற ஆதிதிராவிடர் துணை திட்டத்தின் யுக்தியைப் பின்பற்றி பட்ஜெட்டில் அறிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் ஆதிதிராவிடர்கள் நல்வாழ்வுக்கான ஒதுக்கீடுகள் அறிக்கை 10ஏவின் கீழ் அளிக்கப்பட்டுள்ளது என்றபோதிலும், இந்த ஒதுக்கீடுகளுக்காக அமைச்சகங்கள் மற்றும் துறைகள் என்ன அளவுருக்களைப் பயன்படுத்தப் போகின்றன என்பது தெளிவற்றதாகவே உள்ளது. எஸ்சிஎஸ்பியின் கீழ் அமைச்சகங்கள் மற்றும் துறைகள் புதிய விதிமுறைகளை உருவாக்க வேண்டும் என்பது முக்கியமாக ஆகிறது.

மத்திய அரசைப் பின்பற்றி இந்த வேறுபாட்டைப் போக்கும் வகையில் இந்தப் புதிய பட்ஜெட் நடைமுறையை சில மாநிலங்கள் பின்பற்றக்கூடும். இந்தப் பிரிவுகளுடன் தங்களது அடுத்த பட்ஜெட்டை தயாரிக்கும் மாநிலங்கள் கஷ்டத்தை சந்திக்கக் கூடாது என்பதை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

திட்டம் மற்றும் திட்டமில்லா வேறுபாடுகள் கைவிடப்படும் போது, அரசு செலவில் பெரும் பகுதி வருவாய் செலவாக அறிவிக்கப்படும் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் செலவினங்கள் மூலதனம் மற்றும் வருவாய் எனப் பிரிக்கப்படுவதில் பிரச்சனை ஏற்படும் என்பதால் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்தப் புதிய திட்டமிடும் கட்டமைப்பில், துணை தேசிய மட்டத்தில் திட்டமிடுதலின் முக்கியத்துவம் மற்றும் பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. மக்களின் தேவைகளை கவனத்தில் கொண்டு, வளர்ச்சிக்கான இடைவெளிகளைப் போக்க பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலை மேற்கொள்வது மிகவும் முக்கியமான யுக்தியாக அங்கீகரிக்கப்படுகிறது. அரசியல் சட்ட அமைப்பாக உள்ள போதிலும் மாவட்ட திட்டக்குழு புறக் கணிக்கப்பட்டு வந்துள்ளது. ஐந்தாண்டுத்திட்ட அணுகுமுறை முடிவுக்கு வரும்போது, மாவட்டத் திட்டக்குழு பலப்படுத்தப்பட்டு அதன் மூலம் கீழிருந்து மேலான திட்டம் மாவட்ட மற்றும் மாநில அளவில் ஆதரிக்கப்பட வேண்டும்.

முன்பிருந்த ஐந்தாண்டு திட்ட நடைமுறையின் முக்கிய நோக்கம், சிறப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல்

அளிப்பதன் மூலம் பிராந்திய வேறுபாடுகளைக் களைவதாக இருந்தது. இந்தக் கண்ணோட்டம் கைவிடப்படாமல், இந்த பிராந்திய வேறுபாடுகள் குறைக்கப்படுவதற்கான புதிய முறைகளை மத்திய அமைச்சகங்கள் கண்டுபிடித்து, பின்தங்கிய பிராந்தியங்களை அடையாளம் கண்டு, அவற்றுக்கு கூடுதல் பொது ஆதாரங்களை அளிக்க வேண்டும்.

### ஒரு மாதம் முன்னதாக பட்ஜெட் தாக்கல்

மத்திய பட்ஜெட் இந்த ஆண்டு ஒரு மாதம் முன்னதாகவே பிப்ரவரி முதல் தேதி தாக்கல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு வரை ஆண்டுதோறும் பட்ஜெட் பிப்ரவரி மாதத்தின் கடைசி வேலை நாள் அன்று தாக்கல் செய்யப்படுவது வழக்கமாக இருந்தது. 2000வது ஆண்டு வரையில் நாம் பிரிட்டிஷ் நடைமுறையைப் பின்பற்றி மாலை 5 மணிக்கு பட்ஜெட்டைத் தாக்கல் செய்து வந்தோம். ஆனால் அதன் பின்னர் அது காலை 11 மணிக்கு மாற்றப்பட்டது.

மத்திய பட்ஜெட் ஒரு மாதம் முன்னதாகவே தாக்கல் செய்யப்படுவதால், அதற்கான சட்ட ஒப்புதல் புதிய நிதியாண்டு வரும் முன்னதாக பெறப்பட்டு, அதன்படி பல்வேறு அமைச்சகங்களும் மத்திய திட்டங்களுக்கான நிதி முதல் காலாண்டிலேயே மாநிலங்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தும். முன்பு பட்ஜெட் கூட்டத்தொடர் பிப்ரவரி மாதத்தின் கடைசி வாரத்தில் தொடங்கி நடுவில் சில நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு பின்னர் மீண்டும் கூடி மே மாத மத்தி வரையில் செயல்படும்.

ஒதுக்கீட்டு மசோதா பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது பாதியில்தான் நிறைவேற்றப்படும் என்பதால் மார்ச் மாதத்தில் இடைக்காலஒதுக்கீட்டுக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கான வழக்கமான செலவுகளுக்கு தேவைப்படும் நிதி பொதுத் தொகுப்பிலிருந்து எடுக்கப்படும். மத்திய பட்ஜெட் 2017-18 ஒரு மாதம் முன்னதாகவே தாக்கல் செய்யப்பட்டதன் மூலம், செலவிடும் அமைச்சகங்கள் மாநிலங்கள் மற்றும் இதர நடைமுறைப்படுத்தும் அமைப்புகளுக்குத் தேவைப்படும் நிதியை நிதியாண்டு தொடக்கம் முதலாகவே ஒதுக்கீடு செய்ய முடியும்.

இருப்பினும் இங்கு சில உள்ளார்ந்த சவால்கள் உள்ளன. போதுமான வருவாய் மற்றும் செலவின தகவல் இல்லாமல் இருப்பது, பட்ஜெட் தயாரிப்பு பணிகளை பிப்ரவரி முதல் தேதிக்கு மாற்றுவதில் உள்ள ஒரு அனுகூலமற்ற நிலையாகும். கடந்த ஆண்டு வரையில் பட்ஜெட் தயாரிப்பு நடைமுறைகள் பிப்ரவரி மத்தியில் இறுதி கட்டத்துக்கு வரும்போது, முதல் ஒன்பது மாதங்களுக்கான வருவாய் வசூல் மற்றும் செலவினப் போக்குகள் குறித்த தகவல்கள் கிடைத்திருக்கும். இந்த ஆண்டுக்கான பட்ஜெட் தயாரிப்பு 2016-17ம் நிதியாண்டின் முதல் இரண்டு காலாண்டு தகவல்கள் அடிப்படையில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதாரத்தில் துறை சார்ந்த வளர்ச்சி குறித்த தகவல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பட்ஜெட் தேதியை ஒரு மாதம் முன்னதாக மாற்றியமைப்பதில் வேறு சில இடர்பாடுகளும் இருக்கும். நாடாளுமன்றத்தின் இரு அவைகள் மற்றும் நிலைக்குழுக்களுக்கு பட்ஜெட் குறித்து விவாதிக்க போதுமான அவகாசம் கிடைக்குமா என்பது மற்றொரு கேள்வியாக இருக்கும்.

### ஒருங்கிணைந்த பட்ஜெட் முடிவுகள்

முதல் முறையாக அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளை உள்ளடக்கியதாக ஒருங்கிணைந்த பட்ஜெட்டாக இது அமைந்துள்ளது என்று பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுச் செலவினத்திலிருந்து குறிப்பாக வளர்ச்சித் திட்டங்களில் இருந்து கிடைக்கும் முடிவுகளின் மீது கண்ணோட்டத்தை வலுப்படுத்துவதில் இது நோக்கம் கொண்டுள்ளது. இந்த ஆவணம் தயாரிக்கப்படுவது அரசுத் திட்டங்களில் செலவிடப்படும் பொதுப் பணத்தில் விரும்பும் முடிவுகளை எட்டுவதற்கான முக்கியத் தகவல்களை அளிக்கும்.

### பட்ஜெட்டை வலுப்படுத்த இதர நடவடிக்கைகள்

பட்ஜெட் நடைமுறையில் செய்யப்பட்டுள்ள இந்த மாற்றங்கள் பொது செலவின நிர்வாகத்தை மேம்படுத்துவதில் கண்ணோட்டம் கொண்டிருப்பதுடன், சரியான திசையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதிலும் கண்ணோட்டம் செலுத்தும். எனினும் சமூகத் துறையில் அரசின் செலவுகளில் இருந்து கிடைக்கும் முடிவுகளை மேம்படுத்த இந்த நடவடிக்கைகள் மட்டும் போதுமானதாக இருக்காது. வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க அரசியல் சட்ட ரீதியான கட்டாயம் கொண்ட மாவட்ட திட்டக் குழுக்கள் பலப்படுத்தப்படுவது முக்கியமாகும். மாவட்ட அளவில் சமூகத் துறைத் திட்டங்களில் அரசின் செலவினங்கள் குறித்து மதிப்பிடப்படாத தகவல்களை மதிப்பிடுவது ஒரு பெரிய சவாலாக இருக்கும். இத்தகைய தகவல்கள் உரிய நேரத்தில் மதிப்பிடப்படும் வகையில் வெளியிடப்பட்டு அது பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் போது, வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி பயன்படுத்தப்படுவது பொதுக் கண்காணிப்பை வலுப்படுத்தி, பொது செலவினங்களில் கிடைக்கும் பயன்களை மேம்படுத்தும். இந்த இதர முக்கிய நோக்கங்களும் பட்ஜெட் நடைமுறையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

•

# வேளாண்மைக்கு பெரும் ஊக்கம் தரும் மத்திய பட்ஜெட் 2017-18

**- லட்சுமி ஜோஷி மற்றும் வி.பி. அஹுஜா**

NCAER அமைப்பின் கூடுதல் ஆராய்ச்சியாளர்.

2017ம் ஆண்டு பட்ஜெட்டில் வேளாண் துறைக்கான பல்வேறு அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இந்திய விவசாயிகளுக்கு வசதி, நுகர்வுக்கு ஊக்கம் மற்றும் வேளாண்மை மற்றும் அது சார்ந்த துறைகளில் வளர்ச்சி ஆகியவற்றை அளிக்கும்.

தோட்டக்கலை, பால்பொருட்கள் துறைகளுக்கான ஒதுக்கீட்டை குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்து அதன் மூலம் இணைந்த துறைகளுக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு பெரும் ஊக்கம் இந்த பட்ஜெட்டில் அளிக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க பயன்கள் கிட்டும். வறட்சி காரணமாக 2015-16ல் 2 சதவிகிதமாக இருந்த வேளாண் துறையில் 4.1 சதவிகித அளவுக்கு ஆரோக்கியமான வளர்ச்சி இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட் வேளாண்மையில் சந்தை சீர்திருத் தங்களுக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதுடன், பயிர் காப்பீட்டுக்கான நிதியை அதிகரித்து, வேளாண் கடனுக்கு உயர்வான இலக்கை நிர்ணயித்துள்ளது. கிராமப்புற முதன்மை வங்கியான தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியான நபார்டுக்கான பணியை மாற்றி, பாசனத்திற்கான அணுகுமுறையை மேம்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் துறையை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் அளிக்கப்பட்டுள்ளன.

வேளாண் வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில், 2017-18 பட்ஜெட்டில் கடன் துறைக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 2017-18 நிதியாண்டுக்கான ஒதுக்கீடு ஒரு லட்சம் கோடி ரூபாய் அதிகரிக்கப்பட்டு ரூ. 10 லட்சம் கோடியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையில் அளிக்கப்படும் கடனை தீவிரப்படுத்தும் என்பதால் இது வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் உறுதியுடன், மத்திய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் வேளாண் துறைக்கு பல்வேறு ஊக்கத்திட்டங்களை அறிவித்துள்ளது. பிரதம மந்திரி கிரிஷி சின்சய் திட்டம், பிரதம மந்திரி ஃபசல் பீமா திட்டம் மற்றும் மின்னணு மேடையில் வேளாண் பொருட்களுக்கான தேசிய சந்தை ஒன்றை உருவாக்கியது உள்ளிட்ட திட்டங்கள் இதில் அடங்கும். 2017-18க்கான மத்திய பட்ஜெட் நபார்டில் ரூ. 5000 கோடிக்கான அர்ப்பணிக்கப்பட்ட நுண் பாசன நிதியை அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். ஏனெனில் இந்தியாவில் உள்ள மொத்த 141 மில்லியன் ஹெக்டேர் விவசாய நிலப் பகுதியில் 54க்கும் கூடுதலான சதவிகித பகுதிகளில் பாசனத்திற்குத் தேவையான உள்கட்டமைப்புகள் இல்லை.

தேசிய வேளாண் சந்தையை விரிவுபடுத்தும் வகையில் வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்தும் குழுக்கள் தற்போதுள்ள 250 என்ற அளவில் இருந்து 585 ஆக அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மின்னணு சந்தையும் சுத்தப்படுத்துதல், தரப்படுத்துதல் மற்றும் பேக்கிங் செய்யும் வசதிகளை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் 75 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் பொருட்களின் மதிப்பை அதிகரித்துக்கொள்ள உதவும் என்பதால் அவர்களுக்குப் பயன் அளிப்பதாக இருக்கும் எனத் தெரிகிறது.

ஒப்பந்த விவசாயம் குறித்த மாதிரி சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அவை மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அது பின்பற்றப்பட்டு பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் வேளாண் பதப்படுத்துவோருடன் ஒருங்கிணைக்கப்பட்டு அதன் மூலம் சிறந்த விலை கிடைப்பதும் அறுவடை செய்யப்பட்ட பின்னர் ஏற்படும் இழப்புகள் குறைக்கப்படும் என்றும் பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது. ஏபிஎன்சிஎஸ்லிருந்து அழுகும் பொருட்கள் நீக்கப்பட்டு, விவசாயிகள் தரகர்களின் பிடிகளில் இருந்து விடுவிக்கப்பட்டு விவசாயிகள் தங்கள் தயாரிப்புக்களை தாங்களே

விற்பனை செய்வதை உறுதிப்படுத்துமாறு மாநில அரசுகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

2015 கரீஃப் பருவத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட பிரதம மந்திரி ஃப்சல் பீமா திட்டம் முதல் பருவத்திலேயே உற்சாகம் அளிக்கும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இந்தத் திட்டம் 366.64 லட்சம் விவசாயிகளை (மொத்த விவசாயிகளில் 26.50 சதவிகிதம்) இணைத் திருப்பதுடன் 2017 கரீஃப் மற்றும் ரபி பருவத்திற்குள் 30 சதவிகிதம் என்ற இலக்கை விஞ்சும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. முன்னோடி பயிர் காப்பீட்டுத் திட்டமான பிரதம மந்திரி ஃபசல் பீமா திட்டத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு முந்தைய ஆண்டில் இருந்த ரூ. 5500 கோடியிலிருந்து ரூ.9000 கோடியாக அதிகரிக் கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 2017-18ல் பயிர் செய்யப்பட்ட பகுதிகளில் 40 சதவிகிதத்தை காப்பீட்டுக்குள் கொண்டு வரவும் இதனை அடுத்த ஆண்டு (2018-19) 50 சதவிகிதமாக உயர்த்தவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2015ம் ஆண்டு தொடங்கப்பட்ட மண் ஆரோக்கிய அட்டைத் திட்டம் அனைத்து 648 கிரிஷி விஞ்ஞான் கேந்திராவிலும் மண் சோதனைக்கான சிறிய ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு மேலும் விரிவுபடுத்தப்படும். மேலும் அரசின் உதவியுடன் தகுதியான உள்ளூர் தொழில்முனைவோர் மூலம் 1000 சிறு ஆய்வகங்கள் அமைக்கப்படும்.

இந்திய வேளாண் மற்றும் உணவுத் துறை தற்போது மத்திய மற்றும் மாநில அரசுகளால் பல்வேறு நேரடி மற்றும் மறைமுக வரி விதிப்புக்கு உட்படுத்தப்படுவதால் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி இந்தத் துறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சிறந்த விலை கிடைக்கவும், அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் இழப்புக்களைக் குறைக்கவும் பழம் மற்றும் காய்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளை வேளாண் பதப்படுத்துவோருடன் ஒருங்கிணைக்க அரசு திட்டமிட்டு வருகிறது. அது ஏற்கனவே 10 மாநிலங்களில் 250 மண்டிகளை மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் முதல் கட்டத்தில் ஒருங்கிணைத்து அதன் மூலம் ரூ. 421 கோடி மதிப்பிலான பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மின்னணு தேசிய வேளாண் சந்தையில் பண்டங்களின் விலை தொடர்பான தகவல்களை அணுகவும், இந்த முயற்சிகளின் பயன்களை அதிக விவசாயிகள் பெற ஊக்குவிக்கவும் மொபைல் செயலி (ஆப்) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மின்னணு தேசிய வேளாண் சந்தையில் விற்பனை செய்யப்படுவதற்கான பழங்கள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட 69 வேளாண் மற்றும் தோட்டக்கலை பண்டகங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த மின்னணு மேடையுடன் இந்த மண்டிகள் ஒருங்கிணைக்கப்படுவது விவசாயிகளின் வருவாயைப் பெருக்க உதவும்.

பால் பொருட்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி எனப்படும் இந்தப் புதிய நிதிக்காக ரூ. 2000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி நபார்டு வங்கியின் கீழ் அமைக்கப்படும். பால் மற்றும் கால்நடை வளர்ப்பு விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதுடன், பால் பொருட்கள் மேம்பாட்டுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நிதி உருவாக்கப்படுவது, விவசாயிகளின் வாழ்வில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், நாட்டின் ஒட்டுமொத்த வேளாண் வருவாயில் பால் மற்றும் பதப்படுத்தப்பட்ட பாலின் பங்களிப்பை அதிகரிக்கும். பேக்கிங் செய்யப்பட்ட பால் மற்றும் இதர பால் பொருட்களின் தேவை அதிகரித்து வரும் நிலையில் பால் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் இதர பால் பொருட்கள் நிறுவனங்கள் குளிர் பதன வசதி சங்கிலியில் முதலீடுகளை அதிகரித்து அதன் மூலம் பால் மற்றும் பால் பொருட்களின் கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்துதலை அதிகரித்துள்ளன. பால் மற்றும் பால் பொருட்களின் அதிக்கரித்து வரும் தேவை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் குறுகிய மற்றும் நடுத்தர கால கட்டத்தில் இந்தத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைச் சந்தித்தும் வருகிறது.

•

## FORM IV

**Statement about ownership and other particulars about YOJANA Tamil (Thittam)**
***to be published in the first issue every year after the last day of February***

| | | |
|---|---|---|
| Place of Publication | : | Chennai |
| 1. Periodicity of Publication | : | Monthly |
| 2. Printer's Name | : | Dr. Sadhana Rout |
| Nationality | : | Indian |
| Address | : | Publications Division,<br>Soochna Bhavan,<br>New Delhi - 110 003. |
| 3. Publisher's Name | : | Dr. Sadhana Rout |
| Nationality | : | Indian |
| Address | : | Publications Division,<br>Soochna Bhavan,<br>New Delhi - 110 003. |
| 4. Editor's Name | : | A Elangovan |
| Nationality | : | Indian |
| Address | : | Publications Division,<br>Thittam, Shastri Bhawan,<br>Chennai-600006 |
| 5. Name & Address of Individual who own the newspaper and Partner or shareholder holding more than one Percent of the total capital. | : | Wholly owned by Ministry of Information & Broadcasting, Government of India, New Delhi - 110 001. |

I, **Sadhana Rout** , hereby declare that the particular given above are true to the best of my Knowledge and belief.

(Dr.Sadhana Rout )
Signature of Publisher

Dated:

# புதிய வளர்ச்சி மாதிரி விவசாயத்துறை, கிராமப்புற இந்தியா பெரும் புகழ் நோக்கிப் பயணம்

- நிரேந்திர தேவ்

'த ஸ்டேட்ஸ் மன்' பத்திரிகையின் மூத்த நிருபர்.

தற்போதைய மத்திய விவசாய அமைச்சகம், விவசாயிகளின் நலன், கிராமப்பகுதிகளின் மேம்பாடு மற்றும் புதிய வேலை வாய்ப்பு உருவாக்குதல் ஆகியவற்றிற்கு எப்போதுமே அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. இந்தத் துறைகளில் மேலும் மேம்பாடு அடைய இந்த ஆண்டின் பட்ஜெட் உந்துதல் அளித்துள்ளது.

மிகுந்த வாய்ப்புகள் இருந்தும் இந்தியாவில் விவசாயமும், கிராமப்புற வளர்ச்சியும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்பது பலருடைய கருத்து. ஆனால், 2017-18 பட்ஜெட் இதனை முற்றிலும் மாற்றியமைக்கக்கூடிய ஒன்றாக அமைந்துள்ளது. உயர் அளவான ஒதுக்கீடும், சரியான திட்டங்களை தேர்ந்தெடுத்திருப்பதாலும் இனி செல்ல வேண்டிய பாதை தெளிவாக்கப்பட்டிருப்பதாலும் விவசாயத்திற்கும், கிராமப்புற வளர்ச்சிக்கும் உள்ள இடர்பாடுகளை களைந்தெறிய நல்ல வாய்ப்பாகும். இந்த ஆண்டு பட்ஜெட்டின் மிகப் பெரிய வலிமை எல்லா அம்சங்களிலும் சரியான நிலைமையைக் கையாண்டிருப்பது. கிராமப்புற வளர்ச்சிக்கும் விவசாயிகள் மேம்பாட்டிற்கும் கவனம் செலுத்தப்பட்டிருப்பதால் நகர்ப்புற நுகர்வோருக்கு நல்ல பயன் கிடைக்கும். சென்ற ஆண்டைவிட 24 சதவிகிதம் அதிக மதிப்பீடான ரூ.1,87,223 கோடி ரூபாய் கிராமப்புற விவசாயம் மற்றும் அவைகளை சார்ந்த துறைகளுக்கு 2017-18 பட்ஜெட் ஒதுக்கப்பட்டுள்ளது.

"எல்லோரோடும் எல்லோருக்கும் வளர்ச்சி" என்ற முழக்கத்தின் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டங்களின் மூலம் இந்தியாவின் வளர்ச்சி என்ற இலக்கை அடைய கிராமப்புற உள் கட்டமைப்பு வசதி, விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் மேம்பாடு மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

கடந்த பல ஆண்டுகளாக விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. இதற்கு, வெகுவாக பிளவுபட்ட சந்தைகளே காரணம் என்று கூறப்படுகிறது. தற்போது அரசு, தற்போதைய விலை மற்றும் குறியீட்டு சந்தை வியாபாரம் என்பனவற்றை பரவலாக அறிமுகப்படுத்தியிருப்பதால் விவசாயிகளுக்கு நல்ல சந்தை விலை கிடைக்க வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

### விவசாய பொருட்களுக்கு நல்ல விலை

விவசாயிகள் தங்களுடைய உற்பத்திக்கு நல்ல விலை பெற ஒப்பந்த விவசாயத்திற்கான ஒரு சட்ட முன்மாதிரியை நிதியமைச்சர் மாநிலங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். மின்னணு தேசிய சந்தை மேடையில் இன்னும் அதிகமான முறைப்படுத்தப்பட்ட விவசாய சந்தைகளை கொண்டு வருவது அரசின் முக்கிய நோக்கம் என்று பலமுறை தெளிவாக்கப் பட்டுள்ளது. இந்த மின்னணு தேசிய விவசாய சந்தை தற்போதுள்ள 850 சந்தைகளிலிருந்து 585 விவசாய உற்பத்தி சந்தை குழுக்களாக உயரும் என்று நிதியமைச்சர் தன்னுடைய பட்ஜெட் உரையில் குறிப்பிட்டுள்ளார். இந்த திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மின்னணு தேசிய விவசாய பொருட்கள் சந்தைக்கும் அந்த பொருளை சுத்தப்படுத்தி, தரப்படுத்தி விற்பனை தயார் நிலைக்கான பெட்டிகளாக தயார் செய்வதற்கு அதிக பட்சமாக ரூ.75 லட்சம் வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

2016ல் துவக்கப்பட்ட மின்னணு தேசிய விவசாய பொருட்கள் சந்தை எனப்படும் வலைதள வியாபாரத் தளம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளது.

மின்னணு தேசிய விவசாயப் பொருட்கள் சந்தை என்பது விவசாயிகள் அடிக்கடி எதிர்கொள்ளும் பெரிய அளவிலான விலை மாற்றங்களுக்கு மருந்தாக அமையும். விவசாயிகளுக்கு தற்போதுள்ள மிகப்பெரிய சவால் இடைத்தரகர்கள்தான் என்று விவசாய அமைச்சகத்தில் உள்ள அலுவலர்கள் நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த இடைத்தரகர்களை ஒழித்து விவசாயப் பொருட்களின் விலையை நிர்ணயித்து வெளிப்படைத்தன்மையை கொண்டு வருவதே அரசின் முயற்சியாகும். ஒவ்வொரு பொருளுக்கும் நாடெங்கும் ஒரு விலைக் குறியீடு இருக்க வேண்டும் என்பதில் அரசு தீவிரமாக உள்ளது. இதனை நிறைவேற்ற மின்னணு தேசிய விவசாய பொருட்கள் சந்தை தளம் உதவும்.

இந்த மின்னணு தேசிய விவசாய பொருட்கள் சந்தை என்பது, ஒரு வலைதள வசதிதான் என்றும் அது ஒரு மாற்று சந்தை அமைப்பு அல்ல என்றும் கடந்த ஆண்டே மத்திய விவசாயத்துறை அமைச்சகம் தெளிவு படுத்தியுள்ளது. "இது அனைத்து விவசாய சங்கங்களையும் தேசிய அளவில் இணைத்து வலைதளம் மூலம் அவைகளை அணுகச் செய்வதே

எமது நோக்கம்'' என்று ஒரு மூத்த அதிகாரி கூறினார்.

மின்னணு தேசிய விவசாய பொருட்கள் சந்தையின் மூலம் இந்தியாவில் ஒரு கோடியில் உள்ள நுகர்வோர் நாடெங்கிலும் உள்ள இப்படிப்பட்ட சந்தைகளை வலைதள வியாபார தளம் மூலம் அணுகி வியாபாரம் செய்ய முடியும்.

இந்தத் திட்டத்தின்படி உத்திரபிரதேசம் (6) குஜராத் (3) தெலுங்கானா (5) ராஜஸ்தான் (1) மத்தியபிரதேசம் (1) ஹரியானா (2) ஜார்கண்ட் (1) ஹிமாச்சல பிரதேசம் (2) ஆகிய 8 மாநிலங்களிலுள்ள 21 சந்தைகள் இணைக்கப்படுகின்றன.

ஆனாலும், சில நிலைமைகளை நாம் இன்னும் கவனிக்க வேண்டியுள்ளது. வெளிப்படையான தன்மையை ஏற்படுத்த அரசு, கொள்முதல் ஏஜெண்ட்டுகளை நீக்க விரும்புவதை விவசாயிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சந்தைகள் சார்ந்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். மேலும் மாநிலங்கள் எந்தெந்த பொருட்கள் அழுகக்கூடியவை என்று நிர்ணயித்து அவைகளை விவசாய பொருட்கள் சந்தை குழுவிலிருந்து விலக்க வேண்டும் என்று பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் சிறந்த வழிகாட்டுதலையும் இனிவரும் பாதையையும் விளக்கிக் காட்டியுள்ளார். இதனால், விவசாயிகள் தாங்களே தங்களுடைய பொருட்களை விற்று நல்ல விலையைப் பெற முடியும் என்று கூறினார். பழங்கள் மற்றும் காய்கறிகளை பயிர் செய்யும் விவசாயிகள் விவசாய பொருட்கள் பதனிடும் தொழில்களுடன் இணைக்கப்பட்டு அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் அறுவடைக்குப்பின் பொருட்கள் நாசமாவதையும் தடுக்கும் வகையில் பட்ஜெட் திட்டங்கள் அமைந்துள்ளன.

விவசாயிகள் பயன்பெறும் வகையில் நபார்டு மூலம் ஒவ்வொரு துளியும் ஒரு செடி என்ற இலக்கை அடைய குறு நீர் பாசன நிதியம் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதற்காக ரூ.5,000 கோடி நிதியம் உருவாக்கப் பட்டுள்ளது. இதுபோலவே, பால் பொருட்கள் தயாரிக்க உள் கட்டமைப்பு வசதி நிதியம் ரூ.1000 கோடி செலவில் நபார்டு அமைக்கும். இதுவரை குஜராத், மஹாராஷ்டிரா, கர்நாடாகா மாநிலங்கள் மட்டும் பால் வளத்துறையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன.

விவசாயிகள் தங்களுடைய கடன்களை உரிய காலத்தில் செலுத்தினால், அவர்களுக்கு மூன்று சதவிகித கழிவு கிடைக்கும் என்ற கூடுதல் ஊக்கமும் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் விவசாயத்துறையில் 4.1 சதவிகித வளர்ச்சி ஏற்படும் என்று நிதியமைச்சர் கூறியுள்ளார். இது சாத்தியம் என்று வெளிப்படுத்தும் வண்ணம் கோடை மற்றும் குளிர்கால பயிர்களில் நடவு அதிக அளவில் உள்ளது.

விவசாயிகள் துன்பப்படும் போது அவர்களுக்கு உதவ அரசு தீவிரமாக உள்ளது என்பதை மெய்பிக்கும் வண்ணம் 2017-18 பட்ஜெட்டில் கடந்த ஆண்டு துவக்கப்பட்ட பிரதம மந்திரி பயிர்காப்பு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீட்டிற்கு சென்ற ஆண்டு பட்ஜெட் ஒதுக்கீடான ரூ.5500 கோடி, இந்த ஆண்டு, ரூ.13,240 கோடியாக திருத்தப்பட்டுள்ளது.

2017-18ல் ரூ.9000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்படி பயிர்பாதுகாப்பு திட்டம், பயிரிடப்பட்ட இடங்களில் 2016-17ல் 30 சதவிகிதமாக இருந்தது. 2017-18ல் 40 சதவிகிதமாகவும், 2018-19ல் அது 50 சதவிகிதமாகவும் உயரும் என்று நிதியமைச்சர் கூறினார். இந்த பயிர்பாதுகாப்பு திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ள அரசின் முடிவுக்கு, அரசு கொள்கைகளை எதிர்ப்பவர்கள்கூட, நாடாளுமன்றத்திலும், வெளியிலும் பாராட்டியுள்ளனர்.

இந்த பட்ஜெட்டில் பிரதம மந்திரி விவசாய பாசன திட்டத்திற்கும் ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசின் முன்னோடி திட்டமான மண் வள அட்டைகள் பற்றி குறிப்பிட்ட நிதியமைச்சர், விவசாய மண் வளத்தை துரிதமாக ஆய்வு செய்து, மண் வள சத்துக்களை தெரிந்து கொண்டால்தான் விவசாயிகள் உண்மையில் பயன்பெறுவார்கள் என்று கூறினார்.

நாட்டில் உள்ள 648 விவசாய அறிவியல் மையங்களிலும், சிறு ஆய்வு கூடங்களை அரசு அமைக்கும். இது அல்லாமல், தனியார் தொழில் முனைவோர் 1000 சிறு ஆய்வுக்கூடங்களை அமைப்பர் என்று அவர் கூறனார். இது அல்லாமல் நபார்டு மூலம் நீண்டகால நீர்ப்பாசன நிதியம் ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ளது என்று கூறினார். கிராமப்புறங்களிலும், விவாசாய பகுதிகளிலும், உள் கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு மூலமாக, மழை நீர் சேகரிப்புக் குளங்கள் அமைக்கப்பட்டு அதனால், குறைந்த அளவு மழை உள்ள இடங்களில் நீர்ப்பாசன வசதி அமைக்கப்படும் என்று விவசாயத் துறை அமைச்சக அலுவலர்கள் கூறியுள்ளனர்.

பல மாநிலங்களில், நகர்ப்புறங்களிலும், கிராமப்பகுதிகளிலும், மழை நீரை சேமித்து, நீர்ப்பாசனத்துக்கு உதவ, திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டிருந்தாலும் பிரதம மந்திரி விவசாய நீர்வள திட்டம் 2014ல் துவக்கப்பட்டு மற்றொரு முன்னோடி திட்டமாக செயல்படுகிறது.

2016-17க்கான பட்ஜெட்டில், விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத துறைகளில் அரசு, திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் 2022ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க முனைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**கிராமப்புறங்களில் அதிக முதலீடு**

அரசின் திட்டங்களின் வெற்றி அவை செயல்படுவதில்தான் உள்ளது. ஆகவே, கிராமப்புற

வளர்ச்சியை மேற்கொள்ள அப்பகுதிகளில் முதலீடுகள் உயர வேண்டும். 2014க்குப்பின் நான்காவது முறையாக பட்ஜெட் வெளியிடும் நிதியமைச்சர் கிராமப்புறங்களில் அதிகமாக முதலிடப்படும் என்று கூறியுள்ளார். அங்கு உள் கட்டமைப்பு வசதிகள், சாலைகள், மின்சார வசதிகள் ஆகியவைகள் மேம்படுத்தப்பட்டு ஏழ்மையும் குறைக்கப்படும் என்று கூறினார். இதோடு, பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு முதலீடுகளை உயர்த்தி வளர்ச்சியை துரிதப்படுத்துவேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

கிராமப்புறங்களில் ஒவ்வொரு ஆண்டும், ரூ.3,00,000 கோடி செலவிடப்படுகிறது. இந்த செலவுகள் தேவையான விளைவுகளை ஏற்படுத்துகிறதா என்பதை கண்காணிக்கும் வண்ணம் ஒரு கோடி மக்களை ஏழ்மையிலிருந்து வெளிக்கொணரும் அந்த்யோத்யா முனைப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி 2019க்குள் 50,000 கிராம பஞ்சாயத்துக்கள் ஏழ்மையிலிருந்து விடுபடும். அந்த ஆண்டு மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் ஆண்டு நிறைவு ஆகும். அவருடைய பார்வையில், கிராமப்புற மேம்பாடு, முக்கியமாக கருதப்பட்டது.

ஆண்டுதோறும் உயர்த்தப்படும் தொகையும், தற்போதுள்ள வளங்களும் சிறப்பாக பயன்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த முனைப்பு இயக்கத்தின்படி பின்தங்கியுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் தொடர்ந்து வாழ்வளிக்கும் வகையில் அடிமட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஏழ்மை இல்லாத கிராம பஞ்சாயத்துக்களை நிர்ணயிக்கும் குறியீடுகள் வகுக்கப்பட்டு அதன்படி அவைகள் கண்காணிக்கப்படும் என்றும் நிதியமைச்சர் கூறியுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்திரவாத திட்டத்தை செழுமைபடுத்தி அதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் வேலை வாய்ப்பு திட்டம் பற்றியும் நிதியமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் 100 நாட்களாவது வேலை கொடுக்கும் திட்டத்தின் மூலம் பயன்படும் படியான சொத்துக்களை உருவாக்கி, விவசாய உற்பத்தி திறனையும், வருமானத்தையும் மேம்படுத்துவோம் என்று கூறியுள்ளார்.

இதன்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், 5,00,000 விவசாய குட்டைகளும், 10,00,000 உரக்குழிகளும் அமைக்கப்படும் என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது முழுமையாக நிறைவு பெறும். உண்மையில் 5,00,000 கிராம குட்டைகளுக்கு பதிலாக மார்ச் 2017க்குள் 10,00,000 விவசாயக் குட்டைகள் உருவாக்கப்படும் என்று அரசு கருதுகிறது. 2017-18ஆம் ஆண்டிலும் 5,00,000 விவசாயக் குட்டைகள் உருவாக்கப்படும். இதனால், கிராமப் பஞ்சாயத்துகளில் வறட்சி வராத நிலை உருவாகும். இது அல்லாமல், கடந்த காலங்களில் இந்த வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் பெண்களின் பங்கு 48 சதவிகிதமாக இருந்தது. தற்போது 55 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

2016-17ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்திற்கு, பட்ஜெட் ஒதுக்கீடாக இருந்த ரூ.38,500 கோடி 2017-18ல் ரூ.48,000 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவே இந்த திட்டத்திற்கு இதுவரை அளிக்கப்பட்ட மிக உயர்ந்த ஒதுக்கீடாகும் என்று அவர் கூறினார்.

மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைப்பாடு உறுதி திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை வலைதளத்தில் பதிவு செய்து, அதை பொது மக்களின் பார்வைக்கு வைப்பதன் மூலம், மிகுந்த வெளிப்படைத் தன்மை ஏற்படுத்தப்படும்.

கிராமப்புற மக்களோடும், விவசாயிகளோடும் நெருங்கி செயல்பட்டு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் சுற்றுசூழலையும் அரசு மேம்படுத்தும் என்று நிதியமைச்சர் கூறியுள்ளார். இதில் அரசு எந்த வகையிலும் பின் தங்காது என்று மிகத் தெளிவாக கூறியுள்ளார்.

பழைய, புதிய திட்டங்களை சுட்டிக்காட்டிய நிதியமைச்சர் கிராமப்புற பகுதிகளில் மக்களுக்கு புதிய திறன்களை அளிப்பதன் ஒரு அங்கமாக 2022க்குள் 5,00,000 பேருக்கு கட்டுமான பயிற்சி அளிக்கப்படும் என்றும் 2017-18ல் 20,000 பேர் பயன் பெறுவார்கள் என்றும் கூறினார்.

வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்ள பஞ் சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு மனித வள பற்றாக்குறை உள்ளது. இதனை போக்க, நிருபணமாகும் வகையில் மனிதவள சீர்திருத்தங்கள் 2017-18ல் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார். கிராமப்புற மற்றும் விவசாய சமூகத்தினரை மேம்படுத்த நினைக்கும்போது நாம் அரசின் முழக்கமான “அனைவரோடும் அனைவருக்கும் மேம்பாடு” என்பதை நினைவு கொள்ள வேண்டும். இதனை வெளிப்படுத்தும் வகையில் 2017-18ன் பட்ஜெட் அணுகு முறையில் முதலாவதாக, பெண் குழந்தை மற்றும் மகளிர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள 14,00,000 ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தும் அங்கன்வாடி மையங்களில் மகளிர் சக்தி மையங்கள் கிராம அளவில் அமைக்க ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், திறன் மேம்பாடு, வேலை வாய்ப்பு, மின்னணு கல்வி சுகாதாரம் மற்றும் சத்துணவு சார்ந்த துறைகளில் மகளிருக்கு அதிகாரம் அளிக்கும்

அனைத்து வகை சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும்.

டிசம்பர் 31, 2016 அன்று நாடு முழுவதிலும் உள்ள கர்ப்பமுற்ற மகளிருக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை பிரதம மந்திரி ஏற்கனவே அறிவித்துள்ளார். இந்த திட்டத்தின் கீழ் மருத்துவமனைகளில் குழந்தை பெற்று குழந்தைக்கு தடுப்பூசிகளும் போட்டுக்கொள்ளும் கருவுற்ற மகளிருக்கு அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு நேரடியாக ரூ.6000 செலுத்தப்படும். இந்த திட்டமும் கிராமப்புற மக்களுக்கும் பயன்படும்.

இவைகளோடுகூட, இந்த பட்ஜெட்டில் பிரதம மந்திரி கிராமப்புற சாலை திட்டத்தின்கீழ் ரூ.19,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடும்படியாக உள்ளது. இதனால், நாட்டிலுள்ள அனைத்து கிராமப்புற பகுதிகளும் சாலைகளால் இணைக்கப்படும். மாநில அரசுகளின் செலவினங்களோடு, இந்த திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.27,000 கோடி செலவிடப்படும். 2016-17ல் இந்த திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நாளும் 133 கி.மீ. தூரத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டன. 2011-14 காலகட்டத்தில் இது, 73 கி.மீட்டராகவே இருந்தது என்று நிதியமைச்சர் கூறினார். இது அல்லாமல் 2017-18ல் நாட்டில் ஏழை மக்களுக்கு புதிதாக ஒரு கோடி வீடுகள் கட்டும் பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்திற்கு ஒதுக்கீடு 44 சதவிகிதம் உயர்த்தப்பட்டு ரூ.21 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இது போலவே, தீனதயாள் உபாத்யாய கிராம ஒளி திட்டம் என்ற கிராமப்புற மின் இணைப்பு, திட்டத்திற்கு சென்ற ஆண்டைவிட 43 சதவிகிதம் கூடுதலாக ரூ.4816 கோடி, 2017-18 பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

முடிவாக, இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு, கிராமப்புற உள் கட்டமைப்பு மேம்பாடும், விவசாயிகளின் மேம்பாடும் மிகவும் அவசியம் என்பதை சொல்லத் தேவையில்லை. ஆகவே, கிராமப்புற அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளும் குறிப்பாக விவசாயம் சார்ந்த திட்டங்கள் முழுமையாகவும், நேரடியாகவும் அணுகப்பட வேண்டும். இதன்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 2 ஆண்டுகளில் மக்களுக்கு தேவையான திட்டங்கள் தீட்டப்பட்டு கிராமப்புறங்களிலும், சிறிய ஊர்களிலும் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் விவசாயிக்கும், அதை சார்ந்த துறைகளுக்கும் மேம்பாடு அளிக்கப்பட்டு கிராமப்புறங்களுக்கு மகிழ்ச்சியூட்டப் பட்டுள்ளது.

### பெட்டி 1
### கிராமப்புற மின் இணைப்பு

2017-18ல் கிராமப்புற மின் இணைப்புக்கு, மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ராஜீவ்காந்தி கிராமப்புற மின் இணைப்பு திட்டம் செயல்பட்ட பின்பும் பல கிராமங்களில் மின் இணைப்பு இல்லை. இது சம்மந்தமாக, பிப்ரவரி 9, 2017ல் மக்களவையில் கேள்வி நேரத்தில் பதில் அளித்த மின்சாரத்துறை அமைச்சர் கிராமப்புறங்களில் 100 சதவிகித மின்இணைப்பு ஏற்படுத்த 29 மாநிலங்களில் 28 மத்திய அரசுடன் இணைந்து செயல்பட ஒப்புக்கொள்வதாக கூறினார். தற்போதைய அரசு, கிராமப்புற மின் இணைப்புக்கு மிகப்பெரிய அளவில் முக்கியத்துவம் அளித்துவருகிறது. டெல்லியில் செயல்படுத்தியுள்ளதுபடி கழிவு நீரையும், சாக்கடை நீரையும் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் முறையை மேற்கொள்ள வேண்டும் என்று 2014-15ல் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஒரு திட்டத்தை முன் வைத்தது.

சூரியசக்தியை பயன்படுத்தி, இந்தியாவில் மின் இணைப்புகளை பரவலாக அமைக்க அரசு முயற்சி செய்யும்.

### பெட்டி 2
### பட்ஜெட் அறிவிப்பில் முக்கிய அம்சங்கள்

- விசாயிகளுக்கான கடன் சாதனை அளவாக, ரூ.10 லட்சம் கோடி
- மண்வள கார்டுகள் விஸ்தரிப்பு ; விவசாய அறிவியல் மையங்களில் சிறு ஆய்வுக்கூடங்கள் அமைப்பு.
- நபார்டு மூலம் நீண்ட கால நீர்ப்பாசன நிதியம் ரூ.40,000 கோடி நிதியம்.
- ஒப்பந்த விவசாயத்திற்கான சட்ட முன்வடிவு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்தியோதயா திட்டம் மூலம் 1 கோடி குடும்பங்களில் ஏழ்மை நீக்கம்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்திற்கு சாதனை அளவான ரூ.48,000 கோடி ஒதுக்கீடு.
- பிரதம மந்திரி கிராம மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.19,000 கோடி ஒதுக்கீடு ; மாநிலங்களோடு சேர்த்து ரூ.27,000 கோடி செலவிடப்படும்.
- பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்திற்கு ரூ.23,000 கோடி ஒதுக்கீடு.
- மே 2018க்குள் அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி.

•

# 2017-18 பட்ஜெட்டின் சிறப்பம்சங்கள்

- D.S. மாலிக்

கூடுதல் தலைமை இயக்குநர், மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம்

I. இந்த நிதி ஆண்டிற்கான பட்ஜெட் கடந்த 2 ஆண்டுகளாக கட்டி எழுப்பப்பட்ட திடமான நிதி, ஆரோக்கியமான பெரும் பொருளாதார அடிப்படைகள் ஆகியவற்றின் மீது நங்கூரமிடப்பட்டுள்ளது. பணமதிப்பிழப்பு, சரக்கு மற்றும் சேவைவரி, ஜன் தன் யோஜ்னா, ஆதார் அட்டை, கைபேசி இவை இணைந்த பணப்பரிமாற்ற முறை ஆகியவை மிகவும் ஆக்கப்பூர்வமான மனப்பாங்கை உருவாக்கி உள்ளன. கடந்த ஆண்டு நடைபெற்ற பிற சீர்திருத்தங்கள் பொருளாதாரத்திற்கு உத்வேகத்தைத் தந்துள்ளன.

அ) வளர்ச்சி பற்றிய பார்வை ஆக்கப் பூர்வமானதாகவே நீடிக்கிறது.

ஆ) 3.2% ஆக இருக்கும் நிதிப் பற்றாக்குறையை 2018-19இல் 3% ஆக குறைப்பதற்கு உறுதி ஏற்கப்பட்டுள்ளது.

இ) நடப்பு ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது. இது அடுத்த ஆண்டில் மேலும் 1.9% அளவுக்கு குறைக்கப்படும்.

ஈ) திரும்பவும் கடன் வாங்குவதையும் சேர்த்து ஒட்டுமொத்த சந்தைக் கடன் வாங்கல் சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மிகவும் குறைவாக 3.48 லட்சம் கோடி என்ற அளவில் இருக்கும்.

உ) கடனை நிலையான அளவில் வைத்திருப்பது என்ற சிந்தனையின் படி நிதி கொள்கையை உருவாக்க உறுதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## II. விவசாயிகள்

அ) நீண்ட காலப் பாசன நிதித்தொகுப்பு 40ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.

ஆ) நுண் நீர்ப்பாசன நிதி ரூ.500 கோடி நிதியுடன் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினால் உருவாக்கப்படும்.

இ) தேசிய மின்னணு வேளாண்மைச் சந்தை, 585 வேளாண் விலை பொருள் விற்பனை மையங்களுக்கு விரிவாக்கப்படும்.

ஈ) விரைவில் அழுகக்கூடிய பொருள்களை சுட்டிக் காட்டுமாறு வேளாண் விலை பொருள் விற்பனை மையங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

உ) ஒப்பந்த வேளாண்மை பற்றிய மாதிரிச் சட்டம் மாநிலங்கள் மேற்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்படும்.

ஊ) 2017-18 இல் பயிர்க்கடன் இலக்கு ரூ.10லட்சம் கோடியாக நிர்ணயம்.

எ) செயல்பட்டுவரும் 63 ஆயிரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட்டு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்படும்.

ஏ) பயிர்க் காபீட்டுத்திட்டத்தின் தழுவல் அளவு 2017-18 இல் 40% ஆக உள்ளது. இது 2018-19இல் 50% அளவை எட்டும்.

ஐ) பால் பொருள்கள் பதனக் கட்டமைப்பு மூன்று ஆண்டுகளில் ரூ.8000 கோடி வளர்ச்சி நிதியுடன் அமைக்கப்படும்.

## III. ஊரக மக்கள்

அ) அந்த்யோதயா திட்டம் வறிய நிலையில் உள்ள ஒரு கோடி குடும்பங்களுக்கு உதவும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்படும். இதனால், 2019 இல் 50ஆயிரம் கிராமப்பஞ்சாயத்துக்கள் வறுமை நிலை இல்லாதவைகளாக இருக்கும்.

ஆ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புக் காப்புறுதித்திட்டத்திற்கு இதுவரை இல்லாத அளவுக்கு 2017-18 இல் ரூ.48ஆயிரம் கோடி ஒதுக்கீடு. வேலைவாய்ப்பு உருவாக்கம், சொத்துக்கள் உருவாக்கம் என்பவை இலக்காக இருக்கும்.

இ) பிரதம மந்திரி ஊரகச் சாலைகள் திட்டம் மாநிலங்களின் பங்களிப்பையும் சேர்த்து ரூ.27 ஆயிரம் கோடி 2017-18 இல் செலவிடப்படும். 2011-14 காலகட்டத்தில் ஒரு நாளைக்கு 73 கி.மீ சாலை போடுவது என்று இருந்த நிலை 2017-18 இல் ஒரு நாளைக்கு 133 கி.மீ சாலை என்ற அளவுக்கு உயர்த்தப்படும்.

ஈ) ஆர்சனிக், புளூரைடு பாதிப்புகள் இருக்கக்கூடிய 28 ஆயிரம் வசிப்பிடங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் அடுத்த 4 ஆண்டுகளில் வழங்கப்படும்.

## IV. இளைஞர்கள், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை

அ) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

ஆ) ஸ்வயம் மேடையில் குறைந்தது 350 இணையவழி படிப்புகளுடன் புது முயற்சி தொடங்கப்படும்.

இ) திறன் வளர்ச்சித்திட்டமான சங்கல்ப் திட்டத்தில் ரூ.4000 கோடி செலவில் இளைஞர்களுக்குப் பயிற்சி தரும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

ஈ) ஜவுளித்துறைக்கு இருப்பது போன்ற ஒரு திட்டம் தோல், காலணி தொழில்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும்.

உ) ஐந்து சிறப்புச் சுற்றுலா மண்டலங்கள் ஏற்படுத்தப்படும்.

## V. ஏழைகளும் விளிம்புநிலை மக்களும்

திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, உடல்நலம், ஊட்டச்சத்து வாய்ப்புகளை உருவாக்கி பெண்கள் அதிகாரம் பெறுவதற்கு உதவும் வகையில் கிராம அளவில் 14லட்சம் அங்கன்வாடி மையங்களில் மகிளா சக்திக் கேந்திரங்கள் அமைக்கப்படும்.

அ) மலிவு விலை வீடுகளுக்கு உள்கட்டமைப்புத் தகுதி வழங்கப்படும். இதன் காரணமாக மலிவு விலை வீடுகள் கட்டும் திட்டங்களுக்கு தளர்த்தப்பட்ட விதிமுறைகளின்படி வங்கிக்கடன் வழங்கப்படும்.

ஆ) தனி நபர் வீட்டுக் கடன்களுக்கு 2017-18 இல் ரூ.20ஆயிரம் கோடி அளவுக்கு தேசிய வீட்டு வசதி வங்கி மூலம் மறுகடன்கள் வழங்கப்படும்.

இ) காலரா, அசார், யானைக்கால், தொழுநோய், மீசல்ஸ், காசநோய் ஆகியவற்றை ஒழிப்பதற்கு குறிப்பிட்ட காலகெடுக்கள் நிர்ணயிக்கப்படும்.

ஈ) குழந்தைகள் இறப்பு விகிதமும், தட்டம்மை நோயும் குறைக்கப்படும்.

உ) 1.5 லட்சம் துணை சுகாதார மையங்கள் சுகாதாரம் மற்றும் நல மையங்களாக மாற்றியமைக்கப்படும்.

ஊ) மருத்துவக் கல்விக்கும் மருத்துவப் பயிற்சிக்குமான ஒழுங்குமுறைகள் மாற்றி அமைக்கப்படும்.

எ) இரண்டு புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகள் ஜார்கண்டிலும், குஜராத்திலும் அமைக்கப்படும்.

ஏ) தற்போதுள்ள தொழிலாளர் சட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு நான்கு சட்டத்தொகுப்புகளாக ஆக்கப்படும்.

## VI. உள்கட்டமைப்பு

அ) ரயில்வே முதலீட்டு மற்றும் வளர்ச்சி செலவினங்கள் ரூ.131000 கோடியாக இருக்கும். இதில் 55ஆயிரம்கோடியை அரசு வழங்கும்.

ஆ) அடுத்த 3 ஆண்டுகளில் ரயில்வேக்குத் தேவையான தளவாடங்கள் 10% அளவுக்கு அதிகரித்து வழங்கப்படும்.

இ) ரயில்வேயும் 9 மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்தக்கூடிய 70 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஈ) ஒரு முனையில் இருந்து மறுமுனை வரையான ஒன்றிணைந்த போக்குவரத்துத் தீர்வுகளையும், பொருத்தமான பிற வசதிகளையும் ரயில்வே வழங்கும்.

உ) கணக்கு வைப்பதில் சீர்திருத்தங்கள் ரயில்வே தொகை ஏற்ற அடிப்படையிலான நிதி விவர அறிவிப்புப்பட்டியல்களை மார்ச் 2019 வாக்கில் தனதாக ஏற்றுக்கொள்ளும்.

ஊ) புதிய மெட்ரோ ரயில் கொள்கை அறிவிக்கப்படும். புதிய மெட்ரோ ரயில் சட்டம் மார்ச் 2019 வாக்கில் இயற்றப்படும்.

எ) சாலைத்துறையில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

ஏ) இரண்டாம் அடுக்கு நகரங்களில் உள்ள விமானநிலையங்கள் பயன்படுத்துவதற்கும், பராமரிப்பதற்குமாக அரசு, தனியார் பங்களிப்பு முறையின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

ஐ) இந்திய விமானப்போக்குவரத்து ஆணையுரிமை அமைப்புச்சட்டம் அதன் சொத்துக்களைத் திறம்படக் கையாண்டு பணமதிப்புள்ளதாக்குவதற்கு ஏற்ற வகையில் திருத்தி அமைக்கப்படும்.

ஒ) பாரத் நெட் திட்டம்: 1.5லட்சம் கிராமப் பஞ் சாயத்துக்களில் கண்ணாடி இழை அகன்ற அலைக்கற்றை இணைப்பு 2017-18 இறுதிக்குள் ஏற்படுத்தப்படும்.

ஓ) ஒரிசாவிலும் ராஜஸ்தானிலும் இரண்டு கச்சா எண்ணெய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

ஔ) 20ஆயிரம் மெகாவாட் கூடுதல் மின் உற்பத்திக்கென இரண்டாவது கட்டமாக சூரிய ஆற்றல் பூங்கா உருவாக்கப்படும்.

க) மின்னணு சாதனங்கள் உற்பத்திக்கான உலக மையமாக இந்தியாவை உருவாக்குவதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்படும்.

## VII. நிதித்துறை

அ) அந்நிய மூலதன வளர்ச்சி மன்றம் 2017-18இல் கைவிடப்படும்.

ஆ) குறிப்பிட்ட இடங்களில் உள்ள சந்தைகள், வழித்தோன்றலாக உருவாகி இருக்கும் சந்தைகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்க செயல்பாட்டு ரீதியிலான சட்டக் கட்டமைப்பை வளர்த்தெடுப்பதற்காக ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும்.

இ) ஒழுங்காற்று செய்வதில் உள்ள இடைவெளிகளை நிரப்பவும், ஏழைகளையும், ஏமாறும் நிலையில் உள்ள மக்களையும் பாதுகாக்கவும் பன்மாநிலக் கூட்டுறவுச்சங்கச் சட்டம் திருத்தப்படும்.

ஈ) நிதி நிறுவங்களின் உறுதிப்பாட்டிற்கான சட்ட மசோதா நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே கொண்டுவரப்படும்.

உ) அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய கட்டுமான ஒப்பந்தங்களில் ஏற்படும் சர்ச்சைகளைத் தீர்த்து வைக்க மத்தியஸ்தம் மற்றும் சமரச சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்.

ஊ) நிதித்துறைக்கு கணினிமயமாக்கப்பட்ட ஒரு மறுமொழிக்குழு (CERT-Fin)

எ) மத்திய பொதுத்துறை நிறுவனங்களைக் காலக்கிரமத்திற்குள் பட்டியலிடுவதற்கு திருத்தியமைக்கப்பட்ட ஒரு செயலமைவுத் திட்டம்.

ஏ) ரயில்வே பொதுத்துறை நிறுவனங்களான IRCTC,IRFC, IRCON போன்றவை பங்குச்சந்தையில் பட்டியலிடப்படும்.

ஐ) தற்போதுள்ள பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தலையாய ஒரு பொதுத்துறை எண்ணெய் நிறுவன அமைப்பு ஏற்படுத்தப்படும்.

ஒ) பல்வேறு வகைப்பட்ட மத்திய பொதுத்துறை நிறுவனப்பங்குகள் பங்குச்சந்தை முதலீட்டு நிதியாகக் கொண்டுவரப்படும்.

ஓ) பாதுகாப்பு உறுதி ஏற்படுத்தும் கம்பெனிகள், மறுசீரமைப்பு கம்பெனிகள் போன்றவை வழங்கும் பாதுகாப்புப் பத்திரங்கள் (SRs) பங்குச்சந்தையில் பட்டியலிடவும், விற்பனை செய்யவும் அனுமதிக்கப்படும்.

## VIII. மின்னணு பொருளாதாரம்

அ) ஆதார் எண்ணைக் கொண்டு பணப்பரிவர்த்தனை விரைவில் செயல்படுத்தப்படும்.

ஆ) நிதிநிலையை உள்ளடக்கிய நிதியம் விரிவுபடுத்தப்படும்.

இ) பணம் செலுத்துதல், கணக்குதீர்த்தல் ஆகியவை விசாலமான நிலையில் மறுஆய்வு செய்யப்பட்டு மின்னணு பரிவர்த்தனைக்கு ஒத்தநிலைக்குக் கொண்டுவரப்படும். இதனிடையே, சட்டம் திருத்தப்பட்டு பணம் செலுத்துவதை ஒழுங்குபடுத்தும் குழு இந்திய ரிசர்வ் வங்கியில் அமைக்கப்படும்.

ஈ) வங்கிகளில் பணப்பரிமாற்றமும், காசோலை மூலம் பணம் செலுத்துவதும் அதிகரித்துள்ள நிலையில், புதிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் செலாவணிக்கருவிகள் சட்டம் திருத்தப்படும்.

## IX. பொதுச் சேவை

கடவுச்சீட்டு சேவைகளை வழங்கும் அலுவலக முகப்பாக தலைமை அஞ்சல் அலுவலகங்கள் செயல்படும்.

பெருங்குற்றம் இழைப்போர், பொருளாதாரக் குற்றங்கள் புரிவோர், சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவதற்காக வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வோர் ஆகியோரின் சொத்துக்களைக் கைப்பற்ற சட்டத்தில் மாற்றங்கள் அல்லது புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

**பிரிவுவாரியாக கூடுதல்**

(ரூபாய் கோடிகளில்)

| வரிசை எண் | பிரிவுகள் | BE 2016-17 | RE 2016-17 | BE 2017-18 |
|---|---|---|---|---|
| 1. | வேளாண்மையும் அதனுடன் இணைந்த பணிகளும் | 48572 | 52821 | 58663 |
| 2. | ஊரக வளர்ச்சி | 102543 | 114947 | 128560 |
| 3. | உள்கட்டமைப்பு | 348952 | 358634 | 396135 |
| 3a. | போக்குவரத்து உள்கட்டமைப்பு | 216268 | 216903 | 241387 |
| 4. | சமுதாயத்துறைகள் | 168100 | 176225 | 195473 |
| 4a | கல்வியும் உடல்நலமும் | 112138 | 114806 | 130215 |
| 4b | நலநோக்குடன்கூடிய சமுதாயத்துறைகள் | 55962 | 61419 | 65258 |
| 5. | வேலைவாய்ப்பு உருவாக்கம், திறன், வாழ்வாதாரம். | 12006 | 14735 | 17273 |
| 6. | அறிவியல் அமைச்சகங்கள் | 33467 | 34359 | 37435 |

ஆதாரம்: செலவின விவரமும் செலவின பட்ஜெட்டும் 2017-18.

### உத்தேச வரிவிதிப்புகளின் சுருக்கம் - பகுதி 2

**மலிவு விலையில் வீடுகள்**

**I. மலிவுவிலை வீடுகளுக்கு வருமான வரியில் மூன்று விதமான விலக்குகள்:**

அ) 30சதுர மீட்டரும் 60 சதுரமீட்டரும் தரைவிரிப்பு பகுதியாகக் கருதப்படுமேயன்றி கட்டிடப்பகுதியாக கருதப்படாது.

ஆ) 30 சதுரமீட்டர் பரப்பு என்பது நான்கு பெருநகரங்களுக்கும், 60 சதுரமீட்டர் பரப்பு என்பது நாட்டிலுள்ள பிற பகுதிகளுக்கும் பொருந்தும்.

இ) கட்டிமுடிப்பதற்கான கால அவகாசம் 3 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக நீடிக்கப்பட்டுள்ளது.

2. கட்டுமானதாரர்களுக்கு உத்தேச வாடகை வருமானத்தின் மீதான வரி, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டதில் இருந்து ஒரு ஆண்டுக்குப் பிறகுதான் கணக்கிடப்படும்.

3. அசையா சொத்துக்களில் இருந்து கிடைக்கும் மூலதன ஆதாயத்திற்கான வரியில் மூன்று மாற்றங்கள்.

அ) நீண்ட முதலீட்டு ஆதாயத்தைக் கணக்கிடுவதற்கு 3 ஆண்டுகள் தேவை என்பதற்கு பதிலாக 2 ஆண்டுகளே போதுமானது.

ஆ) அசையாச் சொத்துக்கள் உட்பட அனைத்து வகையான சொத்துக்களுக்கும் சொத்து மதிப்பைக்கணக்கிடும் அடிப்படை ஆண்டு 1.4.1981 இல் இருந்து 1.4.2001 ஆக மாற்றப்பட்டுள்ளது.

இ) மூலதன ஆதாயத்தை வரியில்லமல் முதலீடு செய்வதற்கு முதலீட்டுக்கருவிகள் அதிகரிக்கப்பட இருக்கின்றன.

4. இணைந்து வளர்த்தெடுக்கும் ஒப்பந்தத்தில் முதலீட்டு ஆதாய வரியை செலுத்தும் பொறுப்பு சீரிய ஆலோசனைக்கட்டணம் பெறப்பட்ட ஆண்டு முதல் தொடங்கும்.

5. 2.6.2014 தேதியில் உரிமையாளர்களிடம் இருந்த ஆந்திரப்பிரதேச மூலதனம், நிலங்கள் போன்றவை நில ஒன்று சேர்ப்பு நடைமுறையின் கீழ் வழங்கப்பட்டிருந்தால் மூலதன ஆதாயத்திலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

**II. வளர்ச்சியைத் தூண்டுவதற்கான முயற்சிகள்**

1. இந்தியாவில் தரப்பட்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களின் கடன்களுக்குப் பெறப்படும் வட்டியில் நிறுத்திவைப்புச் சலுகை சலுகை விகிதம் 5% ஆக இருக்கும். அல்லது தற்போதுள்ள முதலீடுகள் 30.6.2017க்குப் பிறகு 3 ஆண்டுகளுக்குத் தொடரச் செய்யப்படும்.

2. ஸ்டார்ட் அப்கள் சென்ற ஆண்டு வழங்கப்பட்ட வருமான வரி விடுமுறையின் கீழ் இரண்டு ஆண்டு தளர்வுகளைப்பெறும்.

அ) ஒரு நிறுவனத்தை மேம்படுத்தி வளர்த்தவரின் தொடக்க கால முதலீடு குறையாமல் இருக்கும் வரை 51% வாக்களிப்பு உரிமையை தொடர்ச்சியாக வைத்துக்கொள்ளும் நிலை தளர்த்தப்படும்.

ஆ) நிறுவப்பட்ட ஆண்டிலிருந்து 7 ஆண்டுகளுக்குள் 3 ஆண்டுகளுக்கான விதிவிலக்குகள் கிடைக்கும்.

3. MATMM கடன்கள் பெறும் காலம் பத்திலிருந்து பதினைந்து ஆண்டுகளாக அதிகரிக்கப்படுகிறது.

4. 2015-16 இல் 50 கோடி வரை விற்றுமுதல் உள்ள நிறுவனங்களுக்கு பெருநிறுவன வருமான வரி 30% லிருந்து 25% ஆக குறைக்கப்படும். தற்போதுள்ள 6.7 லட்சம் கம்பெனிகளில் 96 விழுக்காடு கம்பெனிகள் இதனால் பயன்பெறும்.

5. வங்கிகளில் உள்ள செயல்படாத மூலதனங்களுக்கு ஏற்ப லாபத்திலிருந்து 7.5% என்பதற்கு பதிலாக 8.5% கழித்துக்கொள்ளப்படும்.

6. கூட்டுறவு வங்கிகளின் செயல்படாத நிலையில் உள்ள சொத்துக்களைப் பொறுத்தவரை அதற்கான வட்டி கிடைக்கப்பெறும்போது மட்டுமே அது வருமானமாக கருதப்படும்.

**III. மின்னணு பண பரிவர்த்தனையை ஊக்குவித்தல்**

1. சிறு விவசாயிகளுக்கான உத்தேச வருமான வரி கணக்கீட்டில் அவர்கள் வங்கி அல்லது மின்னணு பரிவர்த்தனை மூலம் செய்யக்கூடிய விற்று முதலில் 6% மட்டுமே வருமானமாக கருதப்படும்.

2. அனுமதிக்கப்படக்கூடிய பணச்செலவு ரூ.20ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரமாகக் குறைக்கப்படும்.

3. ரூ.3 லட்சத்திற்கும் மேல் ரொக்கப்பரிவர்த்தனை செய்ய முடியாது. இதை மீறுபவர்களுக்கு 100% அபராதம் விதிக்கப்படும்.

## IV. தேர்தல் நிதியில் வெளிப்படைத் தன்மை

1. அரசியல் கட்சிகளுக்குத் தரப்படக்கூடிய நன்கொடை ஒரு நபருக்கு ரூ.20 ஆயிரத்திலிருந்து ரூ.2 ஆயிரமாகக் குறைக்கப்படுகிறது.

2. வரி செலுத்தப்பட்ட பணம் நன்கொடையாகத் தரப்படுவதை உறுதி செய்ய தேர்தல் பத்திரம் அறிமுகப்படுத்தப்படலாம். அதேசமயத்தில் ரகசியமும் காக்கப்படும்.

3. வருமான வரி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் அரசியல் கட்சிகள் கணக்கைத் தாக்கல் செய்தாக வேண்டும்.

## V. எளிதில் தொழில் செய்வதற்கு

1. இரண்டு கம்பெனிகளில் ஒன்று லாபத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரிக்கழிவைக் கட்டக்கூடியதாக இருக்கும்பட்சத்தில் ஒரு கம்பெனிக்கு மட்டுமே உள்நாட்டு சரக்கு மாற்று விலை பொருந்தும்.

2. தொழில் நிறுவனங்களின் கணக்காய்வு வரம்பு ரூ.1 கோடியில் இருந்து 2 கோடியாக உயர்த்தப்படும்.

3. தனி நபர்களும் பிரிவுபடாத ஹிந்து குடும்பங்களும் அவர்களது விற்றுமுதல் ரூ.25லட்சம் வரையிலுமோ அல்லது வருவாய் ரூ.2.5லட்சம் வரையிலுமோ இருக்கும் பட்சத்தில் கணக்குப்புத்தகங்கள் வைத்துக்கொள்ள வேண்டிய அவசிய மில்லை.

4. வெளிநாட்டு முதலீட்டாளர்களில் 1-2 பிரிவை சேர்ந்தவர்கள் மறைமுக மாற்றல் கட்டுப்பாட்டு விதிகளில் இருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்.

5. தங்களின் வருவாய், வருமான வரி செலுத்தவேண்டிய அளவுக்கு இல்லை என்று சான்றளிக்கும் காப்பீட்டு முகவர்களுக்கு வருவாய் உற்பத்தியாகும் மூலத்திலேயே 5% வரி பிடித்தம் செய்யப்படமாட்டாது.

6. முன்கூட்டி வரி செலுத்தும் தொழில் முறையாளர்கள் மார்ச் மாதத்தில் ஒரே தவணையில் வரி செலுத்தவேண்டும். நான்கு தவணைகளில் அல்ல.

7. வரிக்கணக்கில் மாற்றங்கள் செய்வதற்கான கால அளவு 12 மாதங்களாக குறைக்கப்படுகிறது. 2019-20 கணக்கீட்டு ஆண்டிலிருந்து மீளாய்வை முடிப்பதற்கான கால அளவும் 12 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

## VI. தனிநபர் வருமான வரி

1. 2.5 முதல் 5 லட்சம் வரை வருமானம் உள்ளவர்களுக்கு வருமான வரி 10% லிருந்து 5% ஆக குறைக்கப்படுகிறது. இதனல் வரி பாதியாகக் குறையும். இந்த அடுக்கிற்கு மேல் உள்ள வரி செலுத்தும் நபர் ஒவ்வொருவருக்கும் ரூ.12500 என்ற அளவில் லாபம் கிடைக்கும். (வருவாய் இழப்பு ரூ.15500கோடி)

2. 2.5 லட்சம் முதல் 5 லட்சம் வரையான அடுக்கைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைத்து வந்த ரூ.5000 தள்ளுபடி 3.5 லட்சம் வரை ரூ.2500 ஆக குறைக்கப்படும்.

3. ரூ.50 லட்சத்திற்கும் மேல் 1 கோடி வரை வருமானம் உள்ள தனி நபர்களுக்கு கூடுதல் வரியாக 10% விதிக்கப்படும். (வருவாய் ஆதாயம் ரூ.2700 கோடி)

## VII. மறைமுக வரி

1. LNG க்கான சுங்கவரி 5%லிருந்து 2.5% ஆக குறைப்பு. இதனால் வேதித் தொழிலகங்களும், பெட்ரோலியத் தொழிலகங்களும் பயன்பெறும்.

2. விற்பனை முனையக்கருவிகள், பணம் வழங்கும் சிறிய கருவிகள், விரல் ரேகையை அறியும் கருவிகள், பிம்பத்தை காட்டும் ஸ்கேனர் கருவிகள், அடையாளம் அறியும் கருவிகள், ஆகியவற்றை மின்னணு பணப்பரிவர்த்தனைக்குப் பயன் படுத்தும்போது சுங்கவரி, குறிப்பிட்ட சில இறக்குமதி பொருள்கள் திணிக்கப் படுவதைத் தவிர்பதற்காக விதிக்கப்படும் சிறப்பு வரி, இறக்குமதி பொருள்கள் மீதான சிறப்புக்கூடுதல்வரி ஆகியவை அறவே விதிக்கப்படமாட்டாது.

## VIII. சரக்கு மற்றும் சேவை வரி அநேகமாக 1.7.2017 முதல் அமலாகும்.


•

# 2017-2018 ஆம் ஆண்டு சுகாதார பட்ஜெட்டில் ஆரோக்கியமான வளர்ச்சி

- ராஜீவ் அஹுஜா

வளர்ச்சி பொருளாதார நிபுணர்

2017-18 மத்திய பட்ஜெட்டில் சுகாதாரத்திற்கான ஒதுக்கீடு ரூ.50,283 கோடி என்ற அளவுக்கு அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. (இந்த ஆய்விற்கான நோக்கத்திற்காகச் சுகாதார ஒதுக்கீடுகள் என்பதில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்துக்கும் (MoHFW), ஆயுஷ் அமைச்சகத்துக்கும் (MoAYUSH) மேற்கொள்ளப்படும் ஒதுக்கீடுகளும் அடங்கும். 2014 -15வரை ஆயுஷ் அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் இருந்தது. அதற்குப் பிறகு அது தனிப்பட்ட அமைச்சகமாக அறிவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்த்தாக வேண்டும். சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்துக்கான ஒதுக்கீட்டில் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறைக்கும் அதே போன்று சுகாதார ஆராய்ச்சித் துறைக்கும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் உள்ளடங்கும்). இதற்கு முந்தைய பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூ39,533 கோடி என்ற அளவோடு ஒப்பிட்டால் சுகாதாரத்திற்கான ஒதுக்கீடு சுமார் 27% அதிகரித்துள்ளது எனலாம். 2017-18ஆம் ஆண்டின் பட்ஜெட்டில் சுகாதாரத் துறைக்கான சீர்செய்யப்படாத நிலையில் ஒதுக்கீட்டுக்கான நிதி அதிகரிப்பு கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத வகையில் அதிகபட்சமானதாக இருக்கிறது. கீழே உள்ள வரைபடத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும். உண்மையான வரையறைகளின்படி பார்த்தால் கூட - அதாவது வரும் நிதியாண்டிலும் கூட நிலையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் மருத்துவத்துறை பணவீக்கத்துக்கு ஏற்ப சரிப்படுத்துதல் மேற்கொண்ட பிறகு பார்த்தால் கூட - இது ஆரோக்கியமான வளர்ச்சியாகவே இருக்கிறது. மத்திய சுகாதார ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்களின் போக்கை கவனத்துடன் பார்த்தல் என்பது மத்திய சுகாதார நிதியளிப்பு என்ற பிரச்சனையைச் சரியான பார்வையில் பொருத்திப் பார்க்க உதவியாக இருக்கும்.




**ஆதாரம்: பல ஆண்டுகளுக்கான மத்திய பட்ஜெட் ஆவணங்கள்**

மேலே உள்ள வரைபடம் 2004-05ஆம் ஆண்டில் இருந்து 2017-18ஆம் ஆண்டு வரை மத்திய பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் செலவினங்களின் (சீர்செய்யப்படாத நிலை) வளர்ச்சி விகிதத்தை எடுத்துக் காட்டுகிறது. இதன் பின்னணி குறித்து இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். இந்தக் காலகட்டம் என்பது பொது சுகாதாரச் செலவு குறைவாக இருக்கும் காலகட்டமாக இருப்பதோடு இதற்கான ஒதுக்கீடு குறைந்து கொண்டே வரும் போக்கையே காட்டுகிறது. சேவை அளிப்பதை மேம்படுத்தும் வகையில் அதாவது உந்துதல் தரும் வகையில் 2005-06ஆம் ஆண்டில் தேசிய ஊரக சுகாதார இயக்கம் தொடங்கப்பட்டது. இந்தத் தருணத்தில்தான் நாட்டில் அதிகப் பொருளாதார வளர்ச்சி இருந்தது. அரசாங்க வருவாய்கள் அதிக அளவில் இருந்தன. எனவே 2004-05ஆம் ஆண்டில் இருந்து 2017-18ஆம் ஆண்டு வரை, மத்திய சுகாதார ஒதுக்கீடுகள் இந்த

ஆண்டுகளில் முந்தைய அளவைவிட ஆண்டுக்கு 10 சதவிகிதம் என்ற விகிதத்தில் வளர்ச்சி அடைந்தன. ஆனால் இதில் 2013-14 முதல் 2015-16வரை உள்ள 3 ஆண்டுகள் விதிவிலக்கானவை. இந்த 3 ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் ஏன் குறைவாக இருந்தது என்பதற்கு ஒரு காரணம் மத்திய நிர்வாகம் மாறியது ஆகும். மேலும் மாநிலங்களுக்கான வரிகளின் பங்கு ஒதுக்கீடு பதினான்காம் நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி அதிகரித்தது. மாநிலங்களுக்கு அதிக அளவிலான வரிகளின் பங்கு ஒதுக்கீடு என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்றால், மாநிலங்களுக்கு நிபந்தனை அற்ற நிதியானது அதிக அளவில் கிடைக்க வழி வகுத்ததுதான். இதன் மூலம் மாநிலங்கள் தங்கள் கட்டாய கடமைகளைச் செய்யும் - அவற்றில் ஒன்றுதான் சுகாதாரச் சேவையை வழங்குதலாகும்.

மத்திய சுகாதாரத் துறை ஒதுக்கீடுகள் அதிகமாக இருந்ததால் சுகாதாரத்திற்கான செலவினங்களும் அதிக வளர்ச்சி போக்கிலேயே 2010-11ஆம் ஆண்டு வரை இருந்தன. அந்த ஆண்டுதான் வளர்ச்சி விகிதம் 10 சதவிகிதத்திற்கும் குறைவாக ஆனது. இந்த நிலையானது 2015-16 வரை தொடர்ந்தது. இப்போது வளர்ச்சி விகிதம் அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. 2016-17ஆம் ஆண்டுக்கான சுகாதாரச் செலவினப் புள்ளி விவரம் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி, இந்த ஆண்டுக்குச் சுகாதாரச் செலவின வளர்ச்சி சுமார் 17 சதவிகிதம் ஆக இருக்கக் கூடும். கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் 2015-16ல் சுகாதார ஒதுக்கீடுகள் 15 சதவிகிதம் அளவுக்கு நேர்க்கோடாக குறைந்தது (அதாவது வளர்ச்சி விகிதம் மைனஸ் 15 சதவிகிதம் ஆகும்). ஆனால் சுகாதாரச் செலவினம் 9 சதவிகிதத்துக்கு மேல் அதிகரித்தது. ஆண்டின் மத்தியில் பட்ஜெட் திருத்தம் மூலம் மேல் நோக்கிய சரி செய்தலை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான்.

மீண்டும் இந்தப் பின்னணியில் பார்க்கும் போதுதான், 2017-18ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடுகள் சுமார் 27 சதவிகிதம் அதிகரித்து உள்ளது என்பது ஆரோக்கியமான வளர்ச்சியாகும் என்பது தெரிய வரும். 2017-18இல் முன்மொழிந்துள்ள மத்திய சுகாதாரச் செலவினங்கள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டால், சுகாதாரச் செலவினங்களைப் பொருத்தும் ஆரோக்கியமான வளர்ச்சியே இருக்கக் கூடும் எனக் கூறலாம். சுகாதார ஒதுக்கீடுகளும் சுகாதாரச் செலவினங்களும் ஏன் ஒத்துப்போக வேண்டும் என்று நாம் நம்புகிறோம்? கடந்த 2 ஆண்டுகளில் பட்ஜெட் நிதிப் பயன்பாட்டு விகிதம் மேம்பட்டு இருக்கும் நிலை இந்த நம்பிக்கையைத் தருகிறது. கீழ்வரும் பட்டியலைப் பார்ப்போம்:

| பட்ஜெட் நிதிப் பயன்பாட்டு விகிதம் | 2010-11 | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 |
|---|---|---|---|---|---|---|---|
| பட்ஜெட் ஒதுக்கீட்டில் திருத்தப்பட்டதன் பங்கு | 99.6 | 92.9 | 84.9 | 82.6 | 81.5 | 105.0 | 103.7 |
| பட்ஜெட் ஒதுக்கீட்டின் உண்மையான செலவின் பங்கு | 97.2 | 85.0 | 80.9 | 80.7 | 81.9 | 105.7 | |

**ஆதாரம்: மத்திய பட்ஜெட் ஆவணங்கள் - பல ஆண்டுகளுக்கானவை**

### பட்ஜெட் ஒதுக்கீடுகள் - ஒரு அணுக்கப் பார்வை

மொத்தமான மத்திய சுகாதாரப் பட்ஜெட் 2017 18ல் சுமார் 94% சுகாதாரம் - குடும்பநலத் துறைக்கான பட்ஜெட்டுக்கே ஒதுக்கப்படுவதை நெருங்கிப் பார்த்து ஆராயும்போது, ஆர்வமூட்டும் அம்சங்கள் சில தெரியவருகின்றன (கீழ்வரும் பட்டியலைப் பார்க்கவும்):

- பட்ஜெட் தலைப்புகள் மறுசீரமைக்கப்பட்டன; பட்ஜெட் எளிதானதாக இருக்கவும் புரிந்து கொள்ள எளிதாக இருக்கவும் இது மேற்கொள்ளப்பட்டது.

- தேசிய சுகாதார இயக்கம் மற்றும் தேசிய சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் ஆகிய மத்திய அரசு நிதி உதவி செய்யும் திட்டங்களின் கீழ் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு சுகாதாரப் படஜெட்டின் ஒதுக்கீட்டில் சுமார் 59% மாற்றித் தரப்பட்டுள்ளது.

- பிரதம மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா திட்டம் (பி.எம்.எஸ்.எஸ்.ஒய்) உள்ளிட்ட மத்திய அரசு திட்டங்கள் ஒதுக்கீட்டில் சுமார் 15% நிதி மட்டுமே பெறுகின்றன. இத்திட்டத்தின் நோக்கம் எய்ம்ஸ் போன்ற உயர்கல்வி நிலையங்களை நிர்மாணிப்பதும் மருத்துவக் கல்லூரிகளின் தரநிலைகளை அதிகரிப்பதும் ஆகும்.

- சுகாதாரம் மற்றும் மருத்துவக் கல்விக்கான மனித வள ஆற்றலுக்கு பட்ஜெட் ஒதுக்கீட்டில் அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது (ரூ.3,425 கோடி அதிகமாகத் தரப்பட்டுள்ளது). இதைத் தொடர்ந்து தேசியஊரக சுகாதார இயக்கத்துக்கு ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது (ரூ.3,100 கோடி) மற்றும் பி.எம்.எஸ்.எஸ்.ஒய் க்கும் அதிகரிக்கப்பட்டுள்ளது (ரூ.1,525 கோடி). இந்த ஒதுக்கீட்டுத் தலைப்புகள் மூன்றுக்கும் ஒரு சேர துறையின் ஒதுக்கீட்டில் சுமார் 30% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

- மருத்துவப் பணியாளர்களின் பற்றாக் குறையைக் கவனத்தில் கொண்டு, குறிப்பாக மருத்துவர்களின் பற்றாக் குறையைப் போக்க சுகாதாரத்துக்கான மனிதவள ஆற்றலை உருவாக்கு வதற்காகத்தான் அரசின் செயல்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தனது பட்ஜெட் உரையில் நிதி அமைச்சர் ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 5000 முதுநிலை படிப்புக்கான இடங்களை உருவாக்க இருப்பதாகத் தெரிவித்தார். சுகாதாரம் மற்றும் மருத்துவக் கல்விக்கு மனிதவள ஆற்றலுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு அதிகபட்சமாக அதிகரிக்கப்பட்டு இருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

- சுகாதாரப் பட்ஜெட்டில் தேசிய ஊரக சுகாதார இயக்கம் தொடர்ந்து அதிகபட்ச ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளது - சுகாதாரம் & குடும்ப நலத் துறைக்கான மொத்த ஒதுக்கீடுகளில் இதற்கு சுமார் 45% ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் உட்பிரிவுகளுக்குள் நிதி ஒதுக்கீடு எதை வலியுறுத்துகிறது என்றால் சுகாதார அமைப்பை வலியுறுத்துவதற்கு முக்கியத்துவம் தரப்படுவதைத்தான்.

- பட்ஜெட்டில் மூலதன செலவினம் ரூ.3,510 கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 2016-17ஆம் ஆண்டைவிட சுமார் ரூ.1,760 கோடி அதிகரித்துள்ளது. அரசு மருத்துவ மனைகளுக்கான மூலதன செலவுகளுக்கே பி.எம்.எஸ்.எஸ்.ஒய்ன் கீழ் பெரும்பாலான நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது.

**சுகாதாரம் & குடும்பநலத் துறைக்கான பட்ஜெட்**

| | | | ரூ.கோடியில் | | |
|---|---|---|---|---|---|
| | | பட்ஜெட் 2016-17 | பட்ஜெட் 2017-18 | மாற்றம் நிகர எண்ணிக்கையில் | மாற்றம் % சதவிகிதத்தில் |
| | | அ | ஆ | ஆ-அ | %ல் |
| 1 | மத்திய அரசின் நிர்வாகச் செலவினம் | 3804 | 4731 | 927 | 24.4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | மத்திய அரசு பிரிவின்கீழ் வருகின்ற திட்டங்கள்/செயல் திட்டங்கள் | 4789 | 6967 | 2178 | 45.5 |
| | .இதில் பிரதமமந்திரி ஸ்வஸ்தய சுரக்ஷா திட்டத்திற்கான ஒதுக்கீடு | 2450 | 3975 | 1525 | 62.2 |
| 3 | இதர மத்திய அரசு பிரிவின் கீழான செலவினம் | 6607 | 7965 | 1358 | 20.6 |
| | இதில் சட்டரீதியிலான மற்றும் நெறிமுறைப்படுத்தும் அமைப்புகள் | 100 | 171 | 71 | 71.0 |
| | தன்னாட்சி அமைப்புகள் | 5174 | 6088 | 914 | 17.7 |
| | மற்றவை | 1333 | 1706 | 373 | 28.0 |
| 4 | மத்திய அரசு நிதி தரும் திட்டங்கள் (அ+ஆ) | 21862 | 27691 | 5829 | 26.7 |
| | அ) தேசிய சுகாதார இயக்கம் | 20362 | 26691 | 6329 | 31.1 |
| | இதில் தேசிய ஊரக சுகாதார இயக்கத்திற்கான ஒதுக்கீடு | 18087 | 21189 | 3102 | 17.2 |
| | இதில் தேசிய நகர சுகாதார இயக்கத்திற்கான ஒதுக்கீடு | 950 | 752 | 198 | 20.8 |
| | மூன்றாம் நிலை பாதுகாப்பு திட்டங்கள் | 725 | 725 | 0.0 | 0.0 |
| | சுகாதாரம் மற்றும் மருத்துவக் கல்விக்கான மனிதவளம் | 600 | 4025 | 3425 | 570.8 |
| | ஆ) தேசிய சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் | 1500 | 1000 | 500 | 33.3 |
| | மொத்தம் | 37062 | 47354 | 10292 | 27.8 |

**ஆதாரம்- மத்திய பட்ஜெட் 2017-18**

**அதிகம் என்பது குறைவாக இருக்கும் போது**

இந்தப் பட்ஜெட்டில் சுகாதார ஒதுக்கீடுகள் 27% அதிகரிப்பு என்பது பல பங்குதாரர்களைச் சந்தோஷப்படுத்தவில்லை. ஏனெனில் இந்தப் பட்ஜெட்டில் அவர்கள் இன்னமும் அதிக அளவில் ஒதுக்கீடுகளை எதிர்பார்க்கின்றனர். இந்தப் பட்ஜெட்டில் அதிக எதிர்பார்ப்புகளுக்கு எது அடிப்படையாக இருக்கக் கூடும்? ஒரு அடிப்படைக் காரணமாக, பொது சுகாதாரத்திற்கு இந்தியா தொடர்ந்து குறைவாகவே செலவழித்து வரும் வரலாற்றைக் கூறலாம். இரண்டாவது காரணம் தேசிய சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான எந்த ஒரு அறிவிப்பும் இல்லாதது ஆகும். அதேபோன்று, அண்மையில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்து தெளிவில்லாததும் ஆகும். இந்தப் பட்ஜெட்டில் அதிக ஒதுக்கீடுகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கச் செய்த இந்த இரண்டு காரணங்களையும் நாம் விரிவாக ஆய்வு செய்யலாம்.

## இந்தியாவில் பொது சுகாதாரத்திற்கான செலவினம் குறைவு:

உள்நாட்டு மொத்த உற்பத்தியில் எத்தனை சதவிகிதம் (201415ல் 1.3%) அல்லது அரசாங்கத்தின் மொத்த செலவினத்தில் எத்தனை சதவிகிதம் (2014 -15ல் 4.8%) அல்லது தனிநபருக்கான செலவு எவ்வளவு (2013-14ல் 20 அமெரிக்க டாலருக்கும் குறைவு) என அரசாங்கத்தின் சுகாகாரத் துறைக்கான செலவினத்துக்கான குறிகாட்டி எதுவாக இருந்தபோதிலும் அது ஒரு பொருட்டல்ல. தன்னை ஒத்த பிற நாடுகளோடு ஒப்பிட்டால், இந்தியாவின் நிலை மோசமாகவே இருக்கிறது என்பது தெரிய வரும். எதுவாக இருந்தாலும் இந்தியாவில் சுகாதாரத்துக்கான அரசாங்க செலவு வரலாற்று ரீதியில் குறைவாகவே இருந்து வந்துள்ளது. இத்தகைய வரலாற்று விலகல்களை அல்லது சமநிலை இன்மையை ஒரு சில தொடர்ச்சியான வருடாந்திர பட்ஜெட்டுகளால் சரி செய்துவிட முடியும் என எதிர்பார்ப்பது தவறாகும். இது ஒரு தலைமுறை அல்லது பரம்பரையான பிரச்சனையாகும். மேலும், மொத்த அரசாங்க சுகாதார செலவினத்தில் மத்திய அரசு 1/3 பாகம்தான் செலவழிக்கிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், பெரும்பான்மையான (2/3) அரசாங்கச் சுகாதாரச் செலவுகள் மாநில அரசுகளால் மேற்கொள்ளப் படுகிறது. எனவே இந்தியாவில் அரசாங்க சுகாதாரச் செலவை அதிகரிக்கச் செய்வதில் மாநிலங்கள் மிக முக்கியப் பங்கை வகிக்கின்றன. பதினான்காவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், சுகாதார பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீட்டில் மாநில அரசுகளின் பங்கு மேலும் அதிகரித்தே உள்ளது.

மாநில அளவில், சுகாதாரப் பராமரிப்பு தொடர்பான பிரச்சனை என்பது அதன் நிதி பங்களிப்பு சார்ந்தது மட்டுமன்று. சுகாதாரச் சேவைகள் அளிக்கப்படுவதற்கான பொறுப்பும் மாநில அரசுகளுக்கு உள்ளது. பொதுசுகாதார பராமரிப்பு வசதிகளை வழங்குவதில் பெரிய இடைவெளிகள் உள்ளன என்பது நன்கு தெரிந்த உண்மைதான். நடைமுறைப்படுத்த வேண்டிய ஏஜென்சிகளாக இருக்கின்ற அடிப்படை யதார்த்தத்துக்கு நெருக்கமாக உள்ள மாநில அரசுகள் சுகாதாரப் பராமரிப்பு சேவை மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகிய இரண்டும் சுகாதாரப் பராமரிப்பு வண்டியின் இரண்டு சக்கரங்கள் போன்றவை என்பதை நன்கு புரிந்து வைத்துள்ளன. நேராகத் தடங்கல் இன்றி வண்டி பயணிக்க இரண்டு சக்கரங்களும் ஒத்திசைந்து நகர வேண்டும்.

மாநில அரசுகள் சுகாதாரத்திற்குக் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேலும் கூடுதலாக செலவழிக்கச் செய்ய, சுகாதாரச் சேவைகளை வழங்குதல் என்பது மேம்படுத்தப்பட வேண்டும். சுகாதாரச் சேவைகளை மேம்படுத்துதல் என்பதை சேவைகளை வழங்குவதில் உள்ள இடைவெளிகளை மேலோட்டமாக நிரப்புதல் என்ற அளவில் மட்டும் சுருக்கிவிட முடியாது. விநியோக அமைப்புக்கு கட்டுமானச் சீரமைப்பு தேவையானதாக உள்ளது. நோய்த்தாக்கத்தில் ஏற்படும் மாற்றம், விநியோக அமைப்பு, மேலும் நன்றாகப் பராமரித்தல் மற்றும் அதிக அளவு பொறுப்புடைமை ஆகியவற்றால் மக்கள் திரள்களின் தேவைகளுக்கு ஏற்ப அமைப்பானது பதில்வினை ஆற்றுமாறு செய்ய வேண்டும். இந்தக் கட்டுமானச் சீரமைப்பு நடைமுறைப் படுத்தப்பட, உயர்நிலையான அரசியல் உறுதிப்பாடு, வலுவான தலைமை மற்றும் தொலைநோக்குப் பார்வை ஆகியன ஒவ்வொரு மாநிலத்திலும் உருவாக வேண்டும்.

## தேசிய சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் (என்.எச்.பி.எஸ்):

பிரதம மந்திரி ஆகஸ்ட் 15, 2016 அன்று தனது சுதந்திர தின உரையின் போது ஏழை மக்களுக்கு ரூபாய் 1லட்சம் வரை ஆரோக்கியக் காப்பீடு வழங்கும் திட்டத்தை வகுக்க தனது அரசு முயற்சிகள் எடுத்து வருகின்றது எனக் குறிப்பிட்டார். தனது பிப்ரவரி 2016 பட்ஜெட் உரையில் நிதி மந்திரி தனது அரசு என்.எச்.பி.எஸ். திட்டத்தை தொடங்க உத்வேகம் காட்டி வருவதைச் சுட்டிக் காட்டினார். இந்தத் திட்டம் மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சேர்ந்து

செலவு செய்வதற்கான நிதி சார்ந்த பாதுகாப்பைத் தருவதோடு இத்திட்டத்தின் கீழ் அதிக அளவு மக்கள்திரளைக் கொண்டு வரவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்றார் நிதி அமைச்சர். இந்தப் பின்னணியில்தான் 201718ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் அரசு என்.எச்.பி.எஸ் குறித்து அறிவிக்கும் என்ற எதிர்பார்ப்புகள் உருவாயின. நிதிமந்திரி அத்தகைய அறிவிப்பு எதையும் செய்யாததால் மக்களின் எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போய்விட்டன.

பலவிதமான சாத்தியங்களையும் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இந்தத் திட்டத்தின் அறிவிப்பானது தள்ளிப் போய்த்தான் உள்ளது. திட்டமானது கைவிடப்படவில்லை. ஐந்து மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்கள் நடந்து கொண்டிருக்கும் இச்சூழலில் அறிவிப்புக்கான நேரம் சரியானதாக இல்லை என்பது காரணமாக இருக்கலாம். தேர்தல் நடக்கும் ஐந்து மாநிலங்களிலும் வாக்காளர்களைக் கவர்வதற்கான ஜனரஞ்சக நடவடிக்கையாக திட்ட அறிவிப்பு கருதப்பட்டு விடுமோ என அரசாங்கம் மிகக் கவனமாக அறிவிப்பைத் தள்ளிப் போட்டிருக்கக் கூடும்.

அதேபோன்று, அண்மையில் அறிவிக்கப்பட்ட சில புதிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும் தெளிவானதாக இல்லை. உதாரணமாக கர்ப்பிணிப் பெண் ஒருவர் மருத்துவமனையில் பிரசவம் பார்த்துக் கொள்வதையும் தடுப்பூசி போட்டுக் கொள்வதையும் ஊக்கப்படுத்தும் வகையில் அவருக்கு நிதிப் பரிமாற்றமாக ரூ6,000 அளிக்கும் திட்டம், அதேபோன்று காலா அசார் மற்றும் யானைக்கால் நோயை 2017க்குள்ளும் தொழுநோயை 2018க்குள்ளும் தட்டம்மையை 2020க்குள்ளும் காசநோயை 2025க்குள்ளும் நீக்கும் இலக்குகள் தொடர்பான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை.

இந்த லட்சியக் குறிக்கோள்களை அடைவது என்பது இத்தகைய நடவடிக்கைகளுக்கு நிதி அளிப்பது எவ்வளவு முக்கியமோ அந்த அளவு நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் மாநில அரசுகளின் திறனையும் சார்ந்தே உள்ளது. எவ்வாறாயினும், இத்தகைய திட்டங்களுக்குப் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என உடனடியாகத் தெளிவாகத் தெரியவில்லை. செயல்திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டு இருந்தால், அவற்றுக்கான நிதி ஒதுக்கீடும் ஏதோ ஓரிடத்தில் இருந்தே ஆகவேண்டும்.

மேலும் நிதி அமைச்சர் நாடு முழுவதிலும் உள்ள துணை சுகாதார மையங்களை (ஹெச்.எஸ்.சி) ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மையங்களாக மாற்ற உள்ளதாக அறிவித்துள்ளார். தேசிய அளவில் உள்ள 1.5லட்சம் துணை சுகாதார மையங்களை இவ்வாறு மாற்றுவதற்கான கால எல்லை நிர்ணயிக்கப்படவில்லை. அதேபோன்று இதுவரை எந்த விதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு இருக்கவில்லை. இந்த யோசனை இப்போதுதான் முன்வைக்கப் பட்டுள்ளதால், அடுத்த சில ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வாய்ப்பு உள்ளது. நிறைவாகச் சொல்ல வேண்டுமென்றால், பட்ஜெட்டில் மேற்கொள்ளப்பட்ட சில அறிவிப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு ஒன்றும் அதிகமாகச் செய்யப்பட்டு இருக்கவில்லை. குறைந்த விலையில் மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்யும் மூலப்பொருட்களின் பெயரிலான மருந்துகளை விற்பனை செய்வதை மேம்படுத்த மருந்து மற்றும் அழகுப் பொருட்கள் விதிகளில் திருத்தம் செய்தல் மற்றும் மருத்துவ உபகரணங்களை நெறிப்படுத்துதல் ஆகியவற்றுக்கு போதிய நிதியானது பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை.

எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பார்த்தால், மத்திய சுகாதார பட்ஜெட் நியாயமானதாகவே உள்ளது. அடுத்த சில வாரங்கள் மற்றும் மாதங்களில் மாநில அரசுகள் தங்களது பட்ஜெட்டுகளை அறிவிக்க உள்ளன. அனைவரின் கவனமும் இந்தப் பட்ஜெட் நிகழ்வுக்காகக் காத்திருக்கிறது. நிதி ஒதுக்கீடு மற்றும் ஆரோக்கியச் சேவைகளை வழங்குதல் ஆகிய இரண்டுக்கும் முன்னுரிமை தரும் முக்கியமான பொறுப்பை முன்னெடுக்க மாநிலங்கள் என்ன செய்யப்போகின்றன என்பதையும் பார்க்க வேண்டும்.

•

# மத்திய பட்ஜெட் 2017-2018 ஒரு பார்வை

- முனைவர் கா. செல்வகுமார்
உதவிப் பேராசிரியர், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.


எதிர் வரும் நிதியாண்டு 2017-2018க்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் அருண் ஜேட்லி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். மத்திய பட்ஜெட் மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டது அவை இந்த ஆண்டு முதன் முதலாக பொது பட்ஜெட்டுடன், ரெயில்வே பட்ஜெட்டும் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டது. மாத இறுதியில்தான் தாக்கல் செய்வது என்ற நடைமுறை மாற்றப்பட்டு பிப்ரவரி முதலிலேயே தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது. மற்றும் முதல் முறையாக திட்டச்செலவு, திட்டமல்லாத செலவு என்ற பாகுபாடு நீக்கப்பட்டிருக்கிறது.

மத்திய பட்ஜெட் 2017-2018ல் விவசாயம், இளைஞர்கள் நலன், கிராமப்புற வளர்ச்சி, வேலைவாய்ப்பு, அடித்தளக்கட்டமைப்பு, டிஜிட்டல் விரிவாக்கம், சிறுகுறுநடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி, ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருககிறது. பொது பட்ஜெட்டுடன் இணைக்கப்பட்ட பிறகு புதிய பட்ஜெட்டில் ரயில்வே துறைக்கு ரூ.1.31 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதிப்பற்றாக் குறையை ஒட்டுமொத்த ஜிடிபி மதிப்பில் 3.2 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தொழில்துறையில் ரூ 50 கோடிக்கும் குறைவான விற்றுமுதல் உள்ள தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய வரி விகிதம் 25 சதவீதம் குறைக்கப் பட்டிருக்கிறது. விலக்கு வரம்பு உயர்த்தப் படவில்லை. ரூ 50 கோடி விற்று முதல் வரை உள்ள தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் கார்ப்பரேட் வரி 30 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. ரூ 3 லட்சத்துக்கு மேல் ரொக்கப் பரிமாற்றத்தக்குத் தடை விதிக்கப்படுகிறது. டிஜிடல் பரிவர்த்தனையை ஊக்குவிக்க 'மினி ஏடிஎம்' இயந்திரங்களின் மீதான தீர்வை குறைக்கப்பட்டிருக்கிறது.

**ரயில்வே துறை**

ரயில்வே துறைக்கு 2017-2018 ஆம் நிதியாண்டுக்காக ரூ 1.31 லட்சம் கோடி மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டது. அதில் ரூ 55,000 கோடியை மத்திய அரசு அளிக்கும். ரயில் பயணத்தில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ரயில் தண்டவாளங்கள், சிக்னல்கள் ஆகியவற்றை மேம்படுத்துதல் வரும் 2020 க்குள் ஆளில்லா கடவுப்பாதைகளை அகற்றுவது ஆகியவற்றுக்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் ரூ 1 லட்சம் கோடியில் தேசிய ரயில்வே பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்படும் மேலும் புதிதாக 3,500 கி.மீ தொலைவுக்கு இரயில்வே இரும்புப்பாதைகள் அமைக்கப்படும். மாற்றுத் திறனாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்கள் எளிதில் வந்து செல்லும்வகையில் 500 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படும். சுற்றுலா, புனிதயாத்திரை ஆகியவற்றுக்காக சிறப்பு ரயில்கள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், புதிய மெட்ரோ ரயில் கொள்கைகள் விரைவில் அறிவிக்கப்படும். குறிப்பிட்ட சில அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்வதற்காக, தனியார் பங்களிப்புடன் ரயில்வே சரக்குப் போக்குவரத்து ஒருங்கிணைக்கப்படும் வரும் 2019 க்குள் அனைத்து ரயில் பெட்டிகளில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத பயோ கழிப்பறைகள் தெரிவிப்பதற்காக 'கிளின் மை கோச்' என்ற பெயரில் செல்லிடப் பேசி செயலியும் அறிமுகப்படுத்தப்படும் இந்திய ரயில்வே துறையின ஐஆர்சிடிசி (IRCTC) இணையதளம் மூலமாக முன்பதிவு செய்யும்போது ஏற்கனவே விதிக்கப்பட்டு வந்த சேவைக்கட்டணம் ரத்து செய்யப்படுகிறது.

**ஒரு ரூபாயில் வரவு- செலவு (பைசாவில்)**




அ.19 பைசா - கடன் மற்றும் பிற வரவினங்கள்
அ.24 பைசா - மாநிலங்களின் பங்கு
ஆ.19 பைசா - வர்த்தக நிறுவனங்களில் வரிகள்
ஆ.18 பைசா - வட்டி செலவினங்கள்
இ.16 பைசா - வருமானவரி
இ.13 பைசா - மற்ற செலவுகள்
ஈ.14 பைசா - மத்திய உற்பத்திவரி
ஈ. 11 பைசா - மத்திய திட்டங்கள்
உ.10 பைசா - சேவை வரிகள் பிற வரிகள்
உ.10 பைசா - மானியங்கள்
ஊ.10 பைசா - வரி அல்லாத வருவாய்
ஊ.10 பைசா - மத்திய அரசு நிதிபெறும் திட்டங்கள்
எ. 9 பைசா - சுங்க வரி
எ. 9 பைச - பாதுகாப்பு
ஏ. 3 பைசா - கடன் இல்லா முதலீட்டில் வரவு
ஏ. 5 பைசா - நிதி ஆணைக்குழு மற்ற பரிமாற்றம்

**வேளாண்மை**

வேளாண்மை ஊரகம் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளுக்கு மொத்தம் ரூ 1,87,223 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 24 சதவீதம் அதிகம் அடுத்த 5 ஆண்டுகளில் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்க அரசு திட்டமிட்டுள்ளது. வேளாண் தொழிலுக்கு ரூ 10 இலட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ 10 லட்சம் வரை வேளாண் கடன் வழங்கப்படும். பிரதம மந்தரி ஆவாஸ் யோஜானா திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை திருப்பி செலுத்துவதற்கான உச்சவரம்பை 15 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக நீட்டித்துள்ளது. நபார்டு வங்கி மூலம் அர்ப்பணிக்கப்பட்ட நுண்ணிய பாசன நிதியம் அமைக்கப்படும் இதன் மூலம்; அதிக விளைச்சல் என்ற இலக்கை எட்டமுடியும். இதற்கு ஆரம்ப மூலதனமாக ரூ 5000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கி மூலம் ரூ 8000 கோடி ஒதுக்கீட்டில் பால் பொருட்கள் பதனிடும் உள்கட்டமைப்பு நிதியம் அமைக்கப்படுகிறது. கிருஷி விஞ்ஞான் மையங்கள் மூலம் சிறிய பரிசோதனைக் கூடம் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்படும். 30 சதவீதமாக உள்ள பசல் பீமா யோஜனா திட்டம் 40 சதவீதமாக அதிகரிக்கப்படும். ஆண்டுக்கு 7 சதவீகிதம் வட்டியில் ரூ 3 லட்சம் வரை குறுகிய கால கடன் இதை குறிப்பிட்ட தேதியில் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு 3 சதவீதம் ஊக்கத்தொகை. இதன் மூலம்கடனுக்கான மொத்த வட்டி 4 சதவீதமாகவே இருக்கும். செயல்பட்டில் உள்ள 63 ஆயிரம் தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டு மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகளும் ரூ 1900 கோடியில் 3 ஆண்டுகளில் இணைக்கப்படும்.

**ஊரகத் துறை**

ஊரகத் துறைக்கு இதுவரை இல்லாத அளவில் வரும் நிதியாண்டில் ரூ1,87,200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது முந்தைய பட்ஜெட்டை காட்டிலும் 24 சதவீதம் அதிகம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புதிட்டத்துக்கான ஒதுக்கீடு ரூ 38,500 கோடியிலிருந்து 48000 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நூறுநாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு 55 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. கிராமப்புற பெண்களை அதிகாரம் பெறச் செய்வதற்காக கிராம அளவில் மகளிர் சக்தி மையங்கள் (மகிளா சக்தி கேந்திரா) இந்தாண்டில் தொடங்கப்படும். 2018 க்குள் நாட்டின் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரவசதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் வீடு கட்டும் திட்டம் (அவாஸ்யோஜனா) நிதி ஒதுக்கீடு ரூ 15 ஆயிரம் கோடியில் இருந்து ரூ 23 ஆயிரம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. பிரதமர் கிராம சாலை திட்டத்தில் (கிராம சதக் யோஜனா) நடைபெறும் சாலைப்பணி நாள் ஒன்றுக்கு 133 கி.மீ ஆக 2016 - 2017 ல் உயர்த்தப்பட்டது.

**மகளிர், குழந்தைகள் மேம்பாடு**

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம் பாட்டுக்காக ரூ 22,095 கோடி ஒதுக்கப்படும். இது நடப்பு நிதியாண்டின் ரூ 17,640 கோடியை விட 20 சதவீதம் அதிகம். இந்திரா காந்தி மகப்பேறு திட்டத்துக்கு ரூ 2,700 கோடி ஒதுக்குப்பட்டுள்ளது. இது நடப்பு நிதியாண்டின் ரூ 634 கோடியைப் போல 4 மடங்கு அதிகம். இந்தத் திட்டத்தின் சோதனை முயற்சியாக 53 மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் விரிவாக்கம் செய்யப்படும். கிராம அளவில் மகிலா சக்தி கேந்திரம் அமைப்பதற்காக 14 லட்சம் அங்கன்வாடி மையங்களுக்கு ரூ 500 கோடி ஒதுக்கப்படும். பிரதமரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்துக்கு ரூ 200 கோடி ஒதுக்கப்படும். இது நடப்பு நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 5 மடங்கு அதிகம். நிர்பயா நிதியத்துக்கு நடப்பு நிதியாண்டைப் போலவே வரும் நிதியாண்டுக்கும் ரூ 500 கோடி ஒதுக்கப்படுகிறது.

**பாதுகாப்பு**

நாட்டின் பாதுகாப்புத் துறைக்கு ரூ 2.74 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 12.78 சதவீதம் தொகையை பாதுகாப்பு துறைக்கு ஒதுக்கியுள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டு பாதுகாப்புத் துறைக்கு 10.5 சதவீதம் அதிகரிக்கப்படும் நிதி ஒதுக்கப்பட்டது. அதேபோல் 2017-2018 ம் ஆண்டுகளுக்கு பாதுகாப்புத்துறைக்கு 10 சதவீதத்துக்கு மேல் நிதி உயர்த்தி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் மத்திய உள்துறையின் கீழ் செயல்படும் 7 துணைநிலை ராணுவப்படைகளுக்கு ரூ 54985 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் சி.ஆர்.பி.எப் படைக்கு மட்டும் ரூ 17868 கோடியும் மத்திய உள்துறையின் கீழ்வரும் டெல்லி போலீஸ் துறைக்கு ரூ5,910 கோடி அளிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக உள்துறைக்கு ரூ 78,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த பட்ஜெட் தொகையிடன் 6.37 சதவீதமாக உள்ளது. விண்வெளி, அணுசக்தி, அறிவியல் தொழில்நுட்பம், புவி அறிவியல் துறைகளுக்கு ஒட்டு மொத்தமாக ரூ 37,435 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சி.பி.ஐக்காக 6950000000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ53 கோடி கூடுதலாகும்.

**கல்வி,திறன், பயிற்சி, வேலைவாய்ப்புகள்**

நாட்டின் வளர்ச்சிக்கு 10 முக்கிய துறைகளில் அரசு கவனம் செலுத்ததிட்ட மிட்டுள்ளது. நாட்டில் இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர வேண்டும். அவர்களுக்கென அதிகமாக வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். கல்வி, திறமைவளர்ப்பு வேலைவாய்ப்பு இவற்றின் மூலம் நாட்டின் 3.5 கோடி இளைஞர்களை ஊற்சாகப்படுத்துவது. 10 அம்சங்களில் ஒன்று. இதற்காக சங்கல்ப் என்ற திட்டம் அறிமுகப்படுத்தபடும் இதற்காக பட்ஜெட்டில் 4,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 3.5 கோடி இளைஞர்களுக்கு சந்தை சார்ந்த பயிற்சிகள் அளிக்கபடும். அதற்காக நாடு முழுவதும் 100 இந்தியா சர்வதேச திறன் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். அத்துடன் வெளிநாட்டு மொழிகளிலும் பயிற்சிகள் அளிக்கப்படும்இதன் மூலம் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெறும் இளைஞர்களுக்கு இந்த மையங்கள் பெரும் உதவியாக இருக்கும்.பிரதான் மந்திரி கவுஷ்ல் கேந்திராக்கள் தற்போது 60 மட்டுமே உள்ளன. இதன் எண்ணிக்கையை 600 மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தஅரசு திட்டமிட்டுள்ளது. தொழிற்துறை மதிப்பை கூட்டும் வகையில் அடுத்தக் கட்டமாக திறமைகளை மேம்படுத்த ரூ 2,200 கோடி திட்டம் (ஸ்டிரைவ்) விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

**மத்திய பட்ஜெட் 2017-18 (ரூ.கோடியில்)**

| | |
|---|---|
| 1. வருவாயின வரவுகள் | 1515771 |
| 2. மூலதன வரவுகள் | 630964 |
| 3. மொத்த வரவுகள் | 2146735 |
| 4. திட்டச்செலவுகள் | 945078 |
| 5. திட்டம் சாரா செலவுகள் | 1201657 |
| 6. வருவாய் இழப்பு | 321163 |
| 7. நிதிசார் இழப்பு | 546532 |
| 8. முதன்மை இழப்பு | 23454 |

**தனிநபர் வருமான வரி செலுத்துவோர்**

| வருவாய்(ரூ) | வரிவீதம் |
|---|---|
| 1. 2.50.000 வரை | வரி இல்லை |
| 2. 2,50.001 முதல் 5,00,000 வரை | 5 சதவீதம் |
| 3. 5,00,000 க்கு மேல் | 20 சதவீதம் |
| 4. 10,00,000 க்கு மேல் | 30 சதவீதம் |

**மூத்த குடிமக்கள்(60 வயது முதல் 80 வயது வரை)**

| வருவாய்(ரூ) | வரிவீதம் |
|---|---|
| 1. 3,00,000வரை | வரிஇல்லை |
| 2. 3,00,000 முதல் 5,00,000 வரை | 5 சதவீதம் |
| 3. 5,00,000 முதல் 10,00,000 வரை | 20 சதவீதம் |
| 4. 10,00,000 க்கு மேல் | 30 சதவீதம் |

**மிக மூத்த குடிமக்கள் ( 80 வயதுக்கு மேற்பட்டவர்கள்)**

| வருவாய்(ரூ) | | வரிவீதம் |
|---|---|---|
| 1. 5,00,000 | | வரி இல்லை |
| 2. 5,00,000 | முதல் | 10,00,000 வரை 20 சதவீதம் |
| 3. 10,00,000 க்கு மேல் | | 30 சதவீதம் |

இத்துடன் ரூ 50 லட்சத்துக்கு மேல் வருவாய் ஈட்டுபவர்களுக்கு 10 சதவீத கூடுதல் வரியும் ரூ.1கோடிக்கு மேல் வருவாய் ஈட்டுபவர்களுக்கு 15 சதவீதம் கூடுதல் வரியும் தொடரும்

**விலை உயரும் மற்றும் குறையும் பொருள்கள்**

மத்திய பட்ஜெட்டில் விதிக்கப்பட்ட வரி காரணமாக புகையிலை உள்ளிட்ட சில பொருட்களின் விலை உயர உள்ளன. அதுபோல சிகரெட், பீடி, மான்மசாலா, செல்லிடப்பேசிகள், எல்.இ.டி.விளக்குகள் அலுமினியதாதுக்கள், பாலிமர், எம்,எஸ் டேப்புகள், வெள்ளி நாணயங்கள் மற்றும் பதக்கங்கள், விலை உயரும் அதே போல் விலை குறையும் பொருட்கள் ஆன்லைன் ரயில் டிக்கெட்கள், வீட்டு உபயோக ரிவர்ஸ்டு ஆஸ்மாசிஸ் தகடுகள், திரவ எரிவாயு, சூரியமின்சக்தித் தகடுகள், காற்றாலை ஜெனரேட்டர், பி.ஓ.எஸ் இயந்திரங்கள், விரல்ரேகை பதிவு இயந்திரங்கள், பாதுகாப்புத்துறை சேவைகளுக்கான முழுகாப்பீடு ரூபாய் 3 லட்சத்துக்குமேல் ரொக்கப் பரிவர்த்தனைக்குத் தடை மற்றும் அரசியல் கட்சிகளின் நன்கொடைக்குக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. மத்திய பட்ஜெட் 2017-2018 பல நல்ல மாற்றங்களுக்கு வித்திட்ட பட்ஜெட் எதிர்காலத்தில் நினைவுப்படுத்தும் வகையில் பட்ஜெட் உள்ளது. இலவச அறிவிப்புகளை வெளியீட்டு தவறான முன்னுதாரணத்தை தேசிய அளவில் ஏற்படுத்தவில்லை. விவசாயிகள் ஏழைகள், வேளாண்மை, கிராமங்கள், ஆகியவற்றை மனதில் வைத்து இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டது. இதன்மூலம் அனைத்து தரப்பினரின் கனவுகளை நிறைவேற்றும் வகையில் உருவாக்கப்பட்ட பட்ஜெட் நாட்டின் வளர்ச்சிக்கும் உதவும் பட்ஜெட்டாக அமைகிறது. என்பதை யாவரும் அறியலாம்.நல்ல மாற்றங்களுக்கு வித்திட்ட பட்ஜெட்டாகவும் வரும் காலங்களில் அனைவரும் பயன்பெறும் பட்ஜெட்டாக இருக்கும்.

அடுத்த மாத இதழில்

# தொழிலாளர் சீர்திருத்தங்கள்

பற்றிய கட்டுரைகள் இடம்பெறும்.

## 2017-18 பட்ஜெட் குறித்து பிரதமர் கருத்து

கடந்த இரண்டரை ஆண்டுகளாக அரசு மேற்கொண்டு வரும் வளர்ச்சி நடவடிக்கைகளை பிரதிபலிப்பதாகவும், இவற்றை மேற் கொள்வதற்கான வேகத்தை முன்னெடுத்துச் செல்லும் கண்ணோட்டத்தைக் கொண்டதாகவும் இந்த பட்ஜெட் உள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பட்ஜெட் என்பது ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். இது புதிய வேலைவாப்புக்களை உருவாக்கி ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதுடன் விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கும்.

வேளாண்மை, கிராம வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் இந்த பட்ஜெட் கண்ணோட்டம் செலுத்தியுள்ளது. முதலீடுகளை அதிகரித்து வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில் அரசின் கண்ணோட்டத்தை இது பிரதிபலிக்கிறது.

2022ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட அரசு இதனைக் கருத்தில் கொண்டே கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி வருகிறது.

நாடு முழுவதும் உள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் முக்கிய ஆதாரங்களாக உள்ளன. இந்த தொழில்கள் உலகளாவிய போட்டிகளை எதிர்கொள்ள முடியாமல் தவிப்பதாகவும், வரிகள் குறைக்கப்பட்டால் சுமார் 90 சதவிகித தொழில்கள் பயனடையும் என்றும் அவர்கள் தரப்பில் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனவே இந்த அரசு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் என்பதற்கான விளக்கத்தில் திருத்தம் செய்து அவர்களுக்கான வரியை 30 சதவிகிதத்தில் இருந்து 25 சதவிகிதமாக குறைத்து அதன் மூலம் அவர்களின் வாய்ப்புகள் பரவலாக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட் என்பது நமது விருப்பங்கள், நமது கனவுகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டிருப்பதுடன் நமது எதிர்காலத்தை வடிவமைக்கிறது. இது நமது புதிய தலைமுறையினர் மற்றும் நமது விவசாயிகளின் எதிர்காலம் ஆகும். எதிர்காலத்துக்கான ஆங்கிலச் சொல்லான FUTUREல் உள்ள F விவசாயிகளையும், U தலித்துகள் உள்ளிட்ட பிந்தங்கியவர்களயும், T வெளிப்படைத் தன்மையையும், U நகர்ப்புற மேம்பாடு, R கிராமப்புற மேம்பாடு மற்றும் E இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பையும் குறிக்கிறது.

## 2017-18 பட்ஜெட் குறித்து நிதியமைச்சர்

பட்ஜெட் தயாரிக்கும் போது எனது ஒட்டுமெத்த அணுகுமுறையும் கிராமப் புறங்களுக்கு, உள்கட்டமைப்புக்கு மற்றும் ஏழ்மை ஒழிப்புக்காக செலவிடுதலில் தான் இருந்தது. எனினும் நிதி கையாள்வதில் சிறந்த தரம் பராமரிக்கப்பட வேண்டும் என்பது என் அணுகுமுறையாகும்.

வளர்ச்சியின் பயன்கள் விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழைகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பெண்கள் மற்றும் இதர பின்னடைந்த நிலையில் உள்ளவர்களை சென்றடைய வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பணியை தொடரும் வகையில், அடுத்த ஆண்டு நமது செயல்திட்டமானது மாற்றம், ஊக்கம் மற்றும் தூய்மை இந்தியாவாக இருக்கும்.

- அரசு நிர்வாகம் மற்றும் நம் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றம்
- சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கு ஊக்கம் அளித்தல், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் கீழ்நிலையில் இருப்பவர்களை ஊக்குவித்து அவர்கள் தங்களால் சாத்தியமானவற்றை செய்ய ஊக்குவித்தல் மற்றும்
- ஊழல், கறுப்புப் பணம், மற்றும் வெளிப்படையற்ற அரசியல் நிதி முறைகளில் இருந்து நம் நாட்டை தூய்மையாக்குதல்

டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவது என்பது ஊழலையும் கறுப்பு பணத்தையும் ஒழித்து இந்த நாட்டைத் தூமையாக்கும் அரசின் யுக்தியில் ஒருங்கிணைந்த பகுதியாகும்.




# திட்டம்

**புத்தக வெளியீட்டு பிரிவு**
**விளம்பர கட்டண விகிதம் (யோஜனா தமிழ்)**
(மார்ச் 15, 2016 முதல்)

| Sl. No | Name of Jourual | Inside Text Page | | | | Back Cover | 2nd Cover Page | 3rd Cover Page |
|---|---|---|---|---|---|---|---|---|
| | THITTAM | Colour (Full Page) | Colour (Half Page) | Black & White (Full Page) | Black & White (Half Page) | Full Page | Full Page Full Page | Full Page Full Page |
| **1** | **Yojana Tamil** | **13000** | **8000** | **10000** | **6000** | **20000** | **17000** | **15000** |
| Mechanical Details - Yojana / Tamil | | | | | | | | |
| Overall Size 19.5 x 27 cm | | | | | | | | |
| Print Area 17 x 23 cm | | | | | | | | |
| Advertisement material - Artpull / Artwork / CD / Positives | | | | | | | | |

**திட்டம் இதழில் விளம்பரம் செய்வதற்கு திட்டம் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

## திட்டம்

**சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, சென்னை – 600 006, தொலைபேசி : 044 – 2827 2382**
**மின்னஞ்சல்** : editorthittam@yahoo.co.in